ffice of
ooks S
22 MAR 1955
CEYLON

வாரப் பதிப்புவிலை சதம் 10

சுதந்திரன்

ESUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

USHA உஷா

கை மெஷின் ரூ. 225-00.
டிரெடல் ரூ. 315-00.
போல்டிங் ரூ. 340-00.

சோல் ஏஜண்ட்: G. H. REIMOO,
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060.

புத்தகம் 8 ஜய ஆடி பங்குனி மீ 7ஆ [20-3-55] ஆயிற்றுக்கிழமை ரஜப் பிறை 24 இதழ் 42

சிங்களத்தில் மட்டுந்தான் உயர்தரக் கல்வியா?

தமிழுக்கு இரண்டாவது மொழியென்ற அந்தஸ்து கூட கிடைப்பது துர்லபம்

பெரும்பான்மை வாக்குகளால் உயர்தரக் கல்வி கமிஷன் தீர்மானிக்கலாம்

(சுதந்திரன் அரசியல் நிருபர்)

சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் அரசகரும மொழியாகும் என்று ஆட்சியாளர் தமிழ் மக்களுக்கு ஆசைவார்த்தைகூறி வருகிறார்கள். அதே நேரத்தில் உயர்தரக் கல்விக் கமிஷன் அங்கத்தவர்களில் பெரும்பான்மையோர் சிங்களம் மட்டுந்தான் உயர்தரக் கல்வி போதனா மொழியாக இருக்கவேண்டும் என்றுவற்புறுத்துவதாகத் தெரிய வருகிறது. அவர்கள் தமிழ் இரண்டாவது மொழியாகத்தானும் இருக்கக் கூடாதென்றும் சிங்களம் ஒன்றே உயர்தரக் கல்விப் போதனா மொழியாகவும் இலங்கையின் அரசகரும மொழியாகவும் ஆக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்ய விரும்புவதாக ஒரு நம்பகமான செய்தி சுதந்திரனுக்கு கிடைத்திருக்கிறது.

இலங்கையின் ஆட்சி மொழியாக இரண்டு பாஷைகள் பிடத் தக்கவை.

இருக்க வேண்டும் என்ற வெகு விரைவில் மீண்டும் கோட்பாட்டிலிருந்து நாடு கூடும் உயர்தாக்கல்விக் கமி உடனடியாக விடுபட்டுக் ஷன், சிங்களத்தை மட்டுமே கொள்ள வேண்டும் என்று நாட்டின் உயர்தரக் கல்விப் இந்த பெரும்பான்மை அங் போதனா முறையாக இருக்க கத்தவர்கள் தெரிவித்திருக் வேண்டும் என்று தீர்மானிக் கிறார்கள் கும் என்று நம்பப்படுகிறது.

அதோடு நாட்டின் அரச கரும மொழிபற்றியும் அரசாங்கம் உடனடியான இறுதித் தீர்மானத்திற்கு வர வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

சென்ற வாரம் நடைபெற்ற உயர்தரக் கல்வி கமிஷன் கூட்டத்தில் 4-1 அங்கத்தவர்கள் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்கள். இந்த கமிஷன் உயர்தரக் கல்வி முறையை புனர் அமைப்பு செய்வதற்காகநியமிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே பாஷையாக பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையிலேயே பள்ளிக்கூடங்களின் பாடத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் சிபார்சு செய்யுமாறு மேற்படி பெரும்பான்மை அங்கத்தவர்கள் வற்புறுத்தினர்.

இந்தக் கருத்தை எதிர்த்து கமிஷன் அங்கத்தவர்களில் ஒருவரேதான் குரல் எழுப்பினர்.

சிங்களத்தை மட்டும் நாட்டின் ஒரே ஒரு பாஷையாக்குவது, இந்த நாட்டிலுள்ள முக்கிய சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான ஓர வஞ்சகம் என்று இவர் தீர்மானத்தை எதிர்த்து வாதாடினர். இது சம்பந்தமாக ஒருமுடிவான தீர்மானம் எடுப்பதை ஒத்திப் போட வேண்டும் என்று வாதாடி அதில்இவர் வெற்றி பெற்றார் என்பதும், கமிஷன் அங்கத்தவர்களில் ஒருவரும் இந்தக் கூட்டத்தில்

தேவை

சுதந்திரனில் தொடர் கதையாகப் பிரசுரிப்பதற்கு ஒரு முழு நீள நாவல் தேவை இலங்கையைப் பின்னணியாகக் கொண்டு சரித்திரம் அல்லது சமூகம் சம்பந்தப்பட்ட கதைகள் வரவேற்கப்படும். சமூகக் கதையாயிருப்பின் துப்பறியும் கதையாயிருப்பது நன்று.

பிரசுரத்திற் கெடுத்துக்கொள்ளப்படும் கதைக்கு ஆசிரியரின் உசிதம்போல் சன்மான மளிக்கப்படும்.

—ஆசிரியர்

இந்த வருடம் அரசாங்கம் அதிகப்படி சாராயம் வாங்கும்

யு. என் பி. மகாநாட்டின் மதுவிலக்குத் தீர்மானம் அமுலாகும் லட்சணம்

இது மீண்டும் ஆளும் கட்சிக்குள் நெருக்கடியை உண்டுபண்ணலாம்

(நமது நிருபர்)

சென்ற ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டில் 90000 முழு கலன் அதிக சாராயத்தை இருப்பு வைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

சமீபத்தில் நடந்த ஆட்சிக் கட்சியான யூ. என். பி. யின் வருடாந்திர மகாநாட்டில் மதுவிலக்கு கொண்டு வருவதுபற்றி ஒருபுறம் தீர்மானம் எடுத்துவிட்டு மறுபுறம் நடைமுறையில் சாராயத்தின் இருப்பை அதிகரிக்க ஆட்சியாளர் முயல்கின்றனர்.

1954ல் 80000 முழுகலன் சாராயம் வினியோகம் செய்த 9 தனிப்பட்ட சாராய வடிகாரர்களை, இந்த வருடம் 90000 கலன்கள் சாராயம் சப்ளை செய்யுமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் முழு கலன் சாராயத்திற்கு ரூபா 10 தருவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

சாராய வடிப்பு வட்டாரங்களிலிருந்து நமக்குக் கிடைத்த விபரங்களிலிருந்து இந்த ஒவ்வொரு சாராய வடிப்போர்களும் மொத்தம் 10 ஆயிரம் முழு கலன் சாராயத்திற்கு மேல் தயார் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ள தொகையிலும் பார்க்க அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த செய்தி யூ. என். பி. வட்டாரத்தில் அதிருப்தியை அதிகரித்திருப்பதாகத் தெரிய வருகிறது. யூ. என். பி. மகாநாட்டில் தமது பத

(9-ம் பக்கம் பார்க்க)

பள்ளிக்கூடங்கள் 'அரசியல் குகை' களாக மாறிவருகின்றனவாம்

கல்வி இலாகாவுக்கு அதிகாரிகளின் முறையீடு

சில பள்ளிக்கூடங்கள் "அரசியல் குகைகளாக" மாறிக்கொண்டிருக்கிறது என்று கல்வி இலாகா அதிகாரிகள் கல்வி மந்திரி இலாகாவுக்கு புகார் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பள்ளிக்கூடங்கள் அரசியல் மேடைகளாக மாறிக் கொண்டிருப்பதால் கல்வியின் தரம் குறைந்துள்ளதாக இவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

சில கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கள் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் போட்டியிட்டால், தமது தேர்தல் வேலைகளுக்கு மேல் வகுப்பு மாணவர்களை பயன் படுத்துவதாகவும் இவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

நாட்டின் கல்வித் தரம் குறைவதற்கு மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதுதான் காரணம் என்று கூறப்படும் இந்தப் புகார்பற்றி மாணவர்கள் ஸ்தாபனம் ஒன்றின் தலைவர்களிலொருவரை நமது நிருபர் கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதிலிறுத்தார்.

"நாட்டின் கல்வித்தரம் குறைந்து வருகிறது என்பது உண்மையே. மாணவர்களுக்கு போதிய உற்சாகமும், எதிர் காலத்தில் நம்பிக்கை யேற்றுவதை எதிர்த்துஅவர்கள் இயல்பாகவே கிளர்ந்தெழுகிறார்கள். இது அரசியல் விழிப்பை அவர்களுக்களிக்கிறது.

"அத்துடன் புரட்சி இயக்கத்தில் மாணவர்கள் பங்கு பற்றக் கூடாது என்று இவர்கள் ஒப்பாரி வைக்கிறார்களே. அமரத்துவம்பெற்ற பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்க விடுதலைப்போர், பிரிட்டனின் தொழில் புரட்சி, இந்திய விடுதலைப் போராட்டம் இவற்றிலெல்லாம் மாணவர்கள் தானே முன்னணி வகுத்தார்கள். விழிப்புப்பெற்ற மாணவர் உலகம் தானே உலகம் போற்றும் ஜவஹரை இந்தியவிடுதலைப் போருக்கும், உலகத்திற்கு மளித்தது. எனவே இந்தக் கூப்பாடுகள் எல்லாம் தமது ஜனவிரோதக் கொள்கைகளை மூடி மறைக்க ஆட்சியினர் கையாளும் கவசங்கள் அல்லாது வேறென்றுமல்ல. இதுபற்றி மாணவர்களாகிய நாம் கவலைப்படுவதற்கில்லை'.

மூலம்

சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மற மறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குண மளிக்கும்.

காலங்கடந்தாமல்

உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

கேட்லாக் இலவம்!

வெல்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் மலர்ச் செண்டுகளில் வைத்து

அழகு பார்க்க உள்ள பூக் கொத்துக்களல்ல

சமுதாயத் தோட்டத்திலே விளைய வேண்டிய தீஞ்சுவைக் கனிகள் அவை

பாலர்களின் பண்புள்ள எதிர்காலத்திற்கு பெற்றோர்-ஆசிரியர் மட்டுமல்ல சமுதாயமே பொறுப்பு

மாணவரைத் துட்டராக்கும் கெட்ட சமூக அமைப்பை மாற்றுது வெறுமனே மாரடிப்பதில் பயனில்லை

நல்ல வாழ்க்கைச் சூழ் நிலையை சமைப்பதே நல்ல குழந்தைகளை உருவாக்க உதவும்

கே. கே. நாயர் எம். ஏ.

நம் குழந்தைகளின் கல்வியிலும், பழக்க வழக்கங்களிலும் மற்றுமுள்ள வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும், பெற்றோர்கள், பெரியோர்கள், உறவினர்கள் போன்ற நிலைமைகளில் நம் முடைய கடமையை நாம் சரிவர உணர்ந்து நடப்பது கிடையாது. குடும்பத்தில் குழந்தைகள் வளர்ந்து வருகிறார்களென்றும், அவர்கள் குடும்ப அங்கத்தவர்களென்றும், அவர்களின் வளர்ச்சியில் குடும்ப முதல்வர்கள் என்பதினால் பெரும் பொறுப்பு உண்டு என்பதையும் நாம் எப்பொழுதும் மறந்து விடுவது வழக்கம். இந்த பொறுப்பு வெறும் தார்மீக மான தொன்றுமட்டுமல்ல. ஆனால் அது ஒவ்வொரு குடும்ப அங்கத்தவரினதும், சமுதாயத்தினதும், நாட்டினதும் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒரு சேவையாகும்

ஒரு தனி நபருடையமுயற்சியினால் மட்டும் ஒரு குழந்தையின் கல்வி பரிபூர்ண வெற்றியுடன் முடியுமென்று நாம் எண்ணுவது சரியல்ல. உபாத்தியாயர் பட்டதாரியோ உலக பரிச்சயம் நன்கு தேடியவராகவே இருக்கலாம். என்றாலும் சமுதாயத்தின் ஒரு அங்கத்தவனுக்கு வேண்டிய சகல அந்தஸ்துக்களும் உடைய ஒருவனுக வளர அக்குழந்தைக்கு ஒரு நபருடையதோ அல்லது ஒரு சிலரினுடைய தொடர்பு மட்டுமிருந்தால் போதாது. காரணம் கல்வியென்பது சமூக அடிப்படைகளோடு கூடிய ஒரு செயலாகும். இந்த வேலையை சாதிக்க பல ஏதுக்களுண்டு. மக்கள், பொருட்கள் போன்ற பல இனங்கள் இந்த வேலையை சாதிக்கிறது. இந்தப் பிரிவுகளில் மிக முக்கியமானது மக்கள்தானென்பதை நாம் மறக்கக் கூடாது. குழந்தை பழகக் கூடிய ஆட்களில் மிக முக்கியமானவர்கள் பெற்றோர்களும் உபாத்தியாயர்களுமே. ஆனால் குழந்தையைச் சுற்றியுள்ள பற்பல யதார்த்தங்களும் சிக்கல் நிறைந்த அனுபவங்களும் அவனுடைய நோக்கங்களை மாற்றுவதோடு அவனுடைய மானசீக பொது வளர்ச்சியோடு அவனுடைய அபிப்பிராயங்களும் அபிலாஷைகளும் வளர்த்துக் கொண்டே வருகிறது. ஆகவே ஒரு குழந்தையின் வளர்ச்சியில் அவனுடைய சூழ்நிலை மிக மிக முக்கியமானதோர் பங்கை வகிக்கிறது.

சில பெற்றோர்கள் அவர்களின் குழந்தைகளை கசப்பான வாழ்க்கையனுபவங்களோடு தொடர்பில்லாது செய்ய முயற்சியெடுப்பது வழக்கம். வாழ்வின் மேடு பள்ளங்கள் குழந்தைகளின் நோக்கங்களை பாதிக்குமென்ற அச்சமே இதற்கு காரணமாயிருக்கலாம். ஆகவே பணமுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இயன்ற சுகத்தை அளிக்க முயலுவார்கள். இந்தச் சூழ் நிலையில் தம் குழந்தைகளை வளர்க்க நம் நாட்டில் எத்தனை பேரால் முடியும்? இவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இப்படியாக குழந்தைகளை வீட்டில் வைத்து அவர்களின் சுபாவத்தில் மாற்றம்காண முடியும்என்ற அபிப்பிராயம் சரியானதல்ல. சமூக அனுபவங்களையும், உணர்வுகளையும், போதிய அறிவையும்பெற அப்படி வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு முடியாது. குழந்தைகளை வீட்டைவிட்டு வெளியேற சம்மதிக்காது வீட்டினுள்ளே வைத்து அன்பைச் சொரிந்தால் அது அவர்களுக்கு அருவருப்பை உண்டாக்குவதிலேயே முடியும். இப்படி வீடாகிய சிறையில் இருந்து சுதந்திரம்பெற அவர்கள் முயற்சிப்பார்கள். இது ஈடேறுவிடில் தோல்வி மனப்பான்மையும்—அடிமைச் சுபாவமும் அவர்களை மந்தபுத்தியுள்ளவர்களாக்கிவிடும்

மனித சுபாவத்தின் சீர் திருத்தத்தில் வீட்டிலும் வெளியிலுமுள்ள சுகதுக்கங்கள் கலந்த வாழ்வில் பெரிய தோர் பங்கை வகிக்கிறது. குழந்தைகளை ''தேவ தூதர்கள்'' எனக் கூறுவதுண்டு. சிறுவர்களை ''வாழ்க்கை புஷ்பங்க''ளென்றும் சொல்வதுண்டு. குழந்தைகளை நாம் இப்படியேன் அழைக்கிறோம் என்பதைப்பற்றி நாம் சிறிதும் ஆழ்ந்து சிந்திக்க முயன்றது கிடையாது. குழந்தைகள் அழகான மலர்கள் எனக் கூறும்பொழுது ஒரு விஷயத்தை நாம் அவதானிக்கிறோம். அதாவது அவர்களைப் பார்த்து ஆனந்தித்துப் புளகாங்கிதமடையவே நமக்கு உரிமையிருக்கிறது. அவர்கள் கண்ணீர் வடிக்கக்கூடிய ஒரு செய்கையும் செய்யக் கூடாது. மலர்களை தாலாட்டி, மணத்து அவையின் அழகைரசிப்பதுஅழகு கணப் பொழுதல்லவா எனநினைத்து பெருமூச்சு விடுவது—இவைகளைச் செய்யவே நமக்குரிமையிருக்கிறது என நினைக்கிறோம். அதாவது அந்த பூக்களை ஏதோ ஓர் கவர்ச்சிப் பொருட்களாக மட்டுமே நாம் கருதுகிறோம். அழகை ரசிக்கும் விதத்தில் ஒருவகை பிழையான கருத்தை நாம் கொண்டுள்ளோம். குழந்தைகள் 'ஜீவித புஷ்பங்கள்' தான். ஆனால் இந்த 'வாழ்க்கைமலர்கள்' பூச்செண்டுகளில்வைத்து மேஜையை அலங்கரிப்பதற்குள்ளவைகளல்ல. காரணம் அந்த மலர்கள் மலர்களென்ற நிலையில் என்றென்றும் தொடர்ந்து இருக்கப் போபவை அல்ல. (சாதாரண பூக்களுக்கூட அப்படி முடியாதல்லவா?) குழந்தைகளை புஷ்பங்களென்று கூறும் பொழுது—அதன் உயமான அர்த்தத்தில் காண்பதுதான் தவறு. வாழ்க்கைத் தோப்பில் விரியும் பூக்கள்தான் குழந்தைகளென்றாலும் வாஸ்தவத்தில் அவை சிறந்த பழங்களாக உருப்பெற வேண்டிய மொட்டுகளாகும். இதழ் வீழ்ந்து கணப் பொழுதில் கருகி மறைவதற்கான மலர்களல்ல. மலர்களில் நின்றுண்டாகும் கனிகள் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவையின் உயர்ந்த பண்புகளை நிலைநாட்டி வாழ்க்கை விருட்சங்களாக தழைத்து வளர்வதற்காக உள்ளவையாகும்.

வாழ்வின் பலன்தான்குழந்தைகள். அவ்வளவு விலையுயர்ந்த பழங்களை அளிக்கும் ஒரு தோட்டம்தான் நமது சமூகம். அப்படிப்பட்ட ஒரு சமூகத்திற்காக உழைப்பதில் நாம் தனியானதோர் இன்பத்தையனுபவிக்கலாம். அந்த [illegible] தோட்டத்தை [illegible] நீர் ஊற்றுதல், மண்வெட்டிப்போடல் விஷக் கிருமிகளையும் புளுக்களையும் அகற்றுதல் இப்படியாக பலதையும் நாம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு வேலை செய்வதுதான் நமது கடமை. அன்றி செடிகளின் மீது பூத்துக்குலுங்கும் மலர்களைக்கண்டு மயங்குவதல்ல. தோட்டத்தில் வேலை செய்யும் பொழுது புஷ்பங்கள் விரிந்து அதிலிருந்து கனிகள் உண்டாக நாம் ஆசைப்பட வேண்டும். பூக்கள்மீது புழுபூச்சிகள் உட்காரும்பொழுது கொப்புகளை ஆட்டி அவைகளை விரட்டுவதில்பின் நிற்கக் கூடாது. செடி சிறிது குலுங்கட்டும், பூக்களும் அந்த அசைவை சிறிது அனுபவிக்கட்டும், அதில் அவ்வளவு மனம் வருந்துவதற்கொன்றுமில்லை.

குழந்தைகளின் உலகத்தை இனிக்கும் கனிகள் விளையும் ஒரு பழத்தோட்டத்தோடு ஒப்பிடுவதுதான் நல்லது. மண்ணும், வாயுவும், சூரிய வெப்பமும், தாவரங்களின் வளர்ச்சிக்கு எவ்வளவு உதவுகின்றனவோஅதே போல காற்றும் கொடுங் காற்றும் செடியின் கொப்புகளுக்கு சக்தியும் சகிப்புத் தன்மையும் கொடுத்துதவுகிறதுஎன்பதை நாம் மறந்து விடக் கூடாது. பலவிதப் பட்ட சூழ் நிலையில் தான் செடி வளருகிறது என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

தோட்டக்காரனுக்கு இந்தச் செடிகளின் வளர்ச்சியில் என்னசெய்ய முடியும், என்ன நன்கொடைதான் அதற்காக அவனுல் அளிக்க முடியும்? பழம் முற்றி பழுத்து விழும்வரை பொறுமையுடன் காத்திருப்பதா? இல்லை. மொட்டூக்கும் காய் பழமாகும், எனவே இதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை என்ற சோம்பல் நிறைந்த ஒரு மனப்பான்மை மக்களின் மனதில் வளர்ந்த காலமிருந்தது. ஆனால் அது கற்கால மனிதனில் மட்டுமேயிருந்தது. இயற்கையை புத்தி பூர்வமாக நெருங்கவும், அவதானித்துப் படிக்கவும், மாற்றங்களை உண்டாக்கவும் மனிதன் தொடங்கி காலம் பல லட்சோப லட்ச ஆண்டுகளாகிவிட்டது. மனிதன் இயற்கையின் அடிமை என்ற நிலைமாறி இயற்கை மனிதனின் அடிமை என்ற நிலையாகிக்கொண்டு வருகிறதல்லவா? இப்படி வல்லமை படைத்த மனிதனுக்கு, ஏன் அவனின் வல்லமையை எல்லாத் துறைகளிலும் செலுத்தக் கூடாது. இதுதான் கேள்வி.

''கெட்ட பையன்களுடன் கூடி பிள்ளைகள் கெட்டுப் போச்சு'' என நாம் கூறுவது வழக்கம். ''பையன் நல்ல பிள்ளையாயிருந்தான். கெட்ட பையன்களுடன் சேர்ந்து கெட்டுப்போய்விட்டான்'' என நாம் அலாய்ப்பதுண்டு பிள்ளையின் சுபாவத்தில் வந்துள்ள அபாயகரமான மாற்றத்திற்கு காரணம் அந்த கெட்டபிள்ளைகளின் சகவாசம் மட்டுமல்ல என்பதை நாம் உணர மறந்துவிடுகிறோம். அவன் அந்த கெட்டபிள்ளைகளின் தரத்திற்குத் தாழ்த்தப்பட்டதற்கு காரண கர்த்தாக்கள் பெற்றோர்களும்தான். பிள்ளை ஒரு நிமிஷமும் கெட்ட பிள்ளைகளுடன் சேர்ந்து நடக்கவிரும்பாது. துஷ்டப்பையன்களின் மனோபாவம் பிள்ளையின் மனதில் ஊறி கெட்ட பையன்களின் நோக்கங்களோடு இவனின் நோக்கங்களும் ஒன்றுபட்டதும் அவர்களோடு தொடர்பு கொள்ள இவனிடமுள்ள சுபாவம் மற்றும் அவனது வீட்டிலுள்ள சூழ் நிலைகளே காரணம். வீட்டிலுள்ள சூழ்நிலை அவனும் அந்தப் பையன்களில் ஒருவன் என்ற ஒரு உணர்வை அவனில் உண்டாக்குகிறது. அதுதான் அவனும் கெட்ட பையனுக மாறுவதற்குக் காரணம்.

குடும்ப சூழ் நிலைகள் சரியாக அமைந்தால் குழந்தைகளும் சன்மார்க்கத்தில் வளருமென்பது திண்ணம். வீட்டில் உண்டாகும் சூழ் நிலை குடும்ப அங்கத்தவர்களின் சமுதாய அறிவை ஒத்திருக்கும். அந்தந்த கால கட்டத்தில் மிகவும் முக்கியமாகக் கருதப்படுவதும் அங்கீகாரம் பெற்றதுமான சமூக நியதியின் வெளிச்சத்தில் அந்த நியதிக்கு தக்கவாறு மற்றைய சமூக ஸ்தாபனங்களைப் போலவே நாம் கல்வி ஸ்தாபனத்தையும் மாற்றியமைக்க வேண்டும். அன்றி அர்த்தமற்ற சில நியதிகளையும்—கெட்டு நாறும் சமுதாய அமைப்பு—சூழ் நிலையையும் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு புத்தி போதிப்பதன் மூலம் எல்லாம் சரியாகிவிடும் என்று நாம் மனப்பால் குடிப்பதனால் தான் எதுவும் உருப்படியாக சாதிக்க முடியாமலுள்ளது. குழந்தைகளை துஷ்டர்களாக, கீழ்த்தர உணர்ச்சியுள்ளவர்களாக, கொலைகாரர்களாக, மற்றும் பாபிகளாக மாற்றும் ஒரு சமுதாய சூழ் நிலையை ஒழித்துக் கட்டாது, ''குழந்தைகள் கெட்டுப்போய் விட்டார்கள்'' என்று மாரடிப்பது வெறும் வெட்டி வேலையே. எனவே குழந்தைகளின் எதிர்காலத்தில் உண்மையான நாட்டமுள்ளவர்கள் குழந்தைகள் கெட்டுப்போவதற்கான சமுதாயக் காரணங்களை அறிந்து, அந்த சமுதாய சூழ் நிலையை மாற்ற முயலவேண்டும்.

—''ஜெயகேரளம்''
தமிழாக்கம்: தாமோதரன்

பகுத்தறிவு சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கத்தின் மாதாந்திரப் பொதுக்கூட்டம் சென்ற 6-3-55ல் சங்க அலுவலகத்தில் கூடியது.

அவ்வமயம் வரவு செலவு கணக்குகள் அறிக்கை முதலியன செயலாளரால் வாசிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றன.

பின்னர் நடப்பு வருடத்திற்கு கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ். மாதவன் செயலாளர் திரு வீ. ரெ. மாணிக்கம் பொருளாளர் திரு ஏ. வேலு. செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் ''ஆனந்தா தைலத்தை'' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சிவநாதன், கொச்சிக்கடை

கே: சட்டம் மக்களுக்காகவா, மக்கள் சட்டத்துக்காகவா?

ப: இரண்டும் இல்லை. சட்டம் சட்டவாதிகளின் பிழைப்புக்காக.

கே: ஆண்கள் பெண்களாக மாறுவதாயின் கிழவர்கள் ஏன் குமரர்களாக மாறுவதில்லை?

ப: ஏன் மாறுவதில்லை. ச.வெ.ரா. மாறிவிட்டாரே!

ஃ

சந்திரா, புசல்லாவ

கே: என்ன செய்தால் மனிதன் முன்வரிசைக்கு வரலாம்?

ப: றிசேர்வ்ட் டிக்கட் எடுத்தால் முன்வரிசைக்கு வரலாம்.

கே: கன்னிக்கும் கவிதைக்கும் என்ன ஒற்றுமை?

ப: இரண்டின் உள்ளத்தையும் ரஸனை உள்ளவரால் தான் உணர முடியும்.

ஃ

தி. சி. கந்தையா, காலி

கே: என்னுடைய மனைவி என்னுடன் வரும்போது பிற புருஷர்களைப் பார்க்காமல் குனிந்து வருவதன் காரணம் என்ன?

ப: நீர் இல்லாதபோது நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தால் கழுத்து வலி யெடுத்திருக்கலாம்.

ஃ

அ. ஜெயம்பெருமாள், உடப்பு

கே: சுவர்க்கலோகம் போவதற்கு எங்கே அனுமதிச் சீட்டுப் பெறலாம்?

ப: மூன்று இடங்களில் பெறலாம். காதலியிடம் பெறலாம், பாதிரியாரிடம் பெறலாம், ஹொலிடே ஒன் ஐஸ்ஸில் பெறலாம்!

கே: ஆணின் மூளைக்கும் பெண்ணின் மூளைக்கும் வித்தியாசம் என்ன?

ப: ஒன்று நேர் வழியிலும் மற்றொன்று குறுக்கு வழியிலும் வேலை செய்ய வல்லது.

ஃ

வா. கி. அ. அப்துல் கரீம் கொழும்பு

கே: குயுக்தியாரே, உம்மைப் கடிப்பித்து இவ்வளவு அறிஞராக்கிய ஆசிரியர் யாரோ?

ப: ஸ்ரீமான் உலக நாதர்!

ஃ

செல்வி ம. இரத்தினம்மா மானிப்பாய்

கே: குயுக்தியாரே உமக்கு ஆடத் தெரியுமா? பாடத் தெரியுமா?

ப: சீட்டு ஆடத் தெரியும், ஆசிரியரோடுஒத்துப் பாடத் தெரியும்!

ஃ

கு. யோகராசா, பூநகரி

கே: செவிடனுக்கு ரேடியோ எதைப் போன்றது?

ப: யு. என். பிக்கு எதிர்க் கட்சியைப் போன்றது.

அ. த. கணேசன், யாழ்ப்பாணம்

கே: பெண்களுக்கு புற அலங்காரம் அவசியமா?

ப: அக அலங்காரம் இருந்தால் அவசியமில்லை.

ஃ

பி. எம். லிங்கம், கரடியன்ஆறு

கே: உலகத்தில் பெரிய முட்டாள் யார்?

ப: தன்னைப் பெரிய அறிஞனாக எண்ணிக் கொண்டிருப்பவன்தான்.

கே: பணம் இல்லாதவன் பிணம். முதுகெலும்பு இல்லாதவன்.....?

ப: யு. என். பி.யில் ஒத்துழைப்புத் தமிழன்.

ஃ

பெ. வேலு, அபுகஸ்தலாவ

கே: குயுக்தியாரே, உமக்குப் பிடித்தமான 'நார்' எது? மனிதனைச் சரியான பாதையில் கட்டி இழுத்துச் செல்லக்கூடிய நாராயிருக்க வேண்டும்.

ப: திருவள்ளுவ நார்.

ஃ

ஆர். பூரணனந்தன், யாழ்ப்பாணம்

கே: விபசாரிகள் எப்படிப் பட்டவர்கள்?

ப: இவர்களில் இரண்டு வகையுண்டு. வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக விபசாரம் புரிபவர்கள். தேகப் பசியைப் போக்குவதற்காக விபசாரம் புரிபவர்கள். முதல் கூறியவர்கள் ஏழைகளாய் இருப்பார்கள். இவர்கள் சமூகத்தின் அனுதாபத்துக்குரியவர்கள். பின்னவர் பெரிய இடத்து நாரீ மணிகளாய் இருப்பார்கள். இவர்கள் துப்பாக்கிக்கு இரையாகவேண்டியவர்கள்.

கே: தலையிடி எதனால் ஏற்படுகிறது?

ப: இலங்கை வானொலியினால்!

ஃ

எஸ். புவிராஜசிங்கம், மட்டக்களப்பு

கே: இந்த உலகத்தில் தங்களுக்கு ஆச்சரியம் தரும் பொருள் யாது?

ப: பணம்! அடடா அது என்னவெல்லாம்செய்கிறது!

ஃ

கே. மயில்வாகனம், செங்கலடி

கே: நான் உம்முடைய மகளை விவாகம் செய்ய யோசித்திருக்கிறேன். உங்கள் பதில்.....?

ப: ரொம்ப நல்ல யோசனை. அப்படி யோசித்துக் கொண்டேயிரும்.

ஃ

ஏ. ஆர். எம். அபூபக்கர் அம்பாந்தோட்டை

கே: ஆதியும் அந்தமும் இல்லாத பொருள் எது?

ப: வட்டம்.

கே: குயுக்தியாரின் உற்ற தோழர்கள் யார்?

ப: பேனு, மைப்புட்டி, நேயர்களின் போஸ்ட்கார்ட் குவியல்!

ஃ

செல்வி சைவமணி, கொழும்பு

கே: ஸ்ரீமதி குயுக்தியார் எங்கள் பொருட்களைத் திருடுகிறார். நாங்கள் என்ன செய்வது?

ப: நான்தான் என்ன செய்யட்டும்? அவள் என் இதயத்தைக்கூட அல்லவா எப்போதோ திருடிவிட்டாள்.

கே: ஐயா, குயுக்தியாரே உமது மனைவிக்கும் உமக்கும் எப்பொழுதாவது சண்டை நடந்ததுண்டா?

ப: எப்பொழுதும் நடக்கும் ஒரு விஷயத்தை எப்போதாவது என்று கேட்கிறீர்களே, அம்மணி.

★ கே: தற்போதையபெண்களின் தலையலங்காரத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: குதிரைகள் தங்கள் வாலின் 'கொப்பி ரைட்' திருடப்பட்டு விட்டதே எனறு மானநஷ்ட வழக்குப் போடாமல் இருக்கவேண்டுமே என்று நினைக்கிறேன்.

ஃ

எம். எம். நூருல் ஹக் சாஹிப் கொழும்பு.

கே: பெண்களின் வாயை மலர் வாய் என்றும், கனி வாய் என்றும், அமுத வாய் என்றும் புலவர்கள் வர்ணிக்கிறார்கள். நீங்கள் இரண்டே சொற்களில் புதுமையாக வர்ணியுங்கள் பார்க்கலாம்.

ப: இரண்டே சொல்தானே? இதோ-ஒலி பெருக்கி.

★ இவ்வாரம் ரூபா 3-00 பரிசு பெற்றவர்

பரிசு ரூபா 3

யாரும் கேள்விகள் அனுப்பலாம் ஆனால் கேள்விகள் போஸ்ட்கார்ட்டில் மட்டுமே எழுதப் படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக் கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ. 3-00 பரிசு வழங்கப்படும்.

பெண்களுக்கு ஓர் மகாஞ்சீவி

கெர்ப்பத்தைத் தடுக்கும் ஆறுவித நோய்களையும் அகற்றி, சூதக வயிற்று வலி, வாய்வு, தலைவலி, மயக்கம், ஏப்பம், படபடப்பு, திரேகம் பூரித்தல், குத்தல், உழைவு, சோம்பல், ஆயாசம், பலவீனம், உஷ்ணம், விலக்கம் மிகுதியாகப் போகுதல், கொஞ்சம் கண்டு மறைதல் போன்ற சகல வியாதிகளையும் போக்கவல்லது

கெர்ப்பக்கோள் நிவாரணி

சிறியது—ரூ. 3-75.
பெரிய புட்டி விலை ரூ. 7-00
வி.பி.பி. செலவு வேறு.

சென்ற் மேரி வைத்தியசாலை,
201, செட்டியார் தெரு,
கொழும்பு.

வேல் தைலம்

இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய சமய சஞ்சீவி: தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக் கட்டு, சுளுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.

உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது.

புட்டி 1-க்கு ரூ. 1-25 தபால் செலவு வேறு.

இலங்கை ஏஜண்டுகள்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

சுதந்திரன் நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்

எந்த ஒரு காரியத்தையும் தன் எஜமானர்களான வாசக நேயர்களையும், மற்றும் வினியோகஸ்தர்களையும் (ஏஜண்டுகள்), விளம்பரதாரர்களையும் கலந்து கொண்டு செய்யும் ஒரு பத்திரிகை இலங்கையில் உண்டானால், அது சுதந்திரன் தான் என்பதை யாவரும் அறிவார்கள்.

இந்த வழக்கத்திற்கேற்ப, அடுத்த வார சுதந்திரன் இதழில் ஒரு கேள்விக் கொத்தை பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். சுதந்திரன் நேயர்களுக்கு வேண்டியவை எவை? வேண்டாதவை எவை? சுதந்திரனில் செய்யவேண்டிய திருத்தங்கள் யாவை? சேர்க்க வேண்டிய புதிய அம்சங்கள் என்ன? விடவேண்டியவை என்ன? என்பனவற்றையும், நேயர்களின் ஏனைய அபிப்பிராயங்களையும் இந்த கேள்விக் கொத்தின்மூலம் - வாக்கெடுப்பின்மூலம்—திரட்டித் தெரிந்துகொண்டு, அதற்கேற்றாற்போல் நேயர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதுதான் இந்தப் புதிய திட்டத்தின் நோக்கம்.

நாம் தருவதையெல்லாம் நேயர்கள் படித்துத் தீரவேண்டியதுதான் என்ற எதேச்சாதிகாரக் கொள்கை சுதந்திரனுக்கு கிடையாது. நேயர்கள் விரும்புவதை நாம் கொடுக்க வேண்டும் என்பதே சுதந்திரனுடைய ஜனநாயகக் கொள்கையாகும். எனவேதான் நேயர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதற்கு இந்த அரிய வழியை மேற்கொள்கிறோம்.

நமது நோக்கமும், அதனால் நேயர்களின் நோக்கமும் நிறைவேற வாசகர்கள், வினியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் ஆகிய யாவருடைய ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் இந்த வகையில் தேவை. நேயர்கள் இவற்றை மனப்பூர்வமாக அளிக்க பின்னிற்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

நேயர்கள் செய்யவேண்டியதெல்லாம் அடுத்த வாரம் நாம் பிரசுரிக்கும் கேள்விக்கொத்தைப் பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதிக்கு முன் நமக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான். 19—3—55.

கேள்விக் கொத்தைப் பூர்த்திசெய்து திறந்த கடிதமாக 4 சத முத்திரை ஒட்டி நமக்கு அனுப்பிவைக்க வேண்டும். தாங்கள் மட்டும் அனுப்பினால் போதாது. தங்கள் நண்பர்களான சுதந்திரன் அபிமானிகளையும் அப்படிச் செய்யும்படி தூண்டவேண்டும். ஒரே வீட்டில் சுதந்திரன் வாசகர்கள் இரண்டு மூன்று பேர் இருந்தால் ஒவ்வொருவரையும் அனுப்பும்படி உற்சாகப் படுத்த வேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட ருசியையும் நாம் அறிய ஏதுவாகும். இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் சொந்தப் பத்திரிகையான சுதந்திரனின் வளர்ச்சிக்காக சொற்ப நேரத்தையும் 4 சதத்தையும் செலவிட நமது நேயர்கள் பின்னிற்கமாட்டார்கள் என்பது நமது துணிபு.

ஆசிரியர்
சுதந்திரன்.
19, ஏழாட்டா தெரு,
கொழும்பு-12.

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13.



பிரவேசக் கட்டணம் சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50



மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இலவசமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....சே.....

போஸ்டல் ஆடர் வெச்சர் இலக்கங்கள்.....

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00

முதலாவது பரிசு ரூ. 600-00

இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 13-4-55 பி. ப. 5 மணி

சரியான விடை 17-4-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 24-4-55ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 30-4-55ல் செக் மூலம் அனுபபப்படும்

இடமிருந்து வலம்

1. இந்துக்களின் புதுவருடம் இந்த மாதத்தில் ஆரம்பிக்கிறது.
3. கல்வித் தெய்வமான சரஸ்வதியின் ஆசனம்.
5. நீண்ட பிரயாணம் செய்பவர்களுக்கு இது அவசியம்.
6. தேடாக் கயிறு தலை மாறிக்கிடக்கிறது.
8. செப்பு.
9. பழைய இலக்கியங்களை ஆராய்ந்து இதைப் பற்றி ஒரு அரிய நூலை ஆகியிருக்கிறார் விபுலானந்த அடிகள்.
10. தம்பதிகளில் ஒருவர்.
12. கடை குறைந்து கிடக்கும் இது கைகூடாவிட்டால் ''சாதல், சாதல், சாதல்'' என்று பாடியிருக்கிறார் பாரதியார்.
13. உயர்ந்த கோபுரத்தின் உச்சிக்கு ஏறுவதென்றால் சிலருக்கு இது ஏற்படுவது சகஜம்.
15. கைத்தடி.
17. வாழைத்தடலின் சாறு வெள்ளைத் துணியில் பட்டால் இது பிடித்து விடும்.
19. குழந்தைகளுக்கு அஜீரணத்தால் உண்டாகும் ஒரு நோய்.
20. பட்டம் பதவிகளுக்காக அரசாங்கத்திற்கு இது பாடுபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.
21. இது உள்ளவன் வாழ்க்கையில் முன்னேறுவான்.

மேலிருந்து கீழ்

1. புதுமையான இவர்கள் ஆரம்பத்தில் நிந்தனைக் குள்ளாவது இயற்கைதான்.
2. சந்திரன்.
3. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த திதியைகண்டு அஞ்சுவது வழக்கம்.
4. இதில் காயம் பட்டால் வீரன் வாளைப் போட வேண்டியதுதான்.
7. ஒருமுறை தீமை புரிந்தவர் மீது வாழ்நாள் முழுவதும் இது பாராட்டும் குணம் சிலருக்கு உண்டு.
8. குழந்தைகளுக்கு குதூகலம் ஏற்பட்டால்..... ப்பு தானாகவே வந்துவிடுகிறது.
10. கால் அணி.
11. அறிஞர்.
14. கண்ணகியின் சிலைவடிப்பதற்காக இதை இமயத்திலிருந்து கனகவிஜயன் என்ற ஆரிய மன்னனின் தலையில் ஏற்றிவந்தானும் ஒரு தமிழ் மன்னன்
16. மாலை நேரம்.
17. இது பெருக்கெடுத்தால் கரையிலுள்ளவர்கள் தவிக்க வேண்டியதுதான்.
18. இன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள் தமிழின் இதைப்பற்றித் திரும்பத் திரும்பப் பேசித் திருப்தியடைகிறார்கள்.
19. இதனால் நிலைகெட்டவர்கள் பலர்.

டோட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13

சுதந்திரன் காரியாலயம் 194, ஏ, தட்டா தெரு, கொழும்பு-12

இவர்கள் உல்லாசமான சவாரியின் சுகத்தை

நியூ ஹட்ஸன்

அல்லது

ஸன்பீம்

சைக்கிள்களினால் அனுபவிக்கிறார்கள்

★ நியூ ஹட்ஸன் 22 அங்குலம் ரோட்ஸ்டர் கியர் கேஸ், லகேஜ்கரியர், ஸ்டாண்ட் & டெரீ ஆசனத்துடன் விலை ரூ. 205-00

★ ஸன்பீம் (ஆண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

★ ஸன்பீம் (பெண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

சிறுவர் சிறுமிகளின் சைக்கிள்களும் கிடைக்கும்.

லயிஸ் பிரவுண் அன்கோ. லிமிட்.,

மக்லம் ரோட், கொழும்பு.

போட்டி விதிகள் 12-ம் பக்கத்தில் பார்க்கவும்

நாசகாரர்களுக்கு ராஜாஜியின் எச்சரிக்கை

யுத்தத்தில் ஈடுபடாத மக்களை கொல்வது கேவலம்

கைகட்டி நிம்மதியாக அமர்ந்திருப்பதன் மூலம் உலகத்திலுள்ள தீமைகளைக் களைந்துவிட முடியாது. வாளாயிருப்பது தீமைக்கு சகாயம் செய்வதற்கொப்பாகும்.

1806-ல் பிரிட்டனுக்கு உணவு தான்யம் இறக்குமதியாகாமல் தடுக்க நெப்போலியன் உத்திரவிட்ட போது கண்டனங்கள் கிளம்பின. பெண்களையும் குழந்தைகளையும் துன்புறுத்தும் காரியம் செய்வது மானங் கெட்டசெயல் எனக் கருதப்பட்டது. சர்வதேச ஒழுங்கு தழைத்தோங்கிய காலம் அது.

ஜப்பான் ஆர்தர் துறை முகத்தைக் கைப்பற்றியது கூட அக்கிரமமாகக் கருதப்பட்ட காலம் அது. ஜப்பான் சம்பவம் நடக்கையில் நான் கல்லூரி மாணவனாயிருந்தேன். அச்சமயம் எனது ஆசிரியராயிருந்த ஸ்காட்டிஷ்காரர் பொருள் துறையில் முன்னணிக்கு வந்ததால் மட்டும் ஜப்பானை நாகரிக நாடாகக் கருத முடியாது என்று வாதித்தார். ஆனால் இன்று மேல்நாட்டு நாகரிகம் மிகவும் முன்னேறி விட்டது. ஏனெனில் சண்டையில் சம்பந்தப்படாதவர்களை கும்பல் கும்பலாக அழிப்பதற்காக ஆயுதங்களை இன்று தயாரித்துக்குவிக்கின்றனர். இந்த அழிவு சாதனங்கள் ஒரு கண்டத்திலிருந்து மற்ற கண்டத்தை அழிக்கவல்லவை. இந்த நாச சாதனங்களை உற்பத்தி செய்யும் கோஷ்டியில் பிரிட்டனும் சேர்ந்திருப்பது சைத்தானுக்கு மகத்தான வெற்றியாகும். உலக அறிவுக்கு திலகமாயிருக்கும் பிரிட்டன் நாசத் துறையில் ஈடுபட்டது சைத்தானின் வெற்றியில்லாமல் வேறென்ன?

அணுகுண்டு எதிர்ப்பாளர்கள் வாதத்தில் நியாயமில்லை என விஞ்ஞானிகள் வாதிக்கின்றனர். சிலர் கூறுகிறபடி இந்த குண்டுகளின் நாச சக்தி அவ்வளவு பிரமாதமில்லை என்று கூறுகின்றனர். ஒரு கண்டத்தை அழிப்பதற்குப் பதிலாக அரைக் கண்டத்தை அழிப்பது நல்லது போல இவர்கள் வாதிக்கின்றனர்.

யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்களை அழிப்பதே கேவலம். வேண்டுமென்றே மக்களைக் கும்பல் கும்பலாகக் கொல்வதும், அதுவும் உங்கள் சார்பினருக்கு அபாயம் ஏற்படாமல் பாதுகாத்து எதிரிகளை மட்டும் கொல்வது கோழைத்தனம்.

ஆனால் இந்த குண்டு உற்பத்திசாலைகளில் அகஸ்மாத்தாகக் குண்டு வெடித்து மக்கள் இறந்தால் அனுதாபக் கூட்டங்கள் நடத்துவோம்.

ஆரம்பித்ததை நிறுத்த முடியாது நிறுத்தலாகாது என வாதாடுகிறார்கள். இதை ஏற்றுக்கொண்டால் தீமை எதையும் எதிர்த்துப் போராட முடியாது. ஆனால் மனிதன் கோழையல்ல, தீரம் நிறைந்தவன். இந்த மாதிரி ஆயுத உற்பத்திக்காரனுக்கு ஊரை மிரட்டும் சௌகரியம் இருக்கிறது. அறிவாளிக்கு இந்த சௌகரியமில்லை.

இந்த விஷயத்தில் இந்தியாவிற்கு மகத்தான கடமையிருக்கிறது. ஒரு தேசத்தினரின் மூட்டாள்தனத்தினால் உலகத்தையே அழிக்கவல்ல சாதனத்தை உற்பத்தி செய்வதில் நம் நாடு கடுகளவும் உதவி புரியலாகாது.

—'ஹனுமன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்தியரை பஸ் கண்டக்டராக நியமித்ததையொட்டி இங்கிலாந்திலுள்ள பஸ் கம்பனியைச் சேர்ந்த வெள்ளையர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்—தென் ஆபிரிக்காவிலுள்ள நகர் ஒன்றில் வெள்ளையர்கள் வாழும் பகுதியிலிருந்து கறுத்தவர்கள் அனைவரையும் நகரின் வெளியே சென்று குடியேறும்படி ஆட்சியாளர் சட்டமியற்றி அமுல் நடத்துகின்றனர். —செய்திகள்

இச்செய்திகளைப்படித்ததும் உங்கள் இரத்த மெல்லாம் கொதிக்கலாம். நிறத்திமிரா என்று நீங்கள் சீறலாம்; ஆத்திரப்படலாம்; வேதனைப்படலாம். ஆனால் இவற்றைக் கேட்டு 'சந்தேகி' உங்களைப்போல அவசர முடிவிற்கு வந்துவிடமாட்டான். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. நம் நாட்டிலே நம் கண்முன்னே இதிலும் பார்க்க வேதனைப்படத்தக்க சம்பவங்கள் தினமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நீங்கள் மறந்து விட்டு வெளி நாட்டில் நடப்பவற்றைப்பற்றி மட்டும் ஏன்வேதனைப்படவேண்டும்?

அங்கேதான் வெள்ளை நிறத்தை வைத்துக் கொண்டாவது வித்தியாசம் பேசுகிறார்கள். ஆனால் நம் நாட்டிலோ ஜாதி என்று எதையோ கற்பனை செய்துகொண்டு பேதமை பேசி மக்களை நூறுவிதமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். நான் தேவ வம்சத்தில் பிறந்தவன்—பாப்பான்—என்று கூறிக்கொண்டு ஒருவன் கோவில் ஆதிமூலத்தில் நின்றுகொண்டு வடமொழியைக் கொலை செய்கிறான். நாமும் உயர்ந்தவர்கள்தான் என்று கூறும் மற்றோர் ஜாதியினர்— (பாப்பாரச் சாதிக்குத் தீண்டப் படாதவர்) அக்கிரகாரத்தின் வெளியே நின்று கடவுளுக்கு லஞ்சம் பேசி ஏதோ எல்லாம் கேட்கிறார்கள். அடுத்த ஜாதியினர் வெளியே தீண்டப் படாதவர்களாக நின்று மோட்சலோகத்திலாவது ஒன்றுக இருப்பதற்குப் 'பாஸ்போட்' வேண்டுகின்றனர். இவற்றையெல்லாம் கண்டு 'தண்டச் சோறுண்ணும் பாப்புக்கு ஒரு நீதியா? என்று பாரதியாரும் 'ஜாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே?' என்று அவர் தாசனும் கொதித்தெழுந்தார்கள். பயனென்ன? இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.



ஒரே நிறத்தவர், ஒரே இனத்தவர், ஒரே மொழியினர், ஒரே மதத்தவர், ஒரே நாட்டிலே வாழ்பவர்—இவரிடையே காட்டப்படும் பேதங்கள்! அப்பப்பா! இவற்றைக் கண்டுதான் 'சந்தேகி' கொதிப்படைகிறான். தென்னபிரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் ஏன் போகிறீர்கள்? இங்குள்ள "சுண்டியெடுத்த" வேளாளர்களும், பிரமா வழிவந்த 'பாப்பார்'களும் மேல் நாட்டிற்குப் போனால் தீண்டப்படாதவர்கள்! இதை நீங்கள் எண்ணுவதில்லையா? இதுதான் சார் உலகத்திலேயே விசித்திரமான செய்தி!

ஒரு தாழ்த்தப்பட்டமாணவனை ஒரு பாடசாலையில் அனுமதித்தமைக்காக மற்றப் பிள்ளைகளெல்லோரையும் பள்ளிக்குச் செல்லாது தடுக்கும் சம்பவங்கள் இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் இன்றும் கிராமங்களிலே தனிப்பட்ட மூலைகளிலேவசிக்கின்றனர். அவர்கள்மேல் கோபம் ஏற்பட்டால் மேல்ஜாதியினர் என்று கூறப்படுவோர் ஏழைகளின் கொட்டில்களுக்கு நெருப்பு வைத்து விடுவார்களாம். அப்படிப்பட்டவர்கள் வடமராட்சிப் பகுதியில் பலர் வாழ்கிறார்களாம். சென்ற மாதங்கூட இப்படியான செய்தி ஒன்று நடைபெற்றதாம்.

பூனையில் வெள்ளை உயர்ந்தது. யானையில் வெள்ளை யானை உயர்ந்தது. குரங்குகளில் வெள்ளைக் குரங்குகள் உயர்ந்தவை. மனிதர்களில் வெள்ளை மனிதர்கள் உயர்ந்தவை. இதில் உங்களுக்குச் சந்தேகமா? உலகிலேயே உயர்ந்த சொல்வன்மை மிக்கவர்களில் ஒருவராகக் கருதப்பட்ட டாக்டர் சீனிவாச ஐயங்கார் இங்கிலாந்தில் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். கேள்வி நேரத்தில் பொறுமைமிக்க ஒரு வெள்ளைப் பெண், இந்தியர்கள் ஏன் கறுத்தவர்களாக வந்தார்கள்? என்று கேட்டாளாம். அவர் பின் வருமாறு பதில் கூறினாராம்:-

"கடவுள் ஒரு நாள் அப்பம் சுட்டார். முதல் அப்பம் பதம் தவறிக் கருகிவிட்டது, ஆபிரிக்காவில் வீசிவிட்டார். அடுத்த அப்பம் வேகவில்லை; வெள்ளையாயிருந்தது. ஐரோப்பாவில் வீசிவிட்டார். அடுத்த அப்பம் வெந்து நல்ல பதமாக வந்தது. ஆசியாவில் வீசிவிட்டார்"

"ஜூன் மாதத்தில் நிகழ இருக்கும் சூரிய கிரகணத்தை அவதானிப்பதற்காக இலங்கை வர இருந்த ரஷ்யவான ஆராய்ச்சிக் குழுவினருக்கு இலங்கைப் பிரதமர் "விசா" மறுத்துள்ளார்—செய்தி.

இரும்புத்திரை, இருப்புத்திரை என்று ஒன்றைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அது எங்குமில்லை ஐயா! இங்கு நம் நாடுகளிலே ஜனநாயகம் பேசும் அமெரிக்காவின் அடிவருடிகளிடையே தான் இன்று காணப்படுகிறது. ரஷ்யா பற்றிய செய்திகள் யாவும் தாராளமாக வெளிவருகின்றன. அங்கு நுழைவது இன்று மிக இலகுவாக உள்ளது. இங்குதான் இன்று பிறநாட்டவர் நுழைய முடியாதபடி திரையிட்டு வருகின்றனர்.

இந்தியாவிற்குவந்த ரஷ்ய உதைபந்தாட்டக் குழுவினருக்கும் நமது பிரதமர் "விசா" மறுத்ததை அறிவீர்கள். விளையாட்டுக்குக் கூட இங்குவர முடியாதாம். விளையாட்டு உணர்ச்சியே அற்றவர்தான் இலங்கைப் பிரதமராம். இப்போது சூரிய கிரகணத்தை அவதானிக்கவரும் விஞ்ஞானிகளைக் கூட இரும்புத்திரையிட்டுத் தடுக்கிறார். அவருடைய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியைக் கீழ்க் கண்டவாறு சுருக்கிக் கூறலாம்.

"விளையாட்டுக்காரர்கள், விஞ்ஞானிகள், கலை கலாச்சாரத் தூதுவர்கள் இலங்கையின் இரும்புத்திரைக்குள் நுழையப் படாது. நிர்வாண நடனம் செய்ய வல்லவர்கள், பனிக்கட்டி மேல் சறுக்கி விளையாடவல்ல பெண்கள், ஜூலிபோன்ற மந்திர வித்தைக்காரர்கள் தாராளமாக வரலாம்"

ஒரு ஆங்கில நாளிதழ் ரஷ்ய ஆராய்ச்சிக் குழுவில் 50 பேர் ஏன் வரவேண்டும்: 5-10 பேர் போதாதா? மற்றவர்கள் அரசியல் விஞ்ஞானமா போதிக்கவருகிறார்கள் என்று தலையங்கம் எழுதுகிறது. அந்த இதழின் ஆசிரியருக்கு உள்ள விஞ்ஞான அறிவு பூஜ்யம் என்று உறுதியாகக் கூறலாம். பூரண சூரிய கிரகணம் அபூர்வமானது. பல வான ஆராய்ச்சிகளைப் பூரண சூரியகிரகணத்தின்போதுதான் செய்ய முடியும். மேலும் பூரண சூரிய கிரகணம் இலங்கையில் 4 நிமிடங்கள் மட்டுமே நீடித்திருக்கும். அந்த நான்கு நிமிடங்களிலே நூற்றுக்கணக்கான அவதானங்களை (Observations) செய்ய நேரிடும். ஒரு அவதானத்தையே வெவ்வேறு நபர்கள் செய்து அவற்றின் சராசரியைக் கண்டு. அதையே உறுதியான முடிவாகக் கொள்வது விஞ்ஞான வழமை. இவற்றையெல்லாம் அறியாத அந்த ஆங்கில இதழின் ஆசிரிய தலையங்கத்தை எண்ணும்போது தான் அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

—சந்தேகி

புராணப் புத்தகங்கள் படிப்பகங்களை விட்டு அகலும்

"ஆட்சேபனைக்குரிய ஆபாசமான கருத்துக்களடங்கிய புத்தகங்களை நகரசபை நடத்தும் படிப்பகங்களிலிருந்து நீக்கிவிட வேண்டும்," என்று, ம. சோ. கட்சியினர் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றை பம்பாய் நகரசபைநிறைவேற்றியுள்ளது

கடவுளர்களின் ஆண்-பெண் உறவு வாழ்க்கை பற்றியமிக ஆபாசமான கருத்துக்களடங்கிய ஏராளமான புராண—சாஸ்திர—இதிகாச புத்தகங்கள், நகரசபை வாசிக சாலைகளில் இருப்பதாக தீர்மானத்தைக் கொண்டு வந்த பேராசிரியர் ராம் ஜோஷி குறிப்பிட்டிருக்கிறார்.

நகரசபை ஆணையாளரான பி. ஆர். பி. நாயக் இந்தப் புத்தகங்கள் எல்லாம், நகரசபையால் தேவை என வாங்கப்பட்டவை அல்ல என்றும், ஆனால், அவைகளில் பல, வாசிகசாலைகளுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டவை என்றும் கூறியிருக்கிறார்.

தீர்மானம் பற்றி தாம் கவனிப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

அறிமுகப்படுத்துகிறோம்

கலைஞர் 10:

கானக் குயில் கமலா நாகமுத்து

--"கீரன்"

"பெண்களின் சிறந்த பூஷணம் புன்னகையே; பொன்னகை அடுத்தபடிதான்!—பெண்களின் ஆடைகளில் புதுமை மிளிரலாம்; ஆனால் அதிலும் பண்பாடு வேண்டும்—ஆறறிவுள்ள மனிதர்களை விலங்கு விற்பதற்கு மறுபெயர் சீதனம்"—இப்படியான புதுமைக் கருத்துக்களை அள்ளி வீசும் 24 வயது நிரம்பாத இவ்விளம் ஆசிரியை, வானெலியில் கீதமழைபொழியும் பெண்மணி என்றுமட்டும் எண்ணிவிடாதீர்கள். சிறுகதை, கட்டுரை எழுதல், கவி இயற்றல், நாடகம் தீட்டல், நடித்தல் ஓவியம் வரைதல் ஆகிய துறைகளிலெல்லாம் ஈடுபாடு உடையவராகவும் விளங்குகிறார். கல்வி, சங்கீதம் பயிற்றுவிப்பதை இப்போது தொழிலாகக் கொண்டுள்ளார். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பணி புரிகிறார்.

பதினாறு வயதில் பேனா பிடித்த இவர் பல பத்திரிகைகளில் சிறுகதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள், கவிதைகள் 'வதனா' என்ற புனைபெயரில் எழுதினார். வசந்தி, டென்னிஸ் ராணி, மனித தெய்வம் ஆகிய சிறுகதைகள் இவரது அரியசிருட்டிகளாகும் மாமா வருகிறார், வழிப்போக்கன், பாமா விஜயம், புதுயுகம், ஆபத்தும் சம்பத்தும் ஆகிய ரேடியோ நாடகங்களையும் தீட்டினர். முதல் மூன்றில் பங்குபற்றிச் சிறப்பித்தார்; பரிசும்பெற்றார். வழிப்போக்கன், புதுயுகம் ஆகிய இரு நாடகங்களும் இவரது சிறந்த படைப்புகளாகும்.

"இன்னிசையில் கர்நாடக சங்கீதம் தலைசிறந்தது. சிறுவர் முறைப்படி பயிலுதலும் பெரியவர் ரசிக்குமளவிற்காவது தெரிந்திருத்தலும் அவசியம். இசை நயம் பொருந்திய தெலுங்குக் கீர்த்தனங்களையும் நாம் அடியோடு ஒதுக்கிவிடமுடியாது—கல்வியிலாகாவும், பாடசாலை அதிபர்களும் இன்று செவிடாக உள்ளனர். அதனால் சங்கீத ஆசிரியர் நிலை இன்று பரிதாபத்திற்குரியது" என்று கூறும் இவ்வாசிரியை யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் இன்னிசை பயின்று 1950ம் ஆண்டு தொடக்கம் இலங்கை வானெலியில் பாடிவருகிறார். கல்யாணி, ஹிந்தோளம், கானடா இராகங்கள் பாடுவதில் திறமைமிக்க இவரின் கச்சேரிகளை நேயர்களில் பலர் கேட்டிருக்கலாம்.

நல்ல உயரம்; எடுப்பான தோற்றம்; உறுதியான உடற்கட்டு; பொது நிறம்; கவர்ச்சியான கண்கள் அமைந்த இவரின் முழுப்பெயர் கமலவதனி; தந்தையார் நாகமுத்து; தாயார் சிவகாமி. 23-2-32ல் வல்வெட்டித்துறையில் பிறந்தார். மட்டக்களப்பு மகளிர் பாடசாலையிலும், சிதம்பராக் கல்லூரியிலும் கற்று 16ல் ஆங்கிலம் எஸ். எஸ். சியில் தேறினர். பின்னர் சங்கீதம் பயின்றார். சென்ற இரண்டரை ஆண்டுகளாக ஆசிரியையாயுள்ளார்.

"அன்புருவான பெண், கலைக்கு உறைவிடம், குடும்பத்தின் உருவகம். அங்கு அன்பையும் அறத்தையும் வளர்த்து, கடமை, பொறுமை பூண்டொழுகி சமஉரிமை பெறலாம். பெண்கள் ஓய்வு கிட்டின் அரசியலில் பங்குபற்றுவதில் தவறில்லை. பிரசாரத்தில் பெண்கள் வெற்றிபெறுவது சுலபம்" என்று பெண்களுக்கு அன்புரை கூறும் இவர் சித்திரம் தீட்டல், ரேடியோக்கேட்டல், வீடுபெருக்கல் ஆகிய வற்றைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளார்.

இவருக்குப் பிடித்தவை: மஞ்சரி, கலைமகள், டாக்டர் மு. வ, கல்கி, தேவன், சேக்ஸ்பியர், தாகூர், ஜி. என். பி, குயுக்தி, எம். எஸ், பட்டம்மாள், நாட்டுப் பாடல்கள், சினிமா, மல்லிகைப்பூ, காப்பி, நீலவர்ணம்.

பிடிக்காதவை: பல்லுடையவைக்கும் புரியாத கொடுந் தமிழ் நடை, மருந்துகள், முடிவில்லாத பிரசங்கங்கள், ஆண்களோடு ஏட்டிக்குப் போட்டியாகப் [illegible] ரெட் பிடித்தல், பாகற்காய்.

சுகமடைந்துவருபவர்களுக்கு
அவசியம் தேவைப்படுவது

உண்மையாகவே நீங்கள் 100% சதவீதம் பரிபூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக உங்களுக்கு கூறமுடியுமா? உங்களுக்கு போஷாக்குடைய வேறு உணவுகளை வருந்தவேண்டிய அவசியமில்லை எனவும் கூறமுடியுமா?

முடியாவிட்டால் நெஸ்டோமோல்டை தினமும் வைத்து நீங்களும் நெஸ்டோமோல்ட் சுத்தமான பாலில் தேவையான பார்லியுடன் விற்றமின் B1 சேர்க்கப்பட்டதாகும். இது உடல் வளர்ச்சிக்கு மிகமுக்கியமான விற்றமின்

தினமும் ஒரு கப் சாப்பிட்டால் விற்றமின் B1ன் குறைவு நிவர்த்தி செய்வது மட்டுமின்றி உங்களை ஆண்டு முழுவதும் சந்தோஷமாகவும் இருக்கச் செய்யும்.

நெஸ்டோமோல்ட் மிகச் சுவையானது.

நெஸ்டோமோல்ட்
எல்லோருக்கும் உகந்தது.

நெஸ்டோமோல்ட் தயாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவினம்:

39. குறுநகை

பகல் முழுப்பொழுதையும் நாதன் அமைதியாகக் கழித்தார். நானும் அம்மாவும் மாறிமாறி அவருடைய அருகிலிருந்தோம். ''பவானி என்னுடைய பிள்ளை இல்லையோ?'' எனப் பலமுறை கேட்டுக் கேட்டுச் சிரித்தார். 'பிள்ளை இல்லை. உங்களுடைய பணிப்பெண்' என்றேன்.

'இல்லை. அப்படிச் சொல்லாதே. என்னுடைய பிள்ளை நீ' என் அவர் என்னுடைய தலையிலே செல்லமாகத் தட்டி தட்டிச் சொன்னார்.

அவர் அன்பாக என் தலையில் தட்டியது என்னுள்ளத்தை சம்மட்டியால் அடிப்பதுபோன்றிருந்தது.

'நீ வந்தநாளன்று தொடக்கம் உன்னை என்னுடைய பிள்ளையாக்கிவிட்டேன்' என நாதன் மேலும் சொன்னார். இப்படியான மேம்பாட்டையுடையவரை நான் பிழையாக எண்ணிவிட்டேன். கடவுளே! எனக்கும் மன்னிப்பு உண்டோ?

நாதன் இறக்கும் தறுவாயிலிருக்கும்போது நானும் தற்கொலை செய்யவேண்டும் என எண்ணினேன். வாழ்வதற்குத் தூண்டுகோலாக அப்போது ஒன்றுமில்லை. இப்பொழுது வாழ்வு வாழ்வதற்கே என்னும் எண்ணம் என் உளத்தை இறுகப்பற்றிக் கொண்டது. நான் வாழ்வதும் நாதனைப் பொறுத்தது. நான் தன்னைக் கொலை செய்வதற்கு என நஞ்சூட்டினேன் என நாதன் நினைத்திருக்கலாம். கடவுள் செயலால்தான் தப்பிக் கொள்ளவே என்னையும் தப்பவைப்பதற்காகத் தற்செயலாக நடந்தது என நாதன் நீதவானிடம் சொல்லிவிட்டார் போலும். சட்டத்திலிருந்து நாதன் என்னைத் தப்பவைத்தார். குமாரசாமியிடம் இருந்து என்னைத் தப்பவைப்பாரோ? என்னுடைய நடத்தையைப்பற்றி குமாரசாமிக்கு நாதன் ஒரு சொல்லுச் சொன்னால் என்னுடைய பாடு அதோகதிதான் ஆகும். குமாரசாமி ஐயப்பாடு கொண்டாலும் என்னை மணக்க முன்வரமாட்டார். கொலைகாரச் சண்டாளியை யார்தான் மணக்க முன்வருவார்கள்? சந்தையிலே சனியனை யாரும் விலைகொடுத்து வாங்க முன்வருவார்களோ? ஆகாயத்திலே போகின்ற மூதேவியை யாரும் ஏணிவைத்து தங்களுடைய வீட்டிலிறக்குவார்களோ? இப்படியான நிலை வந்தால் அதற்கு வேண்டிய மருந்தும் என்னுடைய கையிலே இருக்கின்றது. ஒருதுளி நஞ்சு எல்லாவற்றிற்கும் மறுமொழி சொல்லும். ஆனால் அதற்கு முன்னர் ஒன்றுசெய்யவேண்டும். குமாரசாமிக்கும் நாதனுக்கும் நான் செய்கையாற் குற்றமற்றவளென்றும் உளத்தாற் குற்றமுடையவளென்றும் என்னுளத்தை திறந்து சொல்வேன். அது என் கடமை. நாதனுடைய செயல்களைப் பிழையாக விளங்கி அவர்மேற் காதல் கொண்டு அதிற் படுதோல்வி அடைந்ததையும் நாதனுக்குச் சொல்வேன். ஏணிப்படிகளைப்பற்றியுஞ்சொல்வேன்.

நடுஇரவில் அம்மா தன்னை மறந்து உறங்குவார். அப்பொழுது எனக்கு விடுதலை கிடைக்கும். இந்த எண்ணம் என்னுடைய உள்ளத்தை உறுத்தியது.

பிற்பகலானதும் அந்தக் கிழப் பொலீசுப்புலி வந்தான். நாதனிடம்போய்ச் சொன்னேன். புலியை அழைத்து வரும்படி நாதன்சொன்னார். அவனை அழைத்துக் கொண்டு சென்றேன். அவனைக் கண்டதும் நாதன் பேசத் தொடங்கினார்.

''இப்பொழுது என்னால் அதிகம் பேச முடியாது. இரண்டு மூன்று நாட்கள்செல்ல நீங்கள் வாருங்கள். என்னுடைய பெற்ற தாய்க்கும் மேலான இங்குள்ள அம்மாவையும், என்னுடைய பிள்ளைபோன்ற இப்பெண்ணையும், என்றும் நன்றிமறவாத பணியாளன் ஆறுமுகத்தினையும் குறுக்குக் கேள்வி கேட்டீர்களாம். நீங்கள் எண்ணியதெல்லாம் பிழை'' என்றார் நாதன்.

''சில சான்றுகள் இருந்தபடியாலேதான் நாங்கள் அப்படிச் செய்தோம்'' என்றது பொலீசுப்புலி.

''அந்தச் சான்றுகளை இன்னொரு நாளைக்குப் பேசுவோம்''

''இப்பொழுது சுருக்கமாகச் சொல்லலாமோ?''

''வேண்டாம்''

நாதனுடைய குரல் சற்றுக் கடுகடுப்பாக இருந்தது. இதனைக்கண்ட பொலீசுப்புலி மிகவும் தாழ்மையாக எழுந்து விடைபெற்றுச் சென்றது.

இரண்டு நாட்கள் ஓடி மறைந்தன. குமாரசாமியும் வீட்டிலிருப்பதால் எனக்கு மகிழ்ச்சி ஊற்றெடுத்தோடியது. அதனைக் குலைக்கவோ என்னவோ அந்தப் பொலீசுப் புலியும் தவறாமல் வந்தான்.

''உங்களுடன் தனிமையாகப் பேசவேண்டும்'' என அவன் நாதனைப் பார்த்து தாழ்மையாகச் சொன்னான்.

''உங்களுடைய சான்றுகளைப்பற்றி என்னால் தனிமையாக என்னுற் பேசமுடியாது. மற்றவர்களும்இருக்கவேண்டும். இது என் கட்டளை''

'ஓம், என்றான் பொலீசுப் புலி.

''பவானி, நல்லமாமியையும் குமாரசாமியையும் ஆறுமுகத்தையும் இங்கு அழைத்துவா'' என்ற பின்னர் அந்தப் பொலீசுக்காரனைப் பார்த்து ''அப்படி இருங்கள்'' என்றார் நாதன்.

எல்லோரையும் அழைத்து வந்தேன். பின்னரும் நாதன் பேசத் தொடங்கினார்.

''நான் அறிந்தவரையில் பவானியைத்தான் அதிகம் குறுக்குக் கேள்வி கேட்டீர்களாம். பவானிஎன்னுடைய பிள்ளை. அவள் இதனைப்பற்றி யறியவேண்டும். பவானி மேல் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தால் அதுபிழை என்பதை பவானியின் தாய் முதலாவதாக அறியவேண்டும். ஏனெனில் தன் மகள் கொலைகாரி என்றதை அறிந்த பெற்றவயிறு பற்றி எரியும்! இதற்கு இடம்வைக்கப்படாது. இரண்டாவதாக இந்த இளைஞனும் இதனை அறியவேண்டும். அவர் எனக்கு மிகவும் வேண்டியவர் மூன்றுவதாக இந்தப் பணியாளன் ஆறுமுகமும் இதனை அறியவேண்டும். பணியாளனை இருந்தபோதும் எங்களுடன் நெருங்கிப் பங்குபற்றுகின்றவன்''

இப்படி நாதன் பேசுகையில் அவருடைய பெருந்தன்மையைப்பற்றி நான் வியந்தேன். அந்தப் பொலீசுக்காரன் என்னதான் சொன்னாலும் நாதன் அதனை நம்பமாட்டார் என்ற தென்பு எனக்கு வந்தது. இருந்தும் அவன் சொல்லி முடிக்கும் வரையும் என் உயிர் நரகத்திலேதான் இருந்தது.

''உங்களுடைய சான்றுகளை ஒவ்வொன்றுகச் சுருக்கமுறச் சொல்லுங்கள். நானும் சுருக்கமுறச் சொல்கின்றேன்'' என நாதன் பொலீசுக்காரனுக்கு பணித்தார்.

''முதலாவதாக அந்தப் பொல்லாத நஞ்சு இந்தப் பெண்ணுக்கு எப்படிக் கிடைத்தது? இதுதான் அன்று நாங்கள் முதலில் எங்களையே கேட்ட கேள்வி'' என்றான் பொலீசுக்காரன். நாதன் நகைத்தார். ''என்னுடைய ஆராய்ச்சி வேலைகள் எல்லாவற்றிற்கும் என் பிள்ளைபோல இருந்து உறுதுணையாக இருப்பது பவானிதான். பவானி இல்லாவிட்டால் நான் எங்கே? ஆராய்ச்சி எங்கே?'' எனச் சொன்னார்.

''இரண்டாவதாக நீங்கள் ஏன் கண்ணுடிப்பேணியில்—அதாவது நஞ்சுக்காடிகளைக் கரைக்கின்ற பேணியில்—தேநீரை அருந்தினீர்கள்?'' என்றது பொலீசுப்புலி.

''அதிற்குடிப்பது வழக்கம். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் அப்படித்தான் குடிக்கின்றேன். இதில் புதியது ஒன்றுமில்லை. எப்பொழுதும் ஒரு பேணி என்னுடைய மேசையில் தேநீர் குடிப்பதற்கென இருக்கும்'' என்றார் நாதன்.

''அப்படியானால் அதிலே எப்படி நஞ்சுவந்தது?''

''ஆராய்ச்சி செய்யும்பொழுது ஒருதுளி நஞ்சு எப்படியோ அதிலே பறந்துவிட்டது. அது எனக்குத் தெரியாது. தேநீரை அதிலே வார்த்துக் குடித்தேன்''

''பின்னர் இந்தப் பெண் ஏன் ஒரு நஞ்சுப் பேணியை தோட்டத்தில் புதைத்தாள்? இவருடைய காலில் மண் இருந்தபடியால் அதனை நாங்கள் மட்டிட்டறிந்து கேட்டோம். அதிலிருந்து பிடித்தோம்''

''என் கட்டளைப்படி தாட்டாள்''

''ஏன்?''

''ஆராய்ச்சி செய்வதற்கு நஞ்சைக்கரைத்த பின்னர் பேணியை வைக்காமற் தாட்கும்படி சொன்னேன். பேணியைக் கழுவி எடுக்கலாம். எப்படிக் கழுவினாலும் நஞ்சு அதில் இருந்தாலும் இருக்கும். கழுவும்போது நஞ்சு கையிற் பிடித்தால் சாப்பாட்டுடன் உள்ளே போனால் என் செய்வது''

இந்த இடத்தில் என்னுடைய நெஞ்சு வெந்தது. என்னுடைய கவனக்குறைவினாலேதான் இவை எல்லாம் வந்தன. பேணியை முதலிலே தாட்காமல் நாதன் இறக்கும்போதுதானே அதனைத் தரட்க முயன்றபோது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக எதனையோ கருதி எதனையோ செய்யப் பொலீசார் என்னைப் பிழையாக விளங்கிக் கொண்டார்கள்.

''இந்தப் பெண்ணுடைய கைவரலடையாளம் எப்படிப் பேணியில் வந்தது'' எனக் கேட்டான் பொலிசுக்காரன்.

''என்ன பேய்த்தனமான கேள்வி இது? நான் சொன்னபடி நஞ்சைக் கரைத்தபடியால் வந்தது. இங்குள்ள பேணிகள், போத்தில்கள் எல்லாவற்றிலும் பவானி தொடாத போத்தில் பேணி இங்கு கிடையாது. வேறு என்ன வேண்டும் உங்களுக்கு?'' ''ஒன்றுமில்லை. நான் போய் வருகின்றேன். தொல்லை தந்ததிற்காக மன்னிக்கவும். எல்லாருக்கும் எனது மன்னிப்பு உரித்தாகுக'' எனக் கூறிவிட்டு பொலீசுக்காரன் சென்றான்.

''அப்பாடா ஒரு தொல்லை போனது. தலைக்கு வந்தது, தலைப்பாகையுடன் நீங்கியது என்றார் நாதன். அம்மா வழக்கம்போல ''கதிர்காமத்துக் கந்தனே!'' என்றார்.

நாதனுடைய வாயிலிருந்து ஒருவிதமான குறும்பு நகை வந்தது. என்னதான் சொல்லப்போகின்றார் என நான் பார்த்தேன். பெரிதாகக் கொட்டாவி விட்டார். பின்னர் அம்மாவைப் பார்த்து ''நல்லமாமி உங்களுடைய பிள்ளை கொலைகாரியில்லை'' என்றார். அதன் பின்னர் ''உங்களுடைய ஆள்கொலைகாரியில்லை,'' என்று குமாரசாமியைப் பார்த்துக் கூறினார் நாதன். எனக்கு நாணத்தால் முகம் சிவந்தது. அம்மாவைப் பார்த்தேன். ''எனக்கு எல்லாம் தெரியும் நீமறைத்துவைத்த பண்டம் வெளியாகி விட்டது,'' எனக் கருத்துப்பட அம்மா என்னைப் பார்த்தார்.

அதன் பின்னர் நாதன் ஆறுமுகத்தைப் பார்த்து ''என்ன ஆறுமுகம் எல்லாம் விளங்கிற்றோ?'' என்றார்.

ஆறுமுகம் வழக்கம்போல ''விளங்கிற்று. விளங்கவில்லை'' எனக் கேலியாகக் கூறித் தலையைச் சொறிந்தான்.

''சரி எல்லோரும் போங்கள். நான் கண்ணயரப் போகின்றேன்'' என நாதன் சொன்னார். அம்மாவைப் பின் தொடர்ந்து போனேன்.

சத்தியமே ஜெயம்

A. S. D. அமிர்தானந்த லேகியம்

பிரதி தினமும் அனுபவத்தில் — முதன்மையானது — பத்தியமில்லாதது — ருசிகரமானது.

42 — வருஷ வைத்திய அனுபவத்தில் ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.



எமது நண்பர்கள் கவனிப்பு:-

அமிர்தானந்த லேகியத்தால் (1000) வியாதிகள் சுகப்படுமென தற்புகழ் கூறவும், வர்ணிக்கவும் முன்வரவில்லை—எங்கள் வைத்திய முறைக்கு விகடம் அவசியமே இல்லை. வைத்திய அனுபவமுறை அனுபவத்தில் தெரிந்துகொள்ளுங்கள்.

விபரம்:

சரீர உஷ்ணங்களுக்கும், ஜீரண சக்திக்கும், மூல வியாதியஸ்தர்களுக்கும், கணைசூட்டிற்கும், சொறி, சிரங்கு, ஊரல், தடிப்பு இவைகளுக்கும், இரத்த சுத்திக்கும் அனுபவமானது. பிரதி தினமும் மல ஜலங்களைக் கிரமப்படி கழிப்பித்து சரீர சுகம் கொடுப்பதில்நிகரற்றது.

புட்டி ஒன்றிற்கு விலை ரூ. 2-50.

முன்பணமனுப்பவும் தபால் செலவு இலவம்.

A. S. D. மருந்துகள் கிடைக்குமிடம்:

ஆயுர்வேத டாக்டர்

A. S. டானியல்,

மலையாள மெடிக்கல் ஹால்

179, செட்டியார் தெரு, கொழும்பு-11.

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

புகையிரத வீதிக் கடவைத் திருத்தங்கள்

பிரதம புகையிரத பாதையில் கணேமுல்லை - கம்பகா ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையே (13 மைல் 35/36 சங்) கடவத்தை - இரண்டிவற்றை பி. டபிள்யூ. டி வீதி குறுக்கிடுமிடத்திலுள்ள கிழ்நோக்கி இறங்கும் புகையிரதக் கடவை 1955ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி மாலை 10 மணி தொடக்கம் மறுநாட் காலை 4 மணி வரைக்கும் திருத்தம் செய்வதற்காக மூடப்பட்டிருக்கும். இவ்வேளையில் எவ்விதவாகனங்களும் மிரிஸ்வத்தை கம்பகா பி. டபிள்யூ. டி, வீதியாலும் கந்தானை - கணேமுல்லை பி. டபிள்யூ. டி வீதியாலும் செல்லவேண்டும்.

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

கழனியாவளி புகையிரத மார்க்கத்தில் கொழும்பிலிருந்து இங்கிரியாவிற்குப் போகும் மோட்டார் - வோய்ப்ப பி. டபிள்யூ. டி ரோட்டில் மீகொடை - பத்துகை புகையிரத ஸ்தானங்களுக்கிடையில் 21 மைல் 58 சங்கிலி 65 லிங்ஸ்சில் உள்ள புகையிரதக் கடவை திருத்தம் செய்வதற்காக 1955ம் ஆண்டு பங்குனி மாதம் 22ந் திகதி மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை 6 மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும். 1955ம் ஆண்டு பங்குனி மாதம் 22ந் திகதி மாலை 10 மணி தொடக்கம் மறுநாட் காலை 4 மணி வரை எல்லா வாகனங்களும் (இங்கிரியாவிற்குப் போக்குவரத்துச் செய்யும்) கலகெதர பாதுகையை பி டபிள்யூ. டி வீதியால் போகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடவர் ஆவிசோர்ந்து வியக்கப் பந்தடித்து விளையாடும் அரிவையர்

பல்நூறு ஆண்டுகளுக்கு முன்னே தமிழகத்துப் பாவையர் பந்து பயின்ற காட்சி

நாடகம் ஆடிய தோகை மயில் போல நன்னகர் வீதியில் பந்தாடிய ஆடகவல்லிகள்

திரிகூட ராசப்பக்கவிராயர் தரும் இன்பச் சித்திரம்

"நாவேந்தன்"

புட்டணத்துச் சூழலிலே தான் 'தெருச்சுற்றும்' சிதம்பரத்தின் வீடு இருந்த தென்றாலும் அவன் தன் வாழ்க்கையில் கிராமாந்தரச் சூழலையே பிரதிபலித்தான். அவன் போக்கு பலருக்கு ஆச்சரியத்தை அளித்ததென்றாலும் சிதம்பரத்தைப் பொறுத்தவரையில் மிக ஆறுதலாகவும், விஷயஞான முள்ளவனுமாகவே காட்சியளித்தான். 'தெருச்சுற்றும் சிதம்பரம்' என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேலே நீங்கள் ஒரு மாதிரியாகச் சிதம்பரத்தை சந்தேகிக்காதீர்கள்! அவன் நமது பண்டைத் தமிழ்ப் புலவர்கள் ஆக்கிய அருமையான இலக்கியத் தெருக்களிலே ஏறு நடை போடுபவன். வீணே இந்தக் காலத்து தார் வீதிகளில் நடையழகும் நண்பர்களைக் கவனித்துக்கொள்ளத்தான் நமது நாட்டிலே முழு மந்திரிகள், அரை மந்திரிகள் பலர் இருக்கிறார்களே! நமக்கேன் அவர்களைப் பற்றிய கவலை? இந்த இலக்கியத் தெருக்களிலே ஏறு நடை பழகும் சிதம்பரம் என்ன சொல்லுகிறான் என்பதைக் கவனிப்போம்!

நல்ல மாலை நேரம். வெளித் திண்ணையில் 'ஈஸி சேரை'ப் போட்டு நல்ல நித்திரை ஒன்று செய்தெழுந்த சிதம்பரத்தின் கண்களில் கையில் பந்தடி மட்டையைப் பிடித்துக்கொண்டு முழங்காலுக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கும் 'கவுண்' காற்றில் அலையிடத் துவிச்சக்கர வண்டியில் வேகமாகச் செல்லும் துடியிடையாளொருத்தி பட்டுவிட்டாள். கேட்கவாவேண்டும் சிதம்பரத்தின் சிந்தனைக்கு! அப்படியே இருந்த இடத்திலே இருந்துகொண்டே சிதம்பரம் ஒரு பெரிய பிரயாணஞ் செய்யத் தொடங்கிவிட்டான். அவன் சிந்தனைப் புரவி சிறகடித்துப் பறந்தது. இந்தப்பந்தடித்து விளையாடும் காட்சி சமீபத்திலேதான் தமிழ் நாட்டுக்குத் தெரிந்தது என்று 'இலக்கிய மாமன்றங்களில்' முழங்கும் நமது நாட்டு மேடைப் பேச்சாளிகளை ஒருகணம் நினைத்துப் பார்த்தான்.

"சே, இவர்களுக்கெல்லாம் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமிருந்துதான் இறக்குமதியானதாகத் தெரியுமே தவிரச் சொந்த நாட்டுப் பண்பாட்டைப் பற்றி இவர்களுக்கு ஒன்றும் தெரியாது" எனக் கருதுபவன் சிதம்பரம்! எனவே பழைய தமிழிலக்கியங்களில் இந்தப் பந்தடித்தலைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள், நமது கவிஞர்கள் என்று சிந்தனை செய்தான். கம்பராமாயணத்திலே "பந்தினை யிளையவர் பயிலிடம்" என்று ஒரு அடி இருக்கிறதாக அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதைத் தொடர்ந்து சிதம்பரத்தின் சிந்தனை வேகமாக நிகழ்ந்தது. எத்தனை, எத்தனையோ புலவர்களை யெல்லாம்சந்தித்துச்சென்ற சிதம்பரத்தின் சித்தனையிலே சமீபகாலத்தில், இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து மறைந்த திரிகூடராசப்பாக் கவிராயரின் ஞாபகம் எழுந்தது. அப்புலவர் பெருமகனரின் குற்றாலக்குறவஞ்சிப் பாடல்கள் சிதம்பரத்தின் உள்ளத்திலே துள்ளிக் குளம்பின. பந்தடித்து விளையாடும் பாவையரைப்பற்றிப்பாடியிருக்கும் திரிகூடராசப்பாக் கவிராயரின் புலமையிலே அவன் மனம் ஈடுபட்டுவிட்டது. திரிகூட ராசப்பரே தன்முன்னின்றுபாவையர்பந்தடித்து விளையாடும் காட்சியொன்றைக் காட்டுவதாக அவன் உணர்ந்தான். சிதம்பரமும், திரிகூடராசப்பக் கவிராயரும் பாவையர் பந்தடித்து மகிழும் காட்சியைக் கண்டு அப்படியே சொக்கிப் போய் விட்டனர். இதோ திரிகூட ராசப்பாக் கவிராயர் பேசுகிறார்!

"செங்கையில் வண்டு கலின்
கலினென்று
செயஞ் செயமென்றுட
—இடை
சங்கத மென்றுசிலம்பு
புலம்பொடு
தண்டை கலந்தாட—இரு
கொங்கை கொடும்பகை
வென்றனமென்று
குழைந்து குழைந்தாட
—மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த
சவுந்தரி
பந்து பயின்றனளே!"

"அட, அட என்னப் பிரமாதம்! புலவரே, உம்முடைய வருணனை அந்தத் துடியிடையாளின்பந்து விளையாட்டினையே வென்றுவிட்டதையா! சே, என்னுடைய கண்கள் என்ன புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இன்று இந்தக் காட்சியை காண! புலவரே, உமது உதவிக்கு எனது மனமார்ந்த நன்றி. இவ்வளவு காலமும் உதட்டுச் சாயத்தையும், தையற் கடைக்காரனையும் தஞ்சமடைந்து, பந்தடி மட்டையைக் கையிற் பிடித்துக் கொண்டு 'சதிராட்டம் ஆடுகின்ற' எங்கள் காலத்துப் பெண்கள் எங்கே! நாம் இங்கே காணுகின்ற அழகரசிகளெங்கே! புலவரே, அவர்கள் நடை, உடை, ஒய்யாரம் எல்லாம் எப்படி இருக்கிறது! வைத்த கண்களை வாங்க முடியாமலல்லவோ இருக்கிறது!. செங்கையினழகும், இடையினியல்பும் உங்கள் வருணனையில் பெறுகிற இடத்தை அந்த—அவை.....வென்றுவிடுகின்றனவோ! அவைகட்கும் பகையுண்டா புலவரே இல்லை, இல்லை அவைகளை எந்தப் பகையும் வெல்ல முடியாதிருக்க அவைகட்கெங்கே பகை தோன்றப் போகிறது? "இரு கொங்கை கொடும்பகை வென்றனமென்று குழைந்து குழைந்தாட 'கற்பனையின் சிகரத்துக்கே சென்றுவிட்டீரையா!'

(11-ம் பக்கம் பார்க்க)

பெற்றூர் ஆசிரியர் சங்கம்

கலஹா அரசினர் தமிழ்ப் பாலர் பாடசாலை பெற்றூர் ஆசிரியர் சங்கக் கூட்டமொன்று திரு எஸ். எம். கந்தசாமி தலைமையில் சென்ற 5-3-55ல் கூடியது.

அவ்வமயம் தலைமையாசிரியர் திரு வீ. பீ. ஆறுமுகம் பெற்றூர் ஆசிரியர் சங்கத்தின் அவசியத்தையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

மேற்படி சங்கத்திற்கு புதிய கட்டிடம் ஒன்று கட்டுவதையிட்டு கலந்தாலோசிக்கப்பட்டது. பின் நன்றியுரையுடன் கூட்டம் கலைவுற்றது.

பலதாரமணத்தை இஸ்லாம் மறுக்கவில்லை

என்றாலும் ஒருதாரமுள்ள ஆடவனை மணக்க மறுப்பதன் மூலம் பிரச்னையைத் தீர்க்கலாம்

இஸ்லாமிய உலகம்

ஏ. எல். ஏ. மஜீத்

இன்று முஸ்லிம் உலகில் பலதார மணத்தைப்பற்றிப் பல பத்திரிகைகள் பல விதமாகக் கூறுகின்றன. இவ்விஷயத்தில் பாகிஸ்தானிய பத்திரிகைகள் அதிகம் பங்கெடுத்து பலதார மணத்தை நிறுத்த வேண்டுமென்றும், பெண்களுக்கு இம்சை செய்யக்கூடாதென்றும் ஆலோசனை கூறுகின்றது. மேல்நாட்டு முஸ்லிம் நங்கைகளும் இந்த பலதார மணத்தை ஆண்கள் நிறுத்த வேண்டும் அல்லது பெண்களுக்கும் பலதார மணம் செய்ய அனுமதி கொடுக்க வேண்டுமென்று உரிமைக் குரல் எழுப்புகின்றனர்.

ஆண்களோடு பெண்களும் சமஅந்தஸ்துடையவர்கள், ஆனால் ஆண்களுக்கிருக்கும் சுதந்திரம் வேறு முஸ்லிம் பெண்களுக்கிருக்கும் சுதந்திரம் வேறு; ஆண்களைப் போன்று பெண்களும் வெள்ளைக்கார நடையிலே நாள் முழுதும் அலைந்து திரிய முடியுமென்று எண்ணுவது தவறு.

பலதார மணத்தை மேல் நாட்டுப் பெண்கள் மட்டுமென்ன இலங்கைவாழ் முஸ்லிம் பெண்களும்கூட இதை கண்டிக்கிறார்கள். ஆனால் மேற்குறிப்பிட்டவர்கள் இஸ்லாமிய சரித்திரத்தை நன்கு படித்தார்களோ என்னவோ. ஆனால் இஸ்லாம் பலதார மணத்தைக் கண்டிக்கவில்லை. ஆதரிக்கிறது. இஸ்லாம் மதம் பலதார மணத்தைக் கண்டித்தால் எப்படி முகம்மது நபி (ஸல்) அவர்கள் பலதார மணத்தைத் தங்கள் வாழ்வில் சாதிக்க முடியும்? விதவைகளுக்கு வாழ்வளிக்கச் செய்தார்கள் நபி (ஸல்) என்று சிலர் சொல்வார்கள். யுத்தங்கள் பல அக்காலத்தில் நடந்ததால் அதில் ஆண்கள் அதிகமாக இறந்துவிட்டார்கள் எனவே அதிக பெண்கள் அனுதைகளாக்கப்பட்டு விட்டார்கள், அத்தோடும் ஆண்களைவிட பெண்கள் கூடுதலாகிவிட்டார்கள் ஆகவே தான் அன்று பலதாரமணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சிலர் கூறுவார்கள். இப்படிப் பலப்பல காரணங்களை 'பலதார மண ஒழிப்பு' இயக்கத்தினர் சொல்வார்கள். மேடைகள் அமைத்து பேச்சுமாரிகள் பொழிவார்கள்.

எவர் எதையும் எப்படிச் சொன்னாலும் இஸ்லாம் மட்டுமே தவிரச் சொந்த நாட்டுப் பண்பாட்டைப் பற்றி இவர்களுக்கு ஒன்றும் தெரியாது" எனக் கருதுபவன் சிதம்பரம்! எனவே பழைய தமிழிலக்கியங்களில் இந்தப் பந்தடித்தலைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள், நமது கவிஞர்கள் என்று சிந்தனை செய்தான். கம்பராமாயணத்திலே "பந்தினை யிளையவர் பயிலிடம்" என்று ஒரு அடி இருக்கிறதாக அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதைத் தொடர்ந்து சிதம்பரத்தின் சிந்தனை வேகமாக நிகழ்ந்தது. எத்தனை, எத்தனையோ புலவர்களை யெல்லாம்சந்தித்துச்சென்ற சிதம்பரத்தின் சித்தனையிலே சமீபகாலத்தில், இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து மறைந்த திரிகூடராசப்பாக் கவிராயரின் ஞாபகம் எழுந்தது. அப்புலவர் பெருமகனரின் குற்றாலக்குறவஞ்சிப் பாடல்கள் சிதம்பரத்தின் உள்ளத்திலே துள்ளிக் குளம்பின. பந்தடித்து விளையாடும் பாவையரைப்பற்றிப்பாடியிருக்கும் திரிகூடராசப்பாக் கவிராயரின் புலமையிலே அவன் மனம் ஈடுபட்டுவிட்டது. திரிகூட ராசப்பரே தன்முன்னின்றுபாவையர்பந்தடித்து விளையாடும் காட்சியொன்றைக் காட்டுவதாக அவன் உணர்ந்தான். சிதம்பரமும், திரிகூடராசப்பக் கவிராயரும் பாவையர் பந்தடித்து மகிழும் காட்சியைக் கண்டு அப்படியே சொக்கிப் போய் விட்டனர். இதோ திரிகூட ராசப்பாக் கவிராயர் பேசுகிறார்!

"செங்கையில் வண்டு கலின்
கலினென்று
செயஞ் செயமென்றுட
—இடை
சங்கத மென்றுசிலம்பு
புலம்பொடு
தண்டை கலந்தாட—இரு
கொங்கை கொடும்பகை
வென்றனமென்று
குழைந்து குழைந்தாட
—மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த
சவுந்தரி
பந்து பயின்றனளே!"

"அட, அட என்னப் பிரமாதம்! புலவரே, உம்முடைய வருணனை அந்தத் துடியிடையாளின்பந்து விளையாட்டினையே வென்றுவிட்டதையா! சே, என்னுடைய கண்கள் என்ன புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இன்று இந்தக் காட்சியை காண! புலவரே, உமது உதவிக்கு எனது மனமார்ந்த நன்றி. இவ்வளவு காலமும் உதட்டுச் சாயத்தையும், தையற் கடைக்காரனையும் தஞ்சமடைந்து, பந்தடி மட்டையைக் கையிற் பிடித்துக் கொண்டு 'சதிராட்டம் ஆடுகின்ற' எங்கள் காலத்துப் பெண்கள் எங்கே! நாம் இங்கே காணுகின்ற அழகரசிகளெங்கே! புலவரே, அவர்கள் நடை, உடை, ஒய்யாரம் எல்லாம் எப்படி இருக்கிறது! வைத்த கண்களை வாங்க முடியாமலல்லவோ இருக்கிறது!. செங்கையினழகும், இடையினியல்பும் உங்கள் வருணனையில் பெறுகிற இடத்தை அந்த—அவை.....வென்றுவிடுகின்றனவோ! அவைகட்கும் பகையுண்டா புலவரே இல்லை, இல்லை அவைகளை எந்தப் பகையும் வெல்ல முடியாதிருக்க அவைகட்கெங்கே பகை தோன்றப் போகிறது? "இரு கொங்கை கொடும்பகை வென்றனமென்று குழைந்து குழைந்தாட 'கற்பனையின் சிகரத்துக்கே சென்றுவிட்டீரையா!'

(11-ம் பக்கம் பார்க்க)



இஸ்லாமிய உலகம்

டும்—"ஒரு மனைவியை வைத்திருப்பதுபோல மற்ற மனைவியையும் அதேபோல் வைத்திருக்க யாராலும் முடியுமென்றால் பலதார மணம் யாரும் செய்யலாம்" என்ற கருத்துப்பட கூறுகிறது.

இன்று முஸ்லிம் உலகில் இப் பலதார மணத்தை ஒழிக்க முன்வந்த இஸ்லாமியத் தங்கச்சிமார்கள் பலதார மணத்திற்கு மூலகாரணமாகயிருப்பவர்கள் ஆண்கள் என்று ஆண்களைப் பலவிதமாகத் திட்டுகிறார்கள். ஆனால் தங்களுடைய இனத்தைச் சார்ந்த பெண்கள் ஆண்களை விரும்பாவிட்டால், காதல் கொள்ளாமல் விட்டால், ஆண்கள் அவர்களை எப்படி மணக்க முடியும்? அதுமட்டுமல்லாமல் திருமணம் செய்துகொண்ட ஒரு ஆடவனுக்கு தன்னிலும் மனைவியாகக் கொடுக்கும் பெற்றோர்களை அவர்கள் கண்டித்தாலென்ன? ஒரு திருமணம் செய்து இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்கும் ஒரு ஆடவனை இன்றுள்ள சூழ் நிலையிலுள்ள ஒரு பெண் காதலிக்கிறாள். ஆனால் அக் காதலிக்கும் பெண், பெண் இனத்திற்கே துரோகம் செய்கிறாள் என்பதை தான் உணருகிறாளல்ல? இப்படிப் பட்ட பெண்கள்தான் பல தார மணத்தை ஆதரித்து வளர்க்கிறார்கள் ஆகவே இக் கோரப் பழியை ஆண்கள் மேல் போட்டு அவர்களை அப்படியும் இப்படியும் திட்டுவது தவறல்லவா!

இனறுள்ள கல்விகற்ற அல்லது கற்காத முஸ்லிம் பெண்கள் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு அடிபணிந்து நடந்தால் பலதார மணம் அதிகமாகக் குறைந்துவிடும் என்பது எனது திடமான நம்பிக்கை. எனவே சகோதரிகள் ஆண்களை அவமானப் படுத்தாமல் திருமணம் ஆகிய பெண்ணின் உரிமைக்காக வாதாடினால் போற்றத் தக்கது. திருமணம் ஆகிய பெண்ணின் கணவனை வேறு எப்பெண்ணும் மணந்து கொள்ளக்கூடாது என்ற போராட்டத்தை சகோதரிகள் ஆரம்பித்து நடத்தினால் ஒருவேளை வெற்றியளிக்கக் கூடும். ஆகவே பலதார மணத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவதற்கு இனிமேலாகுதல்

இன்ஷூரன்ஸ் சம்பந்தமானதா .....
கலந்தாலோசியுங்கள்!
வான் காட்
குறைந்த சிலவில் நிகரற்றசேவை
★ மோட்டார். ★ ஆயுள்.
★ தொழிலாளர் நஷ்டஈடு.
கே. கிருஷ்ணசாமி
பிரதம ஏஜன்ட்
வான்காட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட
மன்சூர் கட்டடம்
மெயின் விதி, கொழும்பு—11.
போன்: 5054 தந்தி: கார்டியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்தீரன்
SUTANTIRAN

1955 மார்ச் மாதம் 20ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

கண் திறந்ததா?

நீதியரசர் திரு நாகலிங்கத்தின் பிரச்னை ஜனப்பிரதிநிதிகள் சபையின் விவாதத்திற்கு வந்து, எதிர்பார்க்கப்பட்ட முடிவை அடைந்துவிட்டது.

தமிழ்ப் பேசும் பிரதிநிதிகளில் மூவர் மட்டும்தான் இந்த அநியாயத்தை எதிர்த்து வாக்களித்தார்கள். அவர்களில் இருவர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

திருவாளர்கள் எஸ். நடேசன், வி. குமாரசாமி, வி. நல்லையா, ஆர். பி. கதிராமர். எஸ். எம். இராசமாணிக்கம், ஸி. சிற்றம்பலம், ஏ. எல். தம்பிஐயா ஆகியோர் அரசாங்கத்தின் செயலை ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். உயர் பதவி வகித்த ஒரு தமிழ் மகனுக்கு கண்ணுக்கு முன்னே இழைக்கப்பட்ட இந்த அநீதியை எதிர்த்து நிற்கும் இனப்பற்றும், துணிச்சலும் இவர்களுக்கு எற்படவில்லை. அறத்தைக் காப்பதற்காக உயிரையும் திரணமாக மதித்த தமிழினம் இன்று பதவிக்காகப் பல்லிளித்து நிற்கும் காட்சி இது.

நீதியரசர் திரு நாகலிங்கத்தை ஏன் பிரதம நீதியரசராக நியமிக்கவில்லை என்பதற்கு ஒரு நீண்ட அறிக்கையை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்திருக்கிறார் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை. இந்த அறிக்கை வெறும் அபத்தக் களஞ்சியமாக இருக்கிறதே தவிர, அரசாங்கத்தின் செயலுக்கு தக்க காரணங்களைத் தருவதாயில்லை.

இன்னுரைத்தான் பிரதம நீதியரசராக்க வேண்டும் என்பதற்கு எதுவித சட்டதிட்டமும் கிடையாது. ஆனல் மாண்டுபோன பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா, அட்டோர்னி ஜெனரல் பதவி வகிப்பவரையே பிரதம நீதியரசராக உயர்த்த வேண்டும் என்ற கொள்கையை உடையவராய் இருந்தாராம். திரு பஸநாயகாவைப் பிரதம நீதியரசராக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேதான் அவரை அட்டோர்ணி ஜெனரலாக நியமித்தாராம். நியமித்தது மட்டுமல்ல அவரைப் பிரதம நீதியரசராக்குவதாக வாக்குறுதி வேறு கொடுத்திருந்தாராம்!

ஆனல் திரு சேனநாயகா உயிரோடு இருக்கையில் செய்த காரியம் அவருடைய கொள்கைக்கே மாறுனதாக இருந்தது. சேர் ஜோன் ஹாவார்ட் பிரதம நீதியரசராக விருந்தபோது சேர் அலன்ரோஸ் அட்டோர்ணி ஜெனரலாக விளங்கினர். திரு சேனநாயகாவின் கொள்கைப்படி சேர் ஹாவார்ட்டுக்கு அடுத்தபடியாக சேர் அலன்ரோஸ் பிரதம நீதியரசராக உயர்த்தப்பட்டிருக்கவேண்டும். அப்படி நடைபெறவில்லை. சேர் அலன்ரோஸ் அட்டோர்ணி ஜெனரலாக இருந்தபடி இருக்க, நீதியரசர் விஜயவர்தனவும், நீதியரசர் ஜயதிலகாவும் ஒருவர்பின் ஒருவராக பிரதம நீதியரசர்களாக உயர்த்தப்பட்டனர். அப்போது திரு சேனநாயகாவின் கொள்கை எங்கே போயிற்று? இந்த அநுசாரணத்தின்படி. திரு பஸநாயகா அட்டோர்ணி ஜெனரலாக இருந்தபடி இருக்க, திரு பஸநாயகாவைவிட 9 வயது மூத்தவரான திரு நாகலிங்கம்தான் பிரதம நீதியரசராக உயர்த்தப்பட்டிருக்கவேண்டும். ஏன் அப்படி நடைபெறவில்லை? இதற்கு உள்ள ஒரே காரணம் திரு நாகலிங்கம் ஒரு தமிழர் என்பதுதான்.

"பிரதம நீதியரசரின் நியமனம் பிரதம மந்திரியின் சிபார்சுப்படி செய்யப் படுவதாகும். யாரை வேண்டுமோ அவரைச் சிபார்சு செய்யும் உரிமை பிரதமருக்கு உண்டு" என்று வீரப்பாகப் பேசியிருக்கிறார் சேர் ஜோன் ஜனப்பிரதிநிதிகள் சபை விவாதத்தின்போது. இது உண்மைதான். ஆனல் சகல உரிமையும், திறமையும், தகுதியும், வயதின் முதுமையும், அட்டோர்ணி ஜெனரலைவிட நீடித்த சேவையும் உடைய திரு நாகலிங்கத்தை சிபார்சு செய்ய ஏன் சேர் ஜோனுக்கு மனம்வரவில்லை என்றுதான் நாம் கேட்கிறோம். அவருக்கு மனம் வராத காரணம் திரு நாகலிங்கம் ஒரு சிங்களவராய் இல்லாததுதான்.

முக்கிய பதவிகளை இலங்கையர் மயமாக்கும் கொள்கையை அனுசரித்தே இந்த கந்தறுகோளங்கள் எல்லாம் செய்யப்படுவதாக சாக்குப் போக்குச் சொல்லப்படுகிறது. உண்மையில் அனுஷ்டிக்கப்படுவது இலங்கையர் மயமாக்கும் கொள்கையல்ல; சிங்களர் மயமாக்கும் கொள்கை.

இந்த உண்மையை நாம் நீண்டகாலமாக சொல்லி வருகிறோம். ஆட்சியாளர் உக்கிரமான வகுப்பு வாதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள் என்று சுட்டிக்காட்டி வருகிறோம். தனக்கு வந்தால்தான் தம்பிக்கு கண்திறக்கும் என்பதுபோல் திரு சுந்தரலிங்கம் போன்றோருக்கு இப்போதுதான் தெரிகிறது.

"திரு நாகலிங்கத்திற்கு நடந்திருப்பது தமிழர்களை ஒழித்துக்கட்டும் சதியின் ஒரு பகுதிதான்!" என்று திரு சுந்தரலிங்கம் இப்போதுதான் கதறுகிறார். திரு ஜீ. ஜீ. பொன்னம்பலமும் தமது மந்திரிப் பதவி பறந்த பின்னரே இப்படிக் கதறத் தலைப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படியே கதறும் காலம் திருவாளர்கள் நடேசன், நல்லையா, குமாரசாமி ஆகியோருக்கும் அதிக தூரத்திலில்லை.

திரு சுந்தரலிங்கம் போன்றோர் தனி மரமாக நின்று குளறிக் கூத்தாடுவதனல் காரியம் ஒன்றும் ஆகாது. ஆட்சியாளர் வடிகட்டிய வகுப்பு வாதிகளாக விளங்குகின்றனர். ஆனல் தங்கள உரிமைக்காகப் போராடும் தமிழரசுக் கட்சி போன்ற தமிழர்களின் அரசியல் கட்சிகளை வகுப்புவாதக் கட்சிகள் என்று வாய் கூசாமல் சொல்லுகின்றனர். இந்தக் கூச்சலுக்கு சிந்திக்காமல் செவியைக் கொடுக்கும் குணம் திரு சுந்தரலிங்கம் போன்றோருக்கு உண்டு. தமிழரசுக் கட்சியின் போராட்டம் எவ்வளவு நியாயமானது என்பதைத் திரு சுந்தரலிங்கம் இப்போதாவது உணர்ந்திருக்கவேண்டும். இன்னுமின்னும் வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொண்டிராமல் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை ஸ்தாபன ரீதியாகக் காட்டக்கூடிய வகையில் அவரும் தோளோடு தோள் நின்று போராடுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

'பருப்பு'களை ஒழித்துவிட்டார்களாம்! அடுத்தது 'பனங்கொட்டைகளா'?

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு வாக்குரிமை பிரஜா உரிமைகளை மறுத்தது தானது காலஞ் சென்ற தகப்பன் சேனநாயகா காலத்திலிருந்தே திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட ஒரு சதியாகும் என்று நாம் சொல்லி வருகிறோம். இலங்கையின் அரசியல் அதிகாரங்கள் யாவையும் சிங்களவர்கள் கைப்பற்றிக் கொண்டு தமிழர்களை ஒதுக்கித் தள்ளுவதுதான் இந்தச் சதியின் அந்தரங்கம். அரசியல் அதிகாரங்களை முழுவதும் கைப்பற்றுவதற்கு முதற்படியாக பாராளுமன்றத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் பலத்தைக் குறைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். இந்த திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாய் அமைந்தது. முதற்பகுதியை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டார்கள். இரண்டாவது பகுதியை விரைவில் நிறைவேற்ற காரியமாற்றி வருகிறார்கள்.

முதற்பகுதி மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து, அவர்களுடையபிரதிநிதிகள், பாராளுமன்றத்தில் இடம் பெறுமல் செய்யப்பட்டதாகும்.

இரண்டாவது பகுதி தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களை அபரிமிதமாக குடியேற்றி காலவரையில் தமிழ் மக்களை அப்பகுதிகளில் சிறுபான்மையினராக்கி விடுவது. இப்படிச் செய்து விட்டால் தமிழ் மக்கள் இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களில் தமிழ்ப் பிரதிநிதிகளை அங்கிருந்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவது சாத்தியமற்றதாகிவிடும். வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் பிரதிநிதிகளும் சிங்களவர்களாகவே இருப்பார்கள். திட்டத்தின் இரண்டாவது பகுதியும் நிறைவேற்றப்பட்டு விட்டால் தமிழ்ப் பேசும் இனம் இலங்கையிலிருந்து பூண்டோடு அழிக்கப்பட்டது என்பது தான் முடிவு.

இந்த சதியின் முதல் பகுதி எப்படித் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டது என்ற விவரத்தை சேர். ஜோன் கொத்தலாவலை கடந்தவாரம் பகிரங்கமாகவே வாய்விட்டுச் சொல்லியிருக்கிறார். கண்ணியத்தோடு சொன்னதல்ல மலைநாட்டுத் தமிழ்மக்களை 'பருப்பு' என்ற பதப் பிரயோகத்தை உபயோகித்து இழிவுபடுத்திச் சொல்லியிருக்கிறார். இந்த சம்பவதை இலங்கையிலுள்ள எந்தப் பத்திரிகையுமே வெளியிடவில்லை. சுதந்திரன் ஒன்றுதான் இப்போதுவெளியிடுகிறது.

லேடி மொலமுரே சனட் சபையின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதையொட்டி கடந்த வாரம் அவருக்கு ஜீ. ஓ. ஏச். உணவு சாலையிலொருவிருந்துபசாரம் அளிக்கப்பட்டது. அந்த விருந்தில் கலந்து கொண்ட பிரதமர் சேர். ஜோன். லேடி மொலமுரேயைப் பாராட்டிப் பேசினர். அப்போதுதான் ஒரு நாட்டின் பிரதமருக்கு அடுக்காத கீழ்த்தரப் பாஷையில் மலைநாட்டுத் தமிழ் மக்களை 'பருப்பு' என்று குறிப்பிட்டார்.

அவர் பேசியதாவது "இந்நாட்டின் அரசியலில் ஈடுபட்ட முதற் பெண்மணி லேடி மொலமுரே ஆவர். சட்டசபையில் ஒரு அங்கத்தவராகப்பிரவேசித்த முதல் பெண்மணியும் அவரே. என்னுடைய அரசியல் வாழ்க்கையை முதன் முதல் ஆரம்[illegible]

விருந்தில் கலந்துகொண்ட பிரதமர் சேர். ஜோன். லேடி மொலமுரேயின் கடந்தகால அரசியல் சேவைகளைப் பாராட்டிப் பேசினர். அப்போதுதான் ஒரு நாட்டின் பிரதமருக்கு அடுக்காத கீழ்த்தரப் பாஷையில் மலைநாட்டுத் தமிழ் மக்களை 'பருப்பு' என்று குறிப்பிட்டார்.

அவர் பேசியதாவது "இந்நாட்டின் அரசியலில் ஈடுபட்ட முதற் பெண்மணி லேடி மொலமுரே ஆவர். சட்டசபையில் ஒரு அங்கத்தவராகப்பிரவேசித்த முதல் பெண்மணியும் அவரே. என்னுடைய அரசியல் வாழ்க்கையை முதன் முதல் ஆரம்பித்தவரும் அவரே. அரசாங்கப் பதவி வகிப்பதும் சபைக்கு முன்பிருந்த சட்ட நிருபண சபைக்கு அவர் ஒரு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். அடுத்த பொதுத் தேர்தல் வந்த போது அவர் டாக்டர் என். எம். பெரேராவுடன் போட்டியிடவேண்டி ஏற்பட்டது. காலஞ் சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகாவும் நானும் இந்தத் தேர்தலில் லேடி மொலமுரேக்காக மிகவும் பாடுபட்டு உழைத்தோம். ஆனல் டாக்டர் என். எம். பெரேரா முன்னூறு, நானூறு வாக்குகளால் வெற்றி கண்டார். அவர் வெற்றியடைவதற்கு காரணமாயிருந்தவை இலங்கை இந்தியரின் வாக்குகள் தாம். அன்றே இந்தப் பருப்புகளின் அபாயத்தை நாம் உணர்ந்தோம். அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று முடிவு செய்தோம்.....

பருப்புகளை ஒழித்துக்கட்டிய படலத்தை இப்படி வாய்கூசாமல் பகிரங்கமாகப் பேசும் நிலைமை இன்று ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற இன்னுமின்னும் தவறுவார்களானல் மேலும் சில வருடங்களில் "பனங் கொட்டைகளை ஒழித்துக் கட்டிவிட்டோம்" என்று சிங்கள அரசியல் தலைவர்கள் எக்காளம் இடும் காலம் வந்தே தீரும். ஆனல் அந்த நிலைமை ஏற்படுவதற்கு முன் தமிழ்ப் பேசும் மக்கள் விழித்துக் கொள்வார்களா?

★

பிரதமர் சேர் ஜோன் மேற்படி விழாவிற்கு வந்தவுடன் நடைபெற்ற ஒரு சிறு நிகழ்ச்சியை நமது அரசியல் ஒற்றர் அறிவிக்கிறார். அதையும் நமது வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற நீதியரசர் திரு நாகலிங்கத்தின் விவாதத்தில் கலந்துகொண்டு நேரே ஜீ. ஓ. எச். உணவு விடுதிக்கு வந்து சேர்ந்தார். அங்கு லேடி மொலமுரேயின் விருந்து ஏற்பாடாகியிருந்தது. ஜனப்பிரதிநிதிகள் சபையிலிருந்து நேரே வந்ததனல் அவர் விருந்துக்குரிய உடை தரித்திருக்கவில்லை. சாதாரண உடையிலேயே வந்திருந்தார்.

ஒரு இடத்தில் நீதி மந்திரி திரு ஈ. பி. விக்ரமநாயக, சேர் கந்தையா வைத்தியநாதன், சேர் விக்டோரியா ஆகியோர் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு சேர் ஜோன் வந்து சேர்ந்ததும் அவருக்கும், நீதி மந்திரி திரு விக்ரமநாயகாவிற்குமிடையே பின் வரும் சம்பாஷணை நடைபெற்றது:

சேர் ஜோன்: (நீதி மந்திரியைப் பார்த்து) ஹலோ எரிக். உனக்கும் நாகலிங்கத்திற்குமிடையே இவ்வளவு கடிதப் போக்கு நடைபெற்றதாக நீ எனக்குச் சொல்லவே இல்லையே!

நீதி மந்திரி: ஏன் சொல்லவில்லை. சொன்னேனே.

சேர் ஜோன்: இல்லை, இல்லை. நீ சொல்லவேயில்லை. எவ்வளவு தொந்தரவாகப் போய்விட்டது.

நீதி மந்திரி: ஏன் சொல்லவில்லை. நான் சொல்லத்தான் செய்தேன்.

சேர் ஜோன்: சொன்னதெல்லாம் சொல்லாவிட்டாலென்ன. அந்தப் பயலுக்கு சரியான பாடம் படிப்பித்து விட்டேன். (I have taught that fellow a lesson) தற்காலி

வேலைநிறுத்தம்

வேலைநிறுத்தம் என்பதுதான் கடந்தவாரம் பொதுமக்களையும் பத்திரிகைகளையும் கவர்ந்த செய்தியாகும். கொழும்பில் பற்பல இடங்களில் இந்த வேலை நிறுத்தம் தலைகாட்டிற்று. ஆனல் சவுத் வெஸ்டன் பஸ் கம்பனி ஊழியர்களுடைய வேலைநிறுத்தம்தான் மிகப் பெரிய வேலைநிறுத்தமாக விளங்கிற்று. இந்த வேலை நிறுத்தத்திற்கு கூறப்படும் மூலகாரணம் அற்பமானதாகக் காணப்படுகிறது. தொழிலாளிகளும் முதலாளியும் சற்று அவசரபுத்தியைத் தவிர்த்திருந்தால் இந்த வேலைநிறுத்தத்தைத் தடுத்திருக்கலாம்.

வேலைநிறுத்தத்தினல் கஷ்டப்படும் தொழிலாளர் ஒருபுறம், போக்குவரத்திற்கு வாகனங்கள் கிடைக்காமல் அல்லல்படும் பொதுமக்கள் ஒருபுறம். இதற்கிடையே தங்கள் தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடுவதில் முனைந்திருக்கிறார்கள் இடதுசாரித் தலைவர்கள். இது மிகவும் கேவலமாகும்.

வேலைநிறுத்தம் நீடிக்க வேண்டும் என்றும் அதனல் பொதுமக்கள் கஷ்டப்பட வேண்டுமென்றும் நாம் ஆசைப்படவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சமரசம் ஏற்பட வேண்டும் என்பதுதான் நமது விருப்பம். அதற்கு தொழிலாளர்களிடையேயும் முதலாளிகளிடையேயும் ஓரளவு விட்டுக் கொடுக்கும் சுபாவம் ஏற்பட வேண்டும். முதலாளிகள் தொழிலாளரை எறிந்து பேசி அலட்சியப்படுத்துவதும், வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளிகளைத் தண்டிப்பதற்காக நீண்டநாள் வேலை செய்த அவர்களை விலக்கிவிட்டு புதுத் தொழிலாளரை நியமித்துக்கொள்வதும் தகாது. இப்படியான செயல் தற்காலிகமாக வெற்றி கண்டாலும் நீண்டகால பயனைத் தர முடியாது. அதேபோல தொழிலாளர் தாம் கோரியவை எல்லாவற்றையும் ஒரேயடியாக முதலாளிகள் கொடுத்துவிட வேண்டும் என்று குரங்குப் பிடியாய் நிற்கவும் கூடாது. ஓரளவு நியாயமான சலுகைகள் கிடைத்தாலும் அப்போதைக்கு ஏற்றுக் கொண்டு பொதுமக்களின் நலத்தில் கருத்து வைத்தும் பணி புரிய வேண்டும்.

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்திலும் பொலீஸிலும் நம்பிக்கை வைக்க முடியாது

பிரதமரின் அந்தரங்கச் செய்தி

நாட்டுப் புறங்களில் பாதுகாப்புப் படை நிறுவ வற்புறுத்தல்

மாகாண அதிபர்களுக்கு சேர் ஜோனின் இரகசிய சுற்றறிக்கை

(நமது நிருபர்)

இராணுவத்திலும், கப்பல் படையிலும், பொலீஸிலும் "முழு நம்பிக்கை வைக்க முடியாது" என்று இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை அந்தரங்க அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

உள்நாட்டு மந்திரியின் மூலம் இலங்கையிலுள்ள சகல அரசாங்க மாகாண அதிபர்களுக்கு அனுப்பியுள்ள இரகசிய சுற்றறிக்கை ஒன்றிலேயே மேற்கூறியவாறு பிரதமர் அறிவித்திருக்கிறார்.

இன்று நாம் இராணுவ, பொலீஸ் பலத்தை பிரமாண்டமான அளவு கட்டிக் கொண்டிருந்தாலும் அந்த பலத்திலேயே அரசாங்கம் நம்பியிருக்க முடியாது என்று ஜோர் ஜோன் கொத்தலாவலை தமது அறிக்கையில் எழுதியிருக்கிறார்.

அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் தாம் இரண்டு பகுதிகளிடம் மட்டுமே நம்பிக்கை வைத்திருப்பதாகவும், அரசாங்க மாகாண அதிபர்களும், கிராம அதிகாரிகளுமே அந்த இரு பகுதிகள் என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

தேசிய ரீதியில் நாட்டிலே அவசரகால நிலை ஏற்பட்டால் "ஆதரவுக்கு" இந்தப் பகுதிகளையே தாம் முற்றும் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

நாடு பூராவும் "தேசிய பாதுகாப்பு அணிகள்" நிறுவும் அரசாங்கத் திட்டத்தை அரசாங்க மாகாண அதிபர்களும், தலைமை அதிகாரிகளும் முழுமூச்சுடன் அமுல் நடத்தவேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

"நீங்கள் இந்தக் காரியத்தில் முன்வந்தால் நாட்டிலிருந்து அரசியல் காடையர்களை மக்கள் மத்தியில் வாலாட்ட முடியாது செய்ய முடியும்" என்று பிரதமரின் அந்தரங்க அறிக்கை கூறுகிறது.

இராணுவத்தினரிடையும், பொலீஸினரிடையும் கொத்தலாவலை ஆட்சியின் ஜனநாயக விரோத வெறிச் செயல்கள் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதற்கான அறிகுறிகள் பகிரங்கமாக தென்படுவதாகவும் கருதப்படுகிறது. எனவே தான் இராணுவ—பொலீஸ் பலத்தில் நம்பிக்கை வைப்பது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும் என்று பிரதமருக்கு அவரது அந்தரங்க நண்பர்கள் யோசனை கூறியுள்ளதாகவும் அறிய வருகிறது. உலகப் புரட்சிகளின் சரித்திரங்களை எடுத்துக் காட்டி இராணுவமும், பொலீஸும் இறுதியில் புரட்சியின் பக்கம் சேர்ந்த உண்மைகளை இவர்கள் உறுத்திக் கூறியுள்ளார்களாம்.

எனவேதான் இராணுவத்திற்கும், பொலீஸுக்கும் பதிலாக யு. என். பிக்கு விஸ்வாசமுள்ள நபர்களைக் கொண்ட தேசிய பாதுகாப்பு படை ஒன்றை திரட்ட அரசாங்கம் முயன்று வருகிறது' இந்தப் படையினர் மக்கள் அணிகளிலிருந்தே அவர்களை 'பின் முதுகில் தாக்கும்' தந்திரத்தை கையாளுவதே சிறந்த முறை என்று ஆட்சியினர் கருதுவதாக நம்பப்படுகிறது.

சவுத் வெஸ்டர்ன் பஸ் தொழிலாளர் தமது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் ஆரம்பித்ததும் "ரத்த நீச்சலுக்கு தயாராகுங்கள்" என்றும் "இந்த நாட்டிலே மக்களுக்கு ஜனநாயகம் என்றால் என்ன என்று தெரியாவிட்டால் நான் அவர்களுக்கு படிப்பிப்பேன்" என்றும் இலங்கைப் பிரதமர் வெறி பிடித்த ரீதியில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'பருப்பு'களை....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைநிறுத்தம் என்பது இந்த நாட்டிற்கு மட்டும் புதிய சரக்கல்ல. இங்கிலாந்து அமெரிக்காபோன்ற நாடுகளிலும் தொழிலாளர் தங்கள் கோரிக்கைகளை முதலாளிகளிடமிருந்து அடைவதற்கு இந்த ஆயுதத்தையே பிரயோகிக்கின்றனர். வேலைநிறுத்தம் என்பது ஒரு சட்ட விரோதமான நடவடிக்கையுமல்ல. சமாதான முறையில் தங்கள் கோரிக்கைகளை அடைவதற்கு பிரயோகிக்கப்படும் ஒரு சாத்வீக ஆயுதம்தான் வேலைநிறுத்தம். தொழிலாளர் இந்த ஆயுதத்தைப் பிரயோகிப்பதைக் கண்டு அரசாங்கம் குடையைக் கண்ட கடாமாடு போல் வெருட்சியடைந்து பொதுமக்கள் பீதிகொள்ளும்படி படை பட்டாளங்களை அழைத்து தடபுடல் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. வேலைநிறுத்தம் ஏற்பட்ட இடத்தில் அமைதியாகத் தலையிட்டு முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையில் சமரசத்தை நிலைநாட்ட வேண்டும். இன்று அரசாங்கத்தால் அப்படிச் செய்ய முடியவில்லையென்றால் அதற்கு காரணம் இன்றைய அரசாங்கம் முதலாளிகளின் ஆதரவைப் பெற்றிருப்பது போல் தொழிலாளரின் அனுதாபத்தையும் நம்பிக்கையையும் பெறவில்லையென்பதுதான். தன்னிடத்தேயுள்ள இந்த குறைபாட்டைத் தவிர்க்க முற்படாமல், அடக்குமுறைகளினால் எல்லாம் சாதித்துவிடலாம் என இன்றையப் பிரதமர் நம்புவது இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் அனர்த்தத்தில்தான் முடியும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

இலங்கையும்-ஜப்பானும் கூட்டாக மீன் பிடிக்கும் ஆலோசனை

தன் விஸ்தீரணத்திற்குள் தலையீடு நடக்கலாம் என இந்தியாவின் ஆட்சேபனை

(நமது நிருபர்)

இலங்கையும் ஜப்பானும் மீன்பிடிப்பது சம்பந்தமாக செய்ய இருக்கும் உடன்பாடு இந்தியாவுக்கு பெரும் கவலையை அளித்திருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையும் ஜப்பானும் சேர்ந்துகொண்டால், அதன்மூலம் இந்திய நீர்வட்டத்தில் தலையீடு உண்டாகலாம் என்று இந்திய அரசாங்கம் பீதி கொண்டுள்ளதாக அறிய வருகிறது.

மேற்கூறிய விஷயம் சம்பந்தமாக, எதிர்கால மீன் பிடி திட்டத்தை இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் சமீபத்தில் கலந்தாலோசிக்கும் என்று நம்பப்படுகிறது

இந்திய அரசாங்கம் தனது பயத்தை ஜப்பானிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு சுசந்தா டி பொன்சேகா மூலம் தெரிவித்திருக்கிறது.

இந்திய அரசாங்கத்துடன் ஒரு முடிவுக்கு வருவதன் மூலம் வட இலங்கை நீர்வட்டத்தில் இலங்கையின் மீன் பிடி விஸ்தீரணத்தை எல்லைக் கோடிடுவது பிரச்னையைத் தீர்க்க சுலபமான மார்க்கம் என்று இந்தியா கருதுவதாகவும் தெரிய வருகிறது. இன்றுள்ள சர்வதேசிய நியதி மற்றொரு நாட்டின் எல்லையிலிருந்து மூன்று மைல் விஸ்தீரணத்திற்குள் புகுந்து மீன் பிடிப்பதை தடை விதித்திருக்கிறது.

இலங்கையின் பிரதேசத்திலும் வெளியிலும் ஜப்பானிய தூதுகோஷ்டி நடத்திய பரிசீலனைக்குப் பின் வெளியிட்ட அறிக்கைக்குப் பிறகே இந்தியா தனது ஆட்சேபனையை தெரிவித்தது.

இலங்கையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் கடற் தொழில் நடவடிக்கையில் இலங்கையும ஜப்பானும் உடனடியாக ஈடுபடவேண்டாம் என்று அந்த அறிக்கை இலாகா கருதுவதாகவும் தெரிகிறது.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 12

சரியான விடை

இடமிருந்து வலம்

1. பைசிக்கிள்
3. பிழைப்பு
5. கழி
6. வாகடம்
7. பேதமை
9. கடாரம்
10. பாதகம்
12. பம்பரம்
13. கனி
16. தகனம்
17. கறி
18. சிங்களம்
19. புடல்
20. கிளி

மேலிருந்து கீழ்

1. பைத்திகம்
2. கிரகம்
3. பிழி
4. புலமை
5. கம்பாயம்
6. வாரணம்
7. பேகன்
8. தம்புரா
11. சுரங்கம்
12. பனி
14. செம்பு
15. பறி
16. தளம்
17. கல்கி
18. சிகை

'படித்த முட்டாள்' படம் தயாரிக்கும் என். எஸ். கிருஷ்ணன்

'லட்சுமி'யை வீட்டில் வைத்த பிரகிருதிகள் பற்றி கிண்டல்

என். எஸ். கிருஷ்ணன் தயாரிக்கப்போகும் 'படித்த முட்டாள்' என்ற சினிமா படத்தின் ஆரம்ப விழா சென்னை கோடம்பாக்கம் வாஹினி ஸ்டுடியோவில் நடந்தது. இந்த விழாவுக்கு சினிமா நடிகர்களும், நடிகைகளும், சினிமா டைரக்டர்களும், சினிமா சம்பந்தப்பட்ட மற்றவர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள்.

என். எஸ். கிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:-

இந்தப் படத்துக்கு "படித்த முட்டாள்" என்ற தீவிரமான பெயரை வைக்க தயங்கினேம். வேறு பெயர் எதுவும் தகுதியாக இல்லாததால் இதையே வைத்துவிட்டோம். படித்துவிட்டு அகம்பாவமாகவும் அதிகப்பிரசங்கியாகவும் இருப்பவனே படித்த முட்டாள்.

இதை விளக்கி என். எஸ். கே. பின்வரும் ஒரு குட்டிக் கதையைச் சொன்னார்.

ஒரு படித்தவர் பெரிய வீடு ஒன்று கட்டினார். கிரகப்பிரவேசத்துக்கு முதல் நாள் லட்சுமி என்ற வேலைக்காரியை கூப்பிட்டு "நீ இங்கேயே காவல் இரு. காலையில் நான் வந்து கூப்பிடுவேன். அப்போது நீ (லட்சுமி) கதவை திறக்க வேண்டும்!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

லட்சுமிக்கோ இரவு பூராவும் அங்கே இருக்க பயம். அதனால் அவள் தன் அக்காவை கூப்பிட்டு காவல் இருக்கும்படி வைத்துவிட்டு வீட்டுக்கு போய்விட்டாள்.

அடுத்த நாள் காலை அந்த படித்தவர் வந்தார். 'லட்சுமி கதவைதிற' என்றார். உள்ளே இருந்து பெண்ணின் குரல் கேட்டது. "லட்சுமி இங்கே இல்லை! லட்சுமியின் அக்காதான் இருக்கிறேன்" என்று பதில் வந்தது.

(லட்சுமியின் அக்கா மூதேவி என்று புராணத்தில் சொல்லப்படுகிறது)

பாவம் வீட்டுக்காரர் 'லட்சுமி' கதவை திறக்கவேண்டும் என்று நினைத்தார். ஆனால் ஏமாந்தார். இப்படிப்பட்டவர்களைத்தான் படித்த முட்டாள்கள் என்கிறோம். இவ்வாறு என். எஸ் கிருஷ்ணன் பேசிமுடித்தார்.

இந்த வருடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே மதுவிலக்குக் கொள்கையை நிர்ப்பந்தத்தின் பேரில் கொத்தலாவலை கோஷ்டி ஏற்றுக்கொண்டதென்றும் ஆனால் உண்மையில் மதுவிலக்கை கொத்தலாவலை ஆட்சி ஒருபோதும் அமுல் செய்யாதென்றும் மேற்படி வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இது தமது பதவி வெறிக்காக கொத்தலாவலை கோஷ்டி எந்த தீர்மானத்தையும் ஏற்கும் அல்லது எதிர்க்குமே தவிர மக்களின் நலன் அடிப்படையில் அது ஒருபோதும் செயலாற்றாது என்பதையே ஸ்பட்சமாக எடுத்துக்காட்டுகிறது என்று விவாதிக்கப்படுகிறது. யூ. என். பி. மகாநாட்டிலே மதுவிலக்குத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு நடைமுறையில் சாராய உற்பத்தியை அதிகப்படுத்தும் ஆட்சியின் இந்த நடவடிக்கை மீண்டும் ஆளும் கட்சிக்குள் நெருக்கடியை சிருஷ்டிக்கலாம் என்று டட்லி கோஷ்டியுடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்கள் நம்புகின்றன.

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

புகையிரத வீதிக் கடவைத் திருத்தங்கள்

வடக்குதிசைப் புகையிரத (Northern Line) மார்க்கத்தில், அனுராதபுரம்–மிஹிந்தலை பி.டபிள்யூ.டி. வீதியைச் சந்திக்கும் அனுராதபுரம்–பரசங்கஸ்வெவா புகையிரத ஸ்தானங்களுக்கிடையில் 127 மைல் 55 சங்கிலி 60லிங்கில்லுள்ள புகையிரதக் கடவை திருத்தம் செய்வதற்காக 1955ம் ஆண்டு பங்குனிமாதம் 30ந்திகதி காலை 6மணி தொடக்கம் மறுநாட்காலை 5மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும். இக்காலத்தில் அதாவது 30ந் திகதி காலை 8மணி தொடக்கம் மறுநாட்காலை 5மணி வரைக்கும் வாகனங்கள் டிக்ஸன் வீதி றெயில்வே அப்புறோச் வீதியாற் போகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை:

பெண்மை வென்றது

'புதுமைப் பிரியை'

"நாகராஜன்—நாகேஸ்" இருவரும் இணை பிரியாத காதல் ஜோடிகள். அன்பு என்ற குளத்திலே ஆனந்தத்தில் மூழ்கி எழும் பும் இளம் தம்பதிகள். இருவருக்குமே பெற்றோரில்லை. நாகராஜனுக்கு மாத்திரம் ஒரே ஒரு சகோதரர். நாகேசுக்கு அதுவும் இல்லை. அவர்கள் இருவருடைய அன்பும் ஒடுங்கி ஒடுங்கி காண்பதெல்லாம் நாகராஜனுக்கு நாகேஸ்வரியே. நாகேஸ்வரிக்கு உலகமே நாகராஜன் தான்.

அவர்களிருவரது வாழ்க்கையிலும் 'வெறுப்பு' என்ற சொல்லே கிஞ்சித்தும் கிடைக்காது.

நாகராஜன்— நாகேஸ்
எலும்பு— தசை
நிலவு— வெண்மை
தண்ணீர்— குளிர்மை

இப்படியே நாட்கள் பல நகர்ந்து புரண்டு ஓடிக் கொண்டிருந்தன.

ஃ

அன்று.

நாகேசைப் பிரிய மனமின்றி வழக்கம்போல ஒரு வாறு பிரிந்தான் நாகராஜன்.

காரியாலய அறையிலே தொங்கவிடப் பட்டிருந்த மணி 'டிக், டிக், டிக்' என்று மனேஜரைப் போலவே அரற்றிக்கொண்டிருந்தது. நிமிர்ந்து பார்த்தான் நாகராஜன். நேரம் எட்டே முக்காலாகி விட்டது. மணிக் கூட்டிலும் கூட சிறிய கம்பியைவிட்டுப் பிரிய மனமின்றி பெரிய கம்பி ஆடி அசைந்து, சிற்றடி எடுத்து வைப்பதுபோல அவனுக்குத் தோன்றியது. அங்கேயும் கூட நாகேஸின் நினைவு தளிரிட்டது. திரும்பவும் நேரம் ஞாபகத்திற்கு வர அவனுடைய இதயம் 'டிக், டிக், டிக், டிக்' என அடித்துக் கொண்டது. வேலை அவன்முன் மலைபோல குவிந்து கிடந்தது. என்றாலும் நாகராஜன் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. வேலைக் கஷ்டத்திலும்கூட இடையிடையே நாகேஸின் முகம் அவனை எட்டி எட்டிப் பார்த்தது.

நாகேசும்தன் வேலை நேரத்திலும் போதுகூட நாகராஜனை நினைத்தபடி பூஜித்தபடியே இருப்பாள். வீட்டு வேலையை முடித்துவிட்டு நாகராஜனுடைய வேலைக்குக் கூட எவ்வளவோ உதவுவாள். நாகராஜனுக்கு வரும் அநேகமான கடிதங்களுக்கு பதில் எழுதும் லிகிதர் வேலை கூட நாகேஸிடம்தான்.

அன்றும் வழக்கம்போல கடிதங்களுக்கு பதில்போட ஆரம்பித்தாள். இல்லை! தன் முத்துக்களை வெள்ளைத் தாளிலே அடுக்கி அழகு பார்த்தாள். அழகிய ஆரமாக்கினாள். அதில் கருத்தும் ஒளிவிட்டுக் கிடந்தது.

நீண்ட உறையுடனிருந்த கடிதமொன்றைப் பிரித்துப் படித்தாள் நாகேஸ். அதில் நாகராஜனுக்கு கொழும்புக்கு வேலை மாற்றமெனக் குறிப்பிட்டிருந்தது. அதை இருந்ததுபோலவே வைத்து விட்டு அவசர கடிதங்களுக்குப் பதில் தீட்டிய படியிருந்தாள்.

ஃ

புதுஇடம், புது வீடு, புதுப் புது நண்பர்களும் முகங்களும். என்றாலும் நாகராஜன் தம்பதிகளுக்கு சந்தோஷம் கரை புரண்டோடியபடியே இருந்தது.

அடுத்த வீட்டில்.

வயது சென்ற ஒரு கிழவி. காந்தாவும், மோஹனும் அக்கிழவியின் கண்கள். பேரப்பிள்ளைகள் என்றாலும் கூட தன் சொந்தப் பிள்ளைகளைப் போலத்தான் கிழவி அவர்களுடன் நடந்து கொள்வாள். காந்தாவுக்கு, மோஹனுக்கும் கூடத்தான், 'அம்மம்மா' என்று அரை நிமிடத்தில் ஐம்பது முறை சொல்லாவிடில், சாப்பிட்டதுபோல திருப்தியாயிராது. அவ்வளவு தூரம் அந்தக் கிழவிமேலே உயிர் அவர்களுக்கு. கிழவியின் கண் மணிப் பாவைகளாகிவிட்டனர் காந்தாவும் மோஹனும் அண்ணாவும் தங்கையும் வீட்டுக் காரியங்கள் தொடக்கம், அரசியல் ஈறாக கலகலவெனப் பேசியபடியே இருப்பார்கள். அவர்கள் பேச்சிலே அறிவுசுடர்விடும், அன்பு பசையாகிக் கிடக்கும். கேலி தளிர்விட்டு பேச்சிற்கு அத்திவாரமிடும். அவர்கள் அம்மம்மாவும் அவர்களுடைய பேச்சைகளைப் பின்றிக் கேட்டுக் கொண்டேயிருப்பாள்.

மோஹனும் காந்தாவும் ஒன்றாகவே படித்து வந்தார்கள். இண்டர் பரீட்சையில் காந்தா பெயிலாகிவிடவே மேலே படிக்க விருப்பின்றி தன் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டாள். என்றாலும் அவள் கண்ணில் படாத பத்திரிகைகள் எதுவுமே இல்லை எனலாம். தவறாது புதினங்களையும், மற்றும் விடயங்களையும் படித்து வருவாள். படிப்பை நிறுத்தி ஒன்றரை வருடத்தின் பின்னர்தான் தான் ஏன் படிப்பை நிறுத்தினோம் என்ற எண்ணம் தோன்றியது. என்றாலும் காந்தா மோஹனும் ஏதாவது வாசித்தா கொண்டேயிருப்பாள்.

பொழுது போகாதிருந்த காந்தாவுக்கு அண்டை வீட்டாரின் வருகை ஆனந்தமாக இருந்ததுநாகேசுடன்மாத்திரமல்ல நாகராஜனுடன்கூட காந்தா அன்பாக அளவளாவுவாள். காந்தாவின் எதிர்த்து வாதாடும் தன்மை நாகராஜனுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. நாகராஜனே அத்தானென்றும், நாகேசை அக்காவென்று மே காந்தா அழைப்பாள். நாகராஜன் வீட்டிற்கு வந்தால் உவகை பொங்கும் உளத்துடன்வரவேற்பாள்காந்தா.

இப்படியாக நாட்கள் வாரங்களைப் பெற்று வாரங்கள் மாதங்களைப் பெற்று, மாதங்கள் வருடங்களைப பெற்ற களைப்பில் ஓய்வெடுத்தன. ஆனால் 'காந்தா, நாகராஜன், அன்புப் பரிமாறல்கள் ஓய்வெடுத்துக் கொள்ளவேயில்லை.

காந்தாவின் கனிவு நிறைந்த பார்வையில், வசீகரப் பேச்சில், வாத்சல்யமிக்க நடையில் தன்னையே மறந்து விட்டிருந்தான் நாகராஜன்.

"நாகராஜன்—காந்தா"

இருவரும் அன்புப் பாலத்திலே, இன்பகீதமிசைத்து ஆனந்த நடைபோட்டுக் கொண்டிருந்தனர்.

நாகராஜன் சில வேளைகளில் காந்தா வீட்டிலே, காந்தா அழகுடன் அன்பையும் குழைத்துப் பரிமாறும் உணவின் இனிமை கண்டான்.

நாகராஜனின் அன்புப் பிணைப்பிலே இறுகிக் கிடந்த நாகேசுக்கு நாகராஜனின் போக்கு விபரீதத்தை எள்ளளவு கூடத் தூண்டவில்லை. முற்றுமுழுதாக நாகராஜனே நம்பினாள். நாகராஜனின் அன்பு இதயத்தில் மற்றோர் மங்கைக்கு இடமில்லையென்று திடமாக எண்ணியிருந்தாள்.

ஆனால்.....!

நாகராஜனும் காந்தாவும் வர வர ஒன்றிப் பழகுவதை நாகேசு அறியாமலில்லை, பாவம்! தாய் தந்தையற்ற காந்தா தன்னைப் போல என எண்ணி, காந்தாமேல் இரக்கப் பார்வையை வீசினாள். கள்ளம் கபடமற்ற கன்னிப் பெண் காந்தா என கருணையுடன் நடந்தாள் நாகேஸ்.

ஆனால்.....!

நாகேஸ் கல்லூரியில் படிக்கும்போது நாகராஜனை காதலிக்கிறாள் என்பதை நாகேசுடைய நண்பிகள் அறியாமலில்லை. 'பஞ்சும் நெருப்பும் கிட்ட இருந்தால் பற்றிக் கொள்ளத்தானே செய்யும்' என அவர்கள் அடிக்கடிகேலியாகப் பேசுவார்கள். பஞ்சும் நெருப்பும் கிட்ட இருந்தால்.....நடப்பதை அறிந்துதான் இருந்தாள் நாகேஸ்.

ஆனால்.....!

தன் அன்புக்குரியவன்—தன் காதலில் களிப்புண்டு இருப்பவன்—வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ள நாகராஜன் தன் வாழ்வின் அமைதியைக் குலைப்பானென நாகேஸ் கற்பனை கூடப் பண்ணவில்லை.

ஆனால்.....!

"நாகராஜன்'—வாழ்க்கை எனும் அன்புக் கேணியிலே, காதற்குளத்திலே அதன் அமைதி நாட்டத்திலே ஒரு சிறுகல்—அதுதான் காந்தா.

பலவர்ண நிறங்கள் மாலை நேரத்தின் மனோரம்மியத்துக்கு அரண் செய்தன. பாட்டாளிமக்களிடையேதொடித்தெழும் பட்டினி உணர்ச்சி போல சுற்பனையாளர்களின் ரஸனை உணர்ச்சிக்கு தூண்டில் போட்டது அந்தமாலைப் பொழுது.

மணி ஐந்தரையாகியும் ஆபீஸினின்றும் வராத நாகராஜனை எதிர்பார்த்து அலுத்து விட்டது நாகேஸின் கண்கள்.

ஐந்து மணிக்கு கடற்கரைக்குச் செல்ல ஆயத்தமாயிருக்கும்படி கூறிவிட்டுச் சென்ற நாகராஜன் அரை மணித்தியாலம் தாமதித்தும் வரவேயில்லை. நாகேஸ் தேனீர் யாவுமே தயாரித்து தானுமே கடற்கரைக்குச் செல்ல ஆயத்தமாகிவிட்டாள். காத்திருந்து அலுத்து விட்ட நாகேஸ் அண்டை வீட்டிற்குச் சென்றாள். அங்கே ஒருவரையும் காணவில்லை. "காந்தா" என அழைத்தபடி காந்தாவின் அறைக்குள் சென்றாள்.

அங்கே.....

நாகராஜன் மடியில் காந்தா.

நாகேசுக்கு உலகமே சுழல்வது போன்றதோர் உணர்ச்சி. என்ன பேசுவதென்றே தெரியவில்லை. விக்கலும் விம்மலுமாக அவளை எதுவுமே செய்யத் தடுத்தன.

காந்தாவின் தலை பூமியை நோக்கியபடியே இருந்தது.

நாகராஜனுக்கு என்ன செய்வதென்றேபுரியவில்லை. ஒரு மாதிரி நிலைமையைச் சமாளித்துக்கொண்டு "என்ன நாகேஸ், என்றுமில்லாத ஆடம்பரமாக.....!" என்றான்.

".....''

நீண்டநேர மௌனம் அந்த அறையை ஆதிக்கம் செலுத்தியது.

ஃ

நாகராஜனின் போக்கு நாகேசுக்கு புதிராக இருந்தது. தென்றலில் குளுகுளுப்பிலே தேங்கிக்கிடந்த அவள் உள்ளம் புயலாகிப் பொங்கியதுஅமைதியின்உச்சியிலே நடமாடிய நாகேசு குழப்பத்தின் மத்தியிலே கொழுகொம்பின்றித் தவித்தாள். நாகராஜன் அருகில் இல்லாத நேரத்தில் கண்களிலிருந்து நீரைப் பாய்ச்சுவதே அவள் வேலையாகிவிட்டது. இதை நாகராஜன் சிறிதும் அறியவில்லை. நாகேசும் தன் அமைதியற்ற தன்மையை, கவலைதொய்ந்த இதயத்தை நாகராஜனுக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

நாகராஜன்மேல் நாகேசுக்கு எவ்வளவுதான் துயரமாக இருந்தாலும் அவள் அன்பு நிலை மாறவில்லை. நாகராஜன்மேல் நாகேசுக்கு கொஞ்சம்கூட கோபமில்லை. ஆனால் மனவருத்தம்தான் அவளைத் தாக்கியது. காந்தா கூட நாகராஜனைப்பற்றிக் குறைவாக — கெட்டவராக எண்ணிவிடப் போகிறாளே என நாகேசின் உள்ளம் துடித்தது. ஏங்கியது.

அவள் சிந்தனை பேசிற்று. தன் சிந்தனையின் கூற்றுப் படியே மோஹன் தனக்கு எழுதியதுபோல ஒரு காதல் கடிதத்தை வரைந்தாள்.

கூடியளவு கடிதத்தை தன் சொந்தக் கையெழுத்துப் போலன்றி யாரோ எழுதியதுபோல எழுதினாள்.

நாகராஜனுடைய கண்ணில் படக்கூடியதாகவும், ஒழித்தும் அதை ஒரு இடத்தில் வைத்தாள்.

அவளுடைய உள்ளம் ஓரளவு அமைதி பெற்றது. ஆனால் நாகேசுக்கு நாகராஜனிடத்தில் சிறிதளவாவது அன்பு குறையவில்லை.

இரண்டு மூன்று தினங்கள் ஓடின.

ஒருநாள்.

அன்று நாகராஜனுக்கு லீவு. அவன் வீட்டிலேயிருந்து ஏதோ காரியாலயக் குறிப்புக்களைத் தேடிக் கொண்டிருந்தான். அவன் தேடிய மேசையுள் ஓர் திறந்த கடிதம், அறிமுகமில்லாத ஒருவருடைய கையெழுத்துடன்.

ஆச்சரியத்துடன் அதை எடுத்துப் பிரித்தான். 'மோஹன்' என கையெழுத்திடப்பட்டிருந்தது. காந்தாவின் சகோதரன் மோஹனுடைய கடிதம் தானே என எண்ணி அதை அசட்டையாகப் பார்த்தான். என்றாலும் சிலவரிகளை, "அன்பே—தங்கள்மீது யான்கொண்டிருக்கும் அன்பு அதுதான் காதலாக எம்மிடையே பரிணமிக்கும் சக்தியை என்றுமே யான் மறக்க முடியாதல்லவா"

இந்த வரிகளை ஒருமுறை—இருமுறை இல்லை! மூன்று முறை—நாலுமுறை வாசித்தான். திரும்பவும் கையெழுத்தைப் பார்த்தான் "மோஹன்." நாகராஜனின் உளமும் உடலுமே சோர்வுற்றது. பத்திரமாக கடிதத்தை நாலாக மடித்துக் சட்டைப் பையினுள் போட்டுக் கொண்டான்.

அப்படியே தன் தேடுதல் வேலையை நிறுத்திக்கொண்டான். "நாகேஸ்" எனக் கோபக் குரலில் ஆர்ப்பரித்தான். விடயத்தை முன்பே நன்குகப் புரிந்துகொண்ட நாகேஸ் விரைந்து வந்தாள். அவளது முகத்தில் எதுவித சலனமுமேயில்லை.

"உன்னை இதய பீடத்திலே சிலையாக்கி அன்பை அடிப்படையாகக் கொண்டு யான் கட்டிவந்த காதற் கோட்டைக்கு—வாழ்வின் ஆதாரம் என உன்னையே பூஜித்துவந்த எனக்கு என் நம்பிக்கையின் பெட்டகமாக, பாசத்தின் பொற் சின்னமாக உன்னைப் பாவித்து வந்த எனக்கு நீ தந்த அன்புப் பரிசு இதுதானோ?" என்றான் அக்காதற் கடிதத்தைக் காட்டியபடி நாகராஜன் படபடவென்று.

நாகராஜன் தன் மேற் சொரியும் அன்புத் தமிழ் சொற்களை —தேன் சொட்டும் இனிய வார்த்தைகளைக் கேட்ட நாகேஸின் உள்ளம் புரிப்படைந்தது. சிறிது சிறிதாக அவள் உள்ளம்—முகமும்கூட மகிழ்ச்சியால் விரிந்தது; மலர்ந்தது. நாகராஜனின் கண்களிலிருந்து சிந்திய ஒருதுளி கண்ணீர் நாகேஸின் கைகளில் பட்டது. இது அவனது நிலைமையை நாகேசுக்கு உணர்த்தியது.

ஏற்கனவே நாகேஸின் இதயத்தை ஆக்கிரமித்திருந்த துயரம் நாகேசுக்கு பிரியாவிடை கூறிப் பிரிந்தது. நாகேஸ் நாகராஜனை அன்பாக அழைத்து அருகில் இருத்தினாள். அன்று காந்தா வீட்டில் நாகராஜனைக் கண்டது முதல் தான் கவலைப்பட்டது—தனது திட்டம் யாவற்றையுமே கூறி முடித்தாள் நாகேசு.

"அடடா! அப்படியா! நாகேஸ், என்னை நீ மன்னித்தே ஆகவேண்டும். அன்றே உனது உண்மையான பாச நிலைமையை பெருந்தன்மையை அறிந்தேன். அன்று தொடக்கமே யான் காந்தா வீட்டிற்கு செல்வதில்லையெனத் திட்டமிட்டுவிட்டேன். நீ நம்பாவிட்டால் இதோ என் டயறியை வாசித்துப்பார்" என நீட்டினான்.

"'அன்பு—நம்பிக்கை' இரண்டுமிருக்கும்போது டயறி எதற்கு" என்றாள் நாகேஸ்.

"பலே! கெட்டிக்காரி நாகேஸ். இவ்வளவு துயரத்தையும் வைத்துக்கொண்டு எப்படி என்முன் பழைய மாதிரியே காட்சி தந்தாய். நல்ல நடிகையப்பா நீ"

"ஆமாம்! இந்த நிலைமையை உங்களுக்கு உணர்த்தவே இவ்வளவு பாடுபட்டேன். அதன் பயன்....."

"உனக்கு வெற்றி" என நாகேசின்முதுகில்தட்டினான் நாகராஜன்.

"அன்பு—நம்பிக்கை" என்றுமே வாழவேண்டும் என அந்த இருஉள்ளங்களும் ஒன்றையொன்று வாழ்த்திக் கொண்டன.

அழகான புத்தக வேலைகள்

கதை - கட்டுரை நூல்கள், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிட விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரியில் தயார் செய்யப்பட்ட அழகான புதிய 10 பொயிண்ட் 12 பொயிண்ட் எழுத்துக்களைக் கொண்டு புத்தகங்கள் அச்சிட விரும்புவோர் சுதந்திரன் ஜொப் டிபார்ட்மெண்டைக் கலந்தாலோசிக்கவும். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் புத்தக வேலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்த கட்டணத்தில், சிறந்த வேலைப்பாடுகளுடன், குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் புத்தகங்களை அச்சேற்றித்தரவல்ல அச்சகம் சுதந்திரன் பிரஸ் ஒன்றுதான்.

இன்றே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

மானேஜர்,
சுதந்திரன் பிரஸ்

194 A, தட்டா தெரு,
கொழும்பு 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேஷியாவில்:

சேற்றோடு சேர்ந்து துகிடக்கும் செல்வம்

குடும்ப சமேதராய் வைரம் எடுக்கும் காட்சி

அதில் அன்னியர் கண்வைப்பது கண்டு மக்களின் கொதிப்பு

('இலஸ்ஸ்ரேட்டட் வீக்லி' யில் வெளியான ஆங்கில கட்டுரையின் சுருக்கமான தமிழாக்கம்.)

அதோ — அங்கே சாரை சாரையாக செல்லும் மனிதர்களைக் கவனியுங்கள். தோலில் ஒரு முக்கோண வடிவக் கூடை, கையிலொரு கடப்பாரை, அரிப்புத் தொட்டி இவைகளுடன் போகும் அவர்கள் யாராயிருக்கும் — எங்கே இப்படி போகிறார்கள் என்று யோசியுங்கள் பார்ப்போம்! ஏன் அவ்வளவு சிரமப்படவேண்டும்! ஒரு இந்தோனேஷியனிடத்திலே - அதுவும் போர்னியோ தென்பகுதியிலுள்ள வனிடத்திலே கேட்டால் சட்டென்று பதில் வந்து விடுகிறது! ''அவர்களெல்லாம் மண்ணிலிருந்து 'வைரம்' எடுக்கும் மக்கள்; நாளும்பொழுதும் உழைத்து உன்னதமானதோர் பொருளை எடுக்கிறார்கள்''என்று.

ஆம்; அது உண்மையே. இந்தோனேஷியாவிலுள்ள போர்னியோ பகுதிகளில் காலை வேளையில் மேலே விவரித்த காட்சியை கவர்ச்சியாகக் காண முடியும். ''வைரம்சம்பாதிக்கிறோம்''என்று சொல்லி செயலிலிறங்கி வெற்றி காணும் ஒரு சாராரின் வாழ்க்கையே வாழ்க்கை! உண்மையாக அவர்கள் புகழுக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமானவர்கள். நம்மவர்கள் பொறுமைப்படத்தக்கவர்கள். ஏனென்றால் அத்தனைபேரும் அங்கே 'முதலாளிகள்!' (ஆனால் அவர்களுக்குள் தொழிலாளர்களே) ஒரு தனிப்பட்ட 'பணப் பெருச்சாளி'க்கோ அல்லது எந்த ஆதிக்கத்துக்குமோ அடங்கி ஒடுங்கி ரத்தத்தைச் சொட்டவிட்டு, பணத்தைச் சம்பாதித்து அப்படியே அள்ளிச் சொரிந்து பல்லை இளிப்பவர்கள் அல்ல அவர்கள். நாளும் பொழுதும் தாங்களே தங்கள் உடலை வருத்தி உழைக்கிறார்கள்; உண்ணுகிறார்கள்; அனுபவிக்கிறார்கள். எனவே 'பணம்' என்ற அந்தப் பொருள் தொகையாக எந்தப் பேயிடமும் போய் சேருவதில்லை. தனக்கிருக்கும் சக்தியைப் பிரயோகித்தால் அவர்தம் கரங்களில் பணம் குலுங்கும்! இன்பம் எட்டும்!

அடடா! விஷயத்தை விட்டு எங்கேயோ போகிறேமே! நேரே விஷயத்திற்கு வருவோம்.

ஒரு சமயம் நான் இந்தோனேஷியா போயிருந்த சமயத்தில் என்னை, வைரம் எடுக்கும் வகைகளையும் அது இருப்பதாக கருதப்படும் பிரதேசங்களையும் அதன் அழகையும் காண முடிந்தது. இதற்காக நான் மார்ட்டபுர (போர்னியோவிலுள்ளது) என்ற இடம் நோக்கி செல்ல வேண்டியிருந்தது. அங்கே எடுக்கப்படும் வைரங்கள் தான் மாதமொன்றுக்கு லட்சத்திற்கு மேற்பட்ட 'டாலர்'களை அள்ளிக் கொடுக்கிறது என்றார்கள். மனம் அங்கேயே போகத் தூண்டியது; புறப்பட்டுவிட்டேன்.

ஒரு கூடை, கடப்பாரை, மண்ணைக் கழுவும் தொட்டி, ஒத்தாசைக்கு ஓரிரண்டுபேர் —இவைகள் உள்ள மனிதன் இங்கேயுள்ள தண்ணீர்பாங்கான பிரதேசங்களில் — சேறும் சகதியும் நிறைந்த சிற்றோடைகளில் 'வைர'(ம்) வேட்டையாட பூரண சுதந்திரம் உண்டு; ஏகாதிபத்திய வெறி இல்லை, முதலாளித்துவ முட்டுக்கட்டை கிடையாது என்பதை இங்கு கண்டேன். அனைவரும் அமைதியாக தங்கள் அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். கூட்டம் கூட்டமாக, குழந்தை, குட்டி, மனைவி என்று 'குடும்ப சமேதர'ராக 'வைரம் பொறுக்'கிகள் காட்சி கொடுக்கிறார்கள்.

குன்று சுற்றிச்சூழ, கட்டை குட்டையான மரங்கள் அடர்ந்த செடிகொடிகள் மத்தியில் 'வைரம்' கிடைக்கும் சதுப்பு நிலங்களும் சிற்றோடைகளும் நிறைந்திருக்கின்றன. ஸ்திரியும் வயது வந்த ஆண்பிள்ளைகளுமாக கூடைகளுடன் அந்தக் குட்டையில் இறங்கி கல்லும், மண்ணும் நிறைந்த சேற்றைக் கூடை கொள்ளுமளவுக்கு அள்ளிக்கொண்டு தங்களின் 'குடும்பத் தலைவன்' இருக்குமிடத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அவனே, கூடை, அரிப்புத் தொட்டி சகிதமாக கொஞ்சம் தண்ணீர் பாங்கான இடத்தில்அமர்ந்துகொண்டு இவர்கள் வரவை ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். கடைசியாக அவர்களும் வருகிறார்கள். சேற்றில்தான் செல்வம் பொதிந்திருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! மட்டிலா ஆவலோடு சேற்றுக் கூடைகளை வாங்கிக்கொள்கிறான். பின் தன் மைந்தர்கள் — இளம் வாலிபர்கள் — ஒத்தாசையோடு கூடைகளிலுள்ள சேற்றை பல தடவை தண்ணீருக்கும், தட்டுக்குமாக மாற்றிமாற்றி, அலசி வேண்டாதவைகளை அகற்றி பிறகு வெகு உன்னிப்பாக கவனிக்கிறான் எங்கேயாவது 'வைரம்' மினுமினுக்கிறதா என்று! ஒன்றிரண்டு இருந்து விட்டாலோ அவன் மகிழ்ச்சிக்கே அளவில்லை. இல்லையென்றால்.....? அவனது சோகச் சாயலின் பிம்பம் அந்தத் தண்ணீரிலேயே பளிச்சென்று தெரிந்துவிடுகிறது. என்றாலும் முயற்சியும் பொறுமையும் அவனை விட்டு அகல்வதில்லை.

(நான் சென்றிருந்த சமயத்தில் 39 'கெரேட்' எடையுள்ள ஒரு பெரிய வைரம் எடுக்கப்பட்டது.)

மேலே சொல்லி வந்ததைப் போன்று நடந்தேறி வைரம் அகப்பட்டதென்றால் அது பத்திரமாக அவர்களது 'தொழிற்சாலைக்குப்' போய்ச் சேருகிறது. அங்கு வைரக் கல்லை எந்தெந்த மாதிரி உருவிலெல்லாமோ செதுக்கி மெருகு கொடுத்து கவர்ச்சி அளிக்கவைக்கிறார்கள். மெருகு (பொலிஷ்) கொடுக்கும் வேலைக்கு ஒரு விதப் பவுடரும் தேங்காய் எண்ணெயும் உதவுகிறது என்று சொன்னார்கள்.) அம்ஸ்டர்டாம், அன்ட்விர்ப் (பெல்ஜியத்திலுள்ளவை) பகுதிகளிலுள்ளவர்களையே வைரம் உருவாக்குவதில் இவர்களும் பின்பற்றுகிறார்கள்.

இன்று இந்தோனேஷியாவிலிருந்து வெளிக்கொணரப்படும் வைரங்களை பெரும்பாலும் சீனர்கள், மலாயர்கள், தென்கிழக்கு ஆசியாவிலுள்ளவர்களேஅதிகம்விரும்புவதாகஒருவிபரமிருக்கிறது வைரம் எடுக்கும் தொழில் இந்தோனேஷிய மக்களில் ஒரு சாராரின் வாழ்க்கையையே வளம்பெறச் செய்து வருகிறதென்றாலும் ஒருசில ஐரோப்பியக் கம்பெனிகள் இந்தோனேஷியாவின் பக்கத்திலும் கண்ணோட்டத்தை செலுத்தியிருப்பது மிகவும் அனுதாபத்துக்குரிய, வருந்தத்தக்கதோர் விஷயம் என்பதை நான் இங்கு சந்தித்த மக்களிடத்தில் விசேஷமாகக் கண்டேன்.

தமிழில்: எம். எம். மக்கின்

கடகட

★ ''எம்பசி கிளப்பில்'' சட்டவிரோதமாக சூதாடியதாக 98 பேர் கைது செய்யப்பட்டனர்.

—செய்தி

எம் பசியைப் போக்குவதற்காக கிளப்பில் சூதாடினர்கள் என்று 98 பேருடைய குழந்தை குட்டிகள் கோர்ட்டில் அழுது வடிப்பார்களோ என்னவோ.

★ 'நான்ஷியன்' தீவு மேல் படையெடுப்பு: பிரமாண்டமான செஞ்சீன கடற்படை வேவு பார்க்கிறதாம்.

—செய்தி

'நான்ஸன்ஸ்' வேவு என்ன விமோசனமே தரப்போகிறது.

★ 'கோல் காப்பு' வீரருக்கு உதை விழுந்தது மூதூரில் அன்டனிஸ் உதை பந்தாட்ட மைதானத்தில். முகமதியா கோஷ்டிக்கும் யூனட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டத்தின் போது—விளையாட்டுப் பகுதி தினகரன் 23-2-55

பட்ட உதைகள் அனைத்தையும் வாங்கிக்கொண்டு பந்து, வேதனை தாங்கமுடியாமல் கோல் காப்பு வீரரை உதைத்துவிட்டதோ என்னவோ.

★ அணுக்குண்டு பரீட்சைக்காக இலங்கையிலிருந்து ஏராளமான குரங்குகளை அமெரிக்கா கேட்டுள்ளது.

—செய்தி

அமெரிக்காவிலுள்ள அணுக்குண்டு மனிதர்கள் இலங்கையில் உள்ள குரங்குகளை விட அவ்வளவு நம்பிக்கை யற்றவர்களா அணுகுண்டு பரீட்சைக்கு.

★ தொட்டதெற்கெல்லாம் கோபங் கொள்ளும் சுபாவம் சிங்களவருக்கிடையே உள்ள ஒரு பெருங்குறையாகும்.

—திரு சிரில் டி சொய்சா

தொட்டாச் சிணுங்கி.

★ஒரு நோயாளரின் உபயோகத்திற்காக கொடுக்கப்பட்ட 8 ரூபாய் 66 சதம் பெறுமதியுள்ள சாமான்களைத் திருடியதாக லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 'நர்ஸ்' ஒருவர் 100 ரூ. அபராதம் விதிக்கப்பட்டார்

—செய்தி

இனிமேலாகிலும் ஆஸ்பத்திரிகளில் 'திருட்டு நாய்கள்' சாமான் என்ற போர்ட் பல கைகள் தொங்கவிடப்படும் என்ற நம்பிக்கை உண்டு.

★ பெண்கள் விழிப்பற்றுக் கிடந்த காலம் மலையேறிப் போய்விட்டது.

—ஸ்ரீமதி க்ளோட ஜயசூரிய

இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கிறார்கள் (இரவில் கூட) இனிமேல் வந்து போகும் காலம் மலைக்கு ஊடாகத்தான் செல்லும் என்ற பீதியோ தெரியாது.

★ தென்னை மரம் இருக்கும்வரை மாதுபானத்தை ஒழிக்க முடியாது.

—திரு எச். டி. இஸட். சிரிவர்தனே

மதுபானம் இருக்கும்வரை குடிப்பதை ஒழிக்க முடியாது

★ ஏழூரில் கால் நடைகள் காட்சி.

—செய்தி

கால் நடைகள் 'ஏழு' ஊரில் எப்படித்தான் ஏறிச் சென்றனவோ, அந்த நடையே ஒரு கண் கொள்ளாக் காட்சியாக இருந்திருக்குமே

★ கல்லோயாவில் மிகப் பெரிய கஞ்சாத் தோட்டம், மூன்றுவது சோதனையில் 160,000 செடிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

—செய்தி

கல்லோயாவில் கஞ்சாத் தோட்டம் போடத்தான் கல்லோயாத்திட்டம் போட்டார்களாக்கும்.

★ ராஜா மகன் ராணி— புதுரோஜா மலர் மேனி— பேஷான ஒரு மாமி—வரப் போறுள் பாரு நீ.

மகாராணி மகன் ராஜா— சாரங்கபாணி கூஜா—பிசாசான ஒரு மாமி—வரப் போறு சரோஜா. என்று மாப்பிள்ளையிடம் முன்னதாகச் சொன்னவன் இப்பொழுது பெண்ணிடம் வந்து இப்படி சொல்லுகிறான்.

கூடாதது

ஏன் தம்பி இப்பொழுதுதான் நன்றாக இருட்டி விட்டதே இன்னமும் ஏன் இந்த 'சன்கிளாஸை' போட்டுக் கொண்டிருக்கிறீர்.

நல்ல வேளை, இப்பொழுதாவது நீங்கள் ஞாபகப் படுத்தினீர்களே, இல்லாவிட்டால் இன்று இரவு பூராவும் இதைபோட்டுக்கொண்டே இருந்திருப்பேன்.

—''சிறில்''

மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கம்

மேல்மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும்26-3-55 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு கு. வி. செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

ஆடவர் ஆவிசோர்ந்து வியக்கப்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

'சிதம்பரம், அவசரப்படாதீர் நான் கூறியது அந்தப் பங்கயமுக நங்கையரின் பந்து விளையாட்டின் ஒரு பகுதி ஆடுவது ஆரம்பக்கட்டந்தானே! அதற்குள் இப்படித் துள்ளிக் குதிக்கிறீரே, அதோ அந்த அரிவை நல்லாரின் அங்க அசைவுகளைப் பாரும். பந்தாடும் வேகத்தைப் பாரும், இந்தப் பாட்டினையையும் பாரும்!

''பொங்கு கனங்குழை
மண்டிய கெண்டை
புரண்டு, புரண்டாடக்
—குழல்
மங்குலில் வண்டு கலந்தது
கண்டு
மதன் சிலை வண்டோட
—இனி
இங்கிது கண்டுல கென்படும்,
என்படும்
என்றிடை திண்டாட
—மலர்ப்
பங்கய மங்கை வசந்த
சவுந்தரி
பந்து பயின்றனளே!''

''என்ன புலவரே, அவர்கள் பந்தாட்டமும், உங்கள் பாடலுமாகச் சேர்ந்து என்னை மயங்க வைத்துவிட்டன. முதல் நீங்கள் கூறிய பாட்டில் பந்தாடும் நங்கை வசந்தவல்லியை நான் பார்க்கவில்லை. அவளுடன் சேர்ந்து விளையாடுகின்ற மங்கையர் கூட்டத்தையே கண்டு மயங்கி விட்டேன். இப்பொழுதுதான் நான் வசந்தவல்லியைக்காண்கிறேன். அவள் வண்ணத் திருமுகத்தைக் காண்கிறேன். மின்னலிடையைக் காண்கிறேன். அவள் காலின் நிலம்பொலியைக் கேட்கிறேன். கொடும்பகை வென்ற இரு கொங்கைகளைப் பார்க்கிறேன். அவள் காதணியுந் தோடுகளைக் காண்கிறேன். கெண்டை மீன்களெனப் புரண்டாடும் கருவிழிகள் இரண்டினையும் காண்கிறேன். மலர்செறிந்த குழலினைக் காண்கிறேன். அதிலிருந்து கலைந்தோடும் கருவண்டுகளைக் காண்கிறேன். கவிஞரே, இத்தனை காட்சிகளையும் காண்கிறேன் இவற்றையெல்லாம் கண்டுவிட்டால், வசந்தவல்லி பந்தாடும் பண்பினைப் பார்த்துவிட்டால் இந்த உலகம் 'என்படும் என்படும்' என எண்ணித் துடிக்கின்ற உங்கள் இதயத்தைக் காண்கிறேன். கொள்ளை அழகில் அற்றுப் பட்டுப்போன என் இருதயத் துடிப்புகளைக் காண்கிறேன். வசந்த வல்லியின் ஆட்டத்தைக் காண்கிறேன். பண்டைத்தமிழ்ப் பெண்களின் பழுது போகாத இளமையைக் காண்கிறேன். அவர்களின் வியக்கத்தக்க விளையாட்டுத் திறனைக் காண்கிறேன்''.

''சிதம்பரம், நிறுத்து உன் பேச்சை! உனக்கிருக்கும் உணர்ச்சியைப் பார்த்தால் நீ பேசுந் திறனைப் பார்த்தால் நீ என் கவிதைகளையே மழங்கடித்துவிடுவாய் போலிருக்கிறது! என்னை வென்று விடும் கவிஞனாகிவிடுவாய் போலிருக்கிறது!''

''இல்லைத் தமிழ்ப் புலவரே, உங்கள் மங்காத கவிதைகளைத் தங்கமெனக் கருதுகின்றேன் நான். அவற்றின் சுவையிலே நான் என்னை இழந்துவிடுகிறேன்! காந்தத்தைச் சேர்ந்த இரும்பு காலஞ் செல்லச் செல்லத் தானுங் காந்த சக்தி பெற்றுவிடுகிறது. அதுபோலத் தான் நானும். எங்கே உங்கள் இன்பந்தரும் அந்தக் கவிதையைப் பாடுங்கள்!''

''கூடக முன்கையில் வால்
வளை கண்டிரு
தோள்வளை நின்றுடப்
—புனை
பாடக முஞ்சிறு பாதமுமங்
கொரு
பாவனை கொண்டாட
—நய
நாடகம் ஆடிய தோகை
மயிலென
நன்னகர் வீதியிலே—அணி
ஆடகவல்லி வசந்த ஒய்யாரி
அடர்ந்து பந்தாடினளே!''
''தமிழுக்கு அமுதென்று
பேர்—அந்தத்
தமிழின் பத்தமிழெங்கள்
உயிருக்குநேர்''

என்று எங்கள் காலத்து வாழும் ஒரு புரட்சிக்கவிஞன் பாடியிருக்கிறான்! அது னுண்மை இன்றுதான் உங்கள் பாடல்களையும், வசந்த வல்லியின் பந்தாட்டத்தையும் பார்த்தபோதுதான் தெரிந்தது. கவிஞர் பெருமானே, இந்த இன்பந் தருந் தமிழ்க் கவிதைகளிருக்க 'ஆங்கிலம், ஆங்கிலம்' என்று அழுது சாகிறார்களே எங்கள் காலத்துச் சில மனிதர்கள்! நீங்கள் இவர்களைப்பற்றி யெல்லாம் என்ன நினைக்கிறீர்கள்?''

''என்ன நினைக்கிறதா.....? விடிந்தாற் பொழுது மட்டும் 'பகற் கனவு' கண்டுகொண்டிருக்கிற ஒரு அப்பாவி மனிதனைக் கணவனுகப் பெற்றுக்கொண்டேனே என்று என் கதியை நினைத்து தலையிற் போட்டுக்கொள்வதுதான்'' என்ற சிதம்பரத்தின் தருமபத்தினி தங்கத்தின் குரல் சிதம்பரத்தை திடுக்கிட்டெழச் செய்தது! பாவம், திரிகூடராசப்பக் கவிராயரைத் திரும்பிப் பார்க்காமலே சிதம்பரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது விமர்சனம்

இல்லற ஜோதி

மனோகரன் ஒரு கவிஞன். கவிதா லோகத்தில் சதா சஞ்சரிக்கும் அவனுடைய பேச்சையும் நடத்தையும் பார்த்து அவன் சித்த சுவாதீனம் இழந்து வருவதாக அவன் பெற்றோர்கருதுகின்றனர். எப்படியாவது அவனுக்கு ஒரு கலியாணம் செய்து வைத்தால் சித்தம் தெளியும் என்ற முடிவுக்கு வருகின்றனர். சொந்த இடத்தில் விவாகம் ஒழுங்கு செய்யப்படுகிறது; காவேரி என்ற அழகிய பெண் அவனுக்கு மனைவியாகிறாள். மனைவியோடு குடும்பம் நடத்த வேண்டியவன் முதல் இரவிலேயே அவளை உட்காரவைத்து தன் அமரகாவியம் ஒன்றை வாசித்துக் காட்டுகிறான். விஷயம் பெற்றோருக்கும் எட்டுகிறது. மனோகரனுக்கு அசல் பைத்தியம் என்று முடிவு கட்டி வைத்திய சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்கிறார்கள்.

இதற்கிடையில் காவேரி மனோகரன் எழுதிவைத்த கவிதைகளையும் நாடகங்களையும் ஒரு பழங்கடதாசி வாங்குவோனிடம் விற்று விடுகிறாள். அதில் ஒரு காகிதத்தில் ஒரு வைத்தியர் மருந்து மடித்து ஒரு பணக்கார புரபஸர் வீட்டிற்கு அனுப்புகிறார். அங்கு சித்ரா என்று ஒரு பெண். புரபஸருடைய மகள் கலைப்பித்தும் கவிதைப்பித்தும் ஒருங்கே பிடித்தவள். அந்த கடதாசியை அகஸ்மாத்தாய்ப்பார்க்கிறாள். அதில் எழுதியுள்ள கவிதையில் மனதைப் பறிகொடுத்து அந்தக் கவிஞன் யார் என்று தேடிப் பிடிக்கிறாள். சித்ராவிற்கும் கவிஞர் மனோகரனுக்கும் நட்புவளர்கிறது. மனோகரனின் புத்தகங்கள் பல்லாயிரக் கணக்கில் விற்பனவாகின்றன. மனோகரன் பணக்காரனாகிறான். சித்ரா அவனுக்கு ஒரு பங்களாவும், காரும் வாங்கிப் பரிசளிக்கிறாள். சித்ராவும் மனோகரனும் சில நாடகங்களில் தோன்றி அற்புதமாக நடிக்கிறார்கள். முடிவில் அவர்கள் தொடர்பு காதலாக பரிணமிக்கிறது. மனோகரன் காவேரியைப் புறக்கணிக்கிறான். சித்ராவைக் கலியாணம் செய்ய வேண்டும் என்று காத்துக் கிடக்கும் அவள் அத்தான் மோகனுடைய மனதில் மனோகரன்—சித்ரா உறவு வஞ்சகமாக வளர்கிறது. இதைத் தொடர்ந்து பல சிக்கல்கள், மோட்டா விபத்துக்கள் எல்லாம் ஏற்பட்டு கடைசியில் மனோகரன் காவேரியின் பரிசுத்த உள்ளத்தை உணர்ந்து அவளே இல்லறஜோதி யென்பதை உணர்கிறான். சித்ராவும் மோகனும் தம்பதிகளாகின்றனர்.

சற்றுப் புதுமையான கதைதான். கவிஞர் கண்ணதாஸனுடைய கவிதை நடை வசனங்கள் பல இடங்களில் நன்றாக விருக்கின்றன. பாடல்களும் பரவாயில்லை. நடனக் காட்சிகளுக்கும் குறைவில்லை மொடர்ன் தியேட்டர்ஸாரின் தயாரிப்பான இப்படத்தில் சிவாஜீ கணேசன், ஸ்ரீரஞ்சனி, பத்மினி தங்கவேலு ஆகியோர் பிரதம பாகங்களை ஏற்று நன்றாக நடித்துள்ளனர். மொத்தத்தில் இல்லற ஜோதி பொது ஜன ரஞ்சகமான ஒரு சிறந்த பொழுதுபோக்குப் படம் என்பதே நமது தீர்ப்பாகும்.

—எஸ்

இந்தியாவின் தலைசிறந்த நடன மேதை திருமதி ருக்மணி அருண்டேல் பரத நாட்டியம் ஒன்றில் அபிநயித்துக் கொண்டிருக்கிறார். 'தான் பெற்ற செல்வம் வையகம் பெறுக' என்ற தொண்டுணர்ச்சியுடன் இன்று ருக்மணி சென்னை அடையார் கலாச்சேத்திரத்தில் எதிர்கால 'ஊர்வசி'களுக்கும் 'மேனகை'களுக்கும் உருவகம் கொடுத்து வருகிறார்.

கர்ப்பச் சிதைவு...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

போவதற்கு முன் மஹாராவாடிவீட்டில்ஒரு இரவையும் கழித்தோம். அங்கும் அவர் என்னுடன் அந்தரங்கமாக உறவாடினர். அதன் பின் நாம் பல வாடி வீடுகளில் பல இரவுகளைக் கழித்துள்ளோம்.

நான் கர்ப்பம் தரித்துள்ளதாக செப்டம்பர் மாதத்தில் அறிந்தேன். ஒருநாள் வாந்தியெடுத்தேன். நவம்பர் மாதம் திரு அபயவிக்கிரமா சில மருந்து வில்லைகள் கொடுத்தார். இவை வாந்தியை நிறுத்திவிடுமென்று கூறினர். ஆனால் சில நாட்கள் சாப்பிட்டும் வாந்தி நின்றபாடில்லை. பின் அம்பலாங்கொடைக்குப் போக வேண்டும் என்று லில்லியுடன் என்னை கூட்டிக் கொண்டு போனர். ஆனால் காலிக்குத்தான் நாம் வந்திருந்தோம். டாக்டர் அட்டியகலையின் வைத்திய சாலைக்கு முன் கார் நின்றது. நாங்கள் இறங்கி உட் சென்றோம். லில்லியை உள்ளே வர வேண்டாம் என்று ஸ்ரீமதி நாணயகாரா சொன்னர். ஸ்ரீமதி நாணயகாரா முன்னிலையில் டாக்டர் என்னை கேள்விகள் கேட்டார். அதன்பின் திரு அபயவிக்கிரமாவிடம் எனக்கு கொடுக்கும்படி சில வில்லைகளை கொடுத்தார். இரவில் படுக்கைக்குப் போகுமுன் சாப்பிடுமாறு தெரிவித்தார். அதன் பின் பத்தேகமைக்குச் சென்றோம்.

இதன் பின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ரூ. 350 கோடி மதிப்புள்ள ஆயுதங்கள்

வாஷிங்டன்: 1954-ம் வருஷத்தின் கடைசி 6 மாத காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு 350 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை அமெரிக்கா சப்ளை செய்திருக்கிறதாம்.

'சுதந்திரன்' குறுக்கெழுத்துப் போட்டி விதிகள்

1 சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக வினியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

2 விடைகள் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். எழுத்துக்கள் அழித்தெழுதப்படலாகாது. மாற்றங்கள் செய்யப்படலாகாது. எல்லாக் கட்டங்களும் பூரணமாக நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

3 ஒவ்வொரு கூப்பனிலும் போட்டியில் கலந்து கொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்படவேண்டும்.

4 (அ) ஒரே கவரினுள் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படுவதானால் அவை அனைத்தும் ஒரு போட்டி நேயருடைய கூப்பன்களாகவே இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்கள் அனுப்பப்படும் போது எல்லாக் கூப்பன்களுக்குமுரிய கட்டணமும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும். அத்தோடு கூப்பன்கள் அனுப்பப்படும் எல்லா கவர்களின் பின்புறத்திலும் போட்டியில் கலந்து கொள்ளும் நேயருடைய பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(ஆ) இப்போட்டிக்குரிய பிரவேசக் கட்டணம் விடை ஒன்றிற்கு சதம் 50. மூன்று விடைகளுக்கு ரூ 1-00

5 எல்லாக் கட்டணமும் இலங்கைப் போஸ்டல் ஆடர் அல்லது கதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். போஸ்டல் ஆடர்கள் "குரோஸ்" செய்யப்படுதல் அவசியம். சுதந்திரன் போட்டி வவுச்சர் சுதந்திரன் காரியாலயத்தில் கிடைக்கும். மணி ஆடர்கள், தபால் பில்லைகள், செக்குகள் முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6 தபால்மூலம் அனுப்பப்படும் எல்லா விடைகளும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 194 ஏ. தட்டாதெரு கொழும்பு—12 என்ற விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும். விடைகளை சுதந்திரன் காரியாலயத்தில் நேரில் கொண்டுவந்து சேர்ப்பிக்க விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம். உரிய பிரவேசக் கட்டணத்தை காரியாலயத்தில் செலுத்திஅதற்குரியபோட்டி வவுச்சரைப் பெற்று, அதை விடைக் கூப்பன்களுடன் இணைத்து காரியாலயத்தில் இதற்கென வைத்திருக்கும் கூப்பன் பெட்டியில் போடவேண்டும். காரியாலயத்தில் வேலை செய்யும் எந்த சிப்பந்திகளிடமும் விடைகளைக் கையளிக்கலாகாது. கைபிழையாகத் தவறிவிடும் அல்லது காணுமற் போய்விடும் விடைகளுக்கு போட்டிக் காரியாலயத்தார் பொறுப்பேற்க முடியாது. முடிவு தேதிக்குமுன் விடைகள் கிடைக்க வேண்டும். விடைகளை தபாலில் சேர்த்த அத்தாட்சி, தபால் உரிய காலத்தில் அதாவது முடிவு தேதிக்குமுன் வினியோகம் செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7 போட்டி ஆசிரியரின் விடைக்கு சரியான விடை அல்லது குறைந்தபட்சம் பிழைகளோடு கூடிய விடை அனுப்பியவருக்கு [illegible] விடைக்கு [illegible] வருக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்படும். பரிசுக்குரியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோராயிருப்பின் அவர்களிடையே பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவர் ஒரு போட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளைப் பெற முடியாது.

(அ) உரிய கட்டணங்கள் அவ்வளவும் செலுத்தியார் ஒருவர் அதிகப்படியான விடைகள் அனுப்புகிறாரோ அவருக்கு ரூ 100 விசேஷப் பரிசாக வழங்கப்படும். ஒரே பெயரில் ஒரு கவரினுள் ஒரே சமயத்தில் அதிகப்படியான விடைகளை உரிய கட்டணத்துடன் அனுப்புபவரே இப்பரிசுக்கு உரியவராவார். வெவ்வேறு கவருக்குள் வெவ்வேறு காலங்களில் அனுப்பப்படும் விடைகள் இப்பரிசுக்கு உரிமையுடையவையாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே தொகையான விடைகள் அனுப்பினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். 7ம் விதியில் காட்டப்பட்ட குறிப்புக்கு மாறுக முதல் அல்லது இரண்டாவது பரிசு பெறும் நபரும் இந்த விசேஷ பரிசைப்பெற உரிமையுடையவராவார்.

8 இங்கு தரப்பட்டிருக்கும் போட்டி விதிகளுக்கு உட்படாத எந்த ஒரு கூப்பனும் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியற்றதாகவே கணிக்கப்படும். இத்தகைய தகுதியற்ற கூப்பன்களோடு அனுப்பப்படும் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

9 இப்போட்டி சம்பந்தமாக ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாரின் தீர்ப்பே முடிவானதும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதுமாகும்.

10 இப்போட்டி விதிகள் இப்போட்டியை நடத்தும் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியாருக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு வருக்குமிடையே தனித்தனி ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் கொழும்பில் செய்யப்பட்டதாகவும் கொழும்பிலேயே முற்றுக நிறைவேற்றப்படுவதாகவும் கருதப்படவேண்டும்.

11 சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூ 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு போஸ்டல் ஆடர், அல்லது போட்டி வவுச்சர் இலக்கத்தையும், விடைகளைத் தபாலில் அல்லது நேரில் சேர்த்த தேதியையும் எழுதி அனுப்பவேண்டும். தகுதியும் உரிமையும் நிரூபிக்கப்படாதபட்சத்தில் பிரஸ்தாப பிணைப் பணத்தை அவர்கள் இழந்து விடுவார்கள்.

12 இப்போட்டி சம்பந்தமாக வேறு எந்தவித மானகடிதப் போக்குவரத்தும் நேர்முகமானபேட்டியும் வைத்துக்கொள்ளப்பட மாட்டாது. ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டட் கம்பனியில் வேலை பார்க்கும் சிப்பந்திகளும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

போட்டிக் கூப்பன்கள் அனுப்பப்படும் கவரின் மேல் சம்பந்தப்பட்ட போட்டி இலக்கம் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பச்சிதைவு வழக்கில் செல்விகாந்தி ஜெயமெனிக்கா வெளியிட்ட விபரம்

ஆயா அபயவிக்கிரமாவின் பாரியாராக அறிமுகப்படுத்தப்பட்டார்

பத்தேகம தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு ஹென்றி அபயவிக்கிரமாவின் அந்தரங்கக் காரியதரிசியான செல்வி காந்தி ஜெயமெனிக்காவுக்கு சட்ட விரோதமாக கர்ப்பச் சிதைவு உண்டுபண்ணிய தாக குற்றம்சாட்டப்பட்டு தொடரப்பட்டுள்ள வழக்கு மக்களிடையே பலத்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வழக்கை ஒட்டி செல்வி காந்தி ஜெயமெனிக்கா கொடுத்த சாட்சியம் பல சுவாரஸ்யமான சம்பவங்கள் கொண்டுள்ளது. எனவே அவற்றில் முக்கியமானவற்றை எமது வாசகநேயர்களின் விருப்பத்திற்கிணங்க திரட்டித் தருகிறோம்.

செல்வி ஜெயமெனிக்காவுக்கு கர்ப்பச் சிதைவு உண்டாக்கியதாக குற்றம்சாட்டி தொடரப்பட்டுள்ள இந்த வழக்கு சென்ற 11ந் தேதி காலி மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் பூர்வாங்க விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் பத்தேகம தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு ஹென்றி அபயவிக்கிரமா குற்றம்சாட்டப்பட்டுள்ளார். இவருக்கு உடந்தையாக இருந்து சத்திரசிகிச்சை செய்ததாகவும் இதனால் கர்ப்பச் சிதைவு ஏற்படுத்தியதாகவும் கலுவெல்லையைச் சேர்ந்த டாக்டர் ஜே. டப்ளியு. அட்டிய கலேயும், ஸ்ரீமதி நாணயகாராவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது செல்வி காந்தி ஜெயமெனிக்கா கொடுத்த வாக்குமூலத்தின் சில பகுதிகள் பின்வருமாறு:

"நான் உத்தியோகம் ஒன்றை எதிர்பார்த்து வீட்டில் இருந்த சமயம் 1954 மே 7ந் தேதி "லங்காதீப" என்ற தினப் பத்திரிகையில் 'ஆங்கிலமும் சிங்களமும் எழுதத் தெரிந்த ஒரு யுவதி அந்தரங்கக் காரியதரிசி வேலைக்குத் தேவை' என்று ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். சங்கீத ஞானமும் தெரிந்திருக்க வேண்டும் என இருந்தது. இதை ஒரு பெண் வெளியிட்டிருந்தார்.

இந்த உத்தியோகம் எனக்கு நல்லது என்று எண்ணி விண்ணப்பித்தேன். திருமதி ஹென்றி அபயவிக்கிரமா என்பவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு கடிதம் எனக்குக் கிடைத்தது. அதில் திருமதி எச். அபயவிக்கிரமாவை கடுகண்ணுவைப் பிரதிநிதி மரைக்காரின் பங்களாவில் மே மாதம் 15ந் தேதி சந்திக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்தது. திருமதி அபயவிக்கிரமா தமது கணவனுடன் அங்கு இருப்பாரென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனது சகோதர உறவினரான சேனரத்னவுடன் குறிப்பிட்ட நாளில் ஜனப் மரைக்காரின் பங்களாவிற்குச் சென்றேன்.

திரு அபயவிக்கிரமாவெளியில் வந்து திருமதி அபயவிக்கிரமாவை சாப்பாட்டறையில் போய் சந்திக்குமாறு கூறினார்.

அங்கு வேறு இரண்டு நங்கைகளும் இருந்தார்கள். உள்ளே போய் 'திருமதி அபயவிக்கிரமாவை' சந்தித்துப் பேசினேன். அவர் சாரி உடுத்தியிருந்தார். ஸ்ரீமதி அபயவிக்கிரமா என்று அவரை திரு அபயவிக்கிரமா எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்று திருமதி அபயவிக்கிரமா என்று எனக்கு அறிமுகம் செய்யப்பட்ட அந்தப் பெண் திரு அபயவிக்கிரமாவின் ஆயா வான அலிஸ் என்பது எனக்கு இப்போது தெரிய வருகிறது. சில நேரத்திற்குப் பின் அங்கிருந்த இரண்டு நங்கைகளையும் திரு அபயவிக்கிரமா திருப்பி அனுப்பினர். ஜனப் மரைக்கார் தம்பதிகள், திரு அபயவிக்கிரமா, அலிஸ் ஆகியோருடன் நண்பகல் உணவருந்தினேம். பின்பு திரு அபயவிக்கிரமா காரில் கொண்டு வந்து வீட்டில் விட்டார். அடுத்த நாள் கடுகண்ணுவுக்குப் போக தயாராயிருக்கும் படியும் சொன்னர். அடுத்த நாள் காரில் தாயாருடனும் சகோதரியுடனும் கடுகண்ணுவைக்குச் சென்றேன். பத்தேகமாவுக்கும் என்னுடன் வர வேண்டும் என்று என் தாயாரும் சகோதரியும் சொன்னார்கள். திருமதி அபயவிக்கிரமா அங்கு இருப்பதாகவும் எனவே அவர்கள் வர வேண்டியதில்லை என்றும் திரு அபயவிக்கிரமா சொன்னர். அதன்பின் திரு அபயவிக்கிரமாவும், அலிஸும் நானும் பத்தேகமாவுக்குச் சென்றோம். அங்கு போன பின் காரியாலய வேலையும், கணக்கு வைப்பதும் எனது ஜோலி என்று சொல்லப்பட்டது. அங்கு லில்லி, ஹாமினு என்னு என்று இரண்டு மங்கையரும் ஸ்ரீபால என்று ஒரு வேலைக்காரனும் இருந்தார்கள்.

இரண்டு நாட்களின் பின் அலிஸ், வேலைக்காரி, லில்லி முதலியோருடன் கதிர்காமம் சென்றேன். அன்றிரவு திஸமஹாராமா யாத்திரீகர் விடுதிச்சாலையில் தங்கினோம். இதன்பின் அரசியல் கூட்டங்களுக்கும் திரு அபயவிக்கிரமா என்னை கூட்டிச் சென்றார்.

ஒன்றரை மாதங்களுக்குப் பின் ஜூன் 23ந் தேதி பத்தேகமைக்கு வரும் வழியில் வெலிகம வாடி வீட்டில் திரு அபயவிக்கிரமாவுடன் எனது முதல் இரவைக் கழித்தேன். அவருடன் அவரது காரில் நான் அங்கு சென்றேன். அவர் வாடி வீட்டு ஏட்டில் கையொப்பமிடுவதை நான் பார்க்கவில்லை. அன்று இரவு அவருடன் ஒரே அறையில், ஒரே கட்டிலில் படுத்திருந்தேன். அன்று நாம் இருவரும் திரேக சம்பந்தம் வைத்துக்கொண்டோம். முதலில் நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. தப்புவதற்கு முயன்றேன். ஆனால் முடியவில்லை.

முன்பு வாடி வீட்டுக்குப் போக நான் ஒப்பவில்லை. எமக்காக இரண்டு அறைகள் எடுப்பதாக திரு அபயவிக்கிரமா என்னிடம் கூறினர். ஆனால் நான் போனபோது ஒரு அறை மட்டும்தான் எடுத்திருக்கிறார் என்று தெரிந்தது.

திரு அபயவிக்கிரமா ஒரு அறையைக் காட்டி அது என்னுடைய அறை என்றும் என்னை போகும்படியும் சொன்னர். நான் அறைக்குள் போனதும் அவர் பின்னால் வந்து கதவைப் பூட்டிக் கொண்டார். அறையில் இரண்டு படுக்கைகள் இருந்தன. நான் என் ஆட்சேபத்தை தெரிவித்தேன். வாடி வீட்டுப் புத்தகத்தில் கணவனும் மனைவியும் என்று பதிந்துவிட்டதாகவும் எனவே நான் வேறு அறையில் தூங்க முடியாதென்றும் திரு அபயவிக்கிரமா கூறினர்.

இதுதான் அவருடன் முதல் முதல் நான் உடல் சம்பந்தம் வைத்துக்கொண்டது.

அதே வாடி வீட்டில் நான் அவருடன் வேறுமொரு இரவைக் கழித்திருக்கிறேன். அன்றும் அதே அறையைத் தான் எடுத்திருந்தோம். அந்த இரவும் அவர் என்னுடன் உடலின்பம் அனுபவித்தார்.

வெலிகம வாடி வீட்டிற்கு இரண்டாவது தடவை

(12-ம் பக்கம் பார்க்க)

பத்திரிகையின் பயன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் கண்டிப்பாக, வானெலியைப் போல சுருக்கமாக அல்ல, மிகவிரிவான முறையில் தெரிவித்து விடுகிறது.

வானெலியை ஏழைகள் வாங்க முடியாது. ஆனால் பத்திரிகையை அதோ! வீதியிலே கஞ்சிக்கு வகையின்றி கத்தித் திரிகிறானே ஒரு நல்லவன்.....! நாலு கால் பிராணியாகமாறி நரம்பு தெரிக்க வண்டி இழுக்கிறானே.....! முதுகெலும்பு முறிய மூட்டை சுமக்கிறானே.....! அவன் முதல் ஏழை மக்களை வஞ்சித்து வாழ வகையில்லாத படி தெருவிலே தவிக்க விடுகிற பண முட்டைகள் வரை பயனையும் மக்கள் அடையவாங்கிப் படித்தறியலாமன் முடியும்.

மொத்தத்தில் பத்திரிகை நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் புகுந்து பரவிவிட வேண்டும். அவ்வாறு பரவினால்தான் மக்கள் யாவரும் கலையுணர்வும், விஞ்ஞான அறிவும், உலகியல் அறிவும் பெறமுடியும். ஆனால் உன்னாரும் இல்லாரும் ஆக எல்லாரும் வாங்கிப்படிப்பதற்கு ஏதுவாக பத்திரிகையின் விலையை குறைத்திட முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் பத்திரிகையின் முழுப் பயனையும் மக்கள் அடைய

வெற்றிகரமான 5வது வாரம்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10மணி, பி.ப. 2மணி, மாலை 6, இரவு 9-30மணி

மாளிகைப் பிரபுவிற்கும் மண்குடிசை மடந்தைக்கும் ஏற்பட்ட காதலைச் சித்தரிக்கும் சிறந்த சமூகக் கதை.

எடிஜூனியர், டிஸ்னி ரஞ்சனி

முதலியோர் நடிக்கும்

சிலோன் தியேட்டர்ஸாரின் மகத்தான வெளியீடான

சுரங்கனி (சிங்களம்)

செல்லமஹால்

காலை 10-00, பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30

பகவான்-கீதாபாலி நடித்த

நல்ல-பிள்ளை

[தமிழ்]

வெற்றி முரசு கொட்டும் 2-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்ப்பாணம்) போகம்பரை (கண்டி)

இன்று காலை 10-00 மணிக்கும், மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்
நாளை மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்

கே. ஆர். ராமசாமி, லலிதா, ராகினி, சாரங்கபாணி, ராமச்சந்திரன் நடித்த



கஸ்த்தூரி பிலிம்ஸ்

மே னா கா

சென்ட்ரல் (காவலப்பிட்டி) — இன்று மட்டும் 'அவுரத்' நாளை முதல் என்வீடு

ஜோதி (திருகோணமலை) — இன்று மட்டும் பூட்பொலிஷ் நாளை முதல் 'காதல்'

கிருஷ்ணை [காலி] — இன்று மட்டும் 'என் மகள்' நாளைமுதல் 'என்வீடு'

ஸ்டார் சினிமா [பதுளை] — மாலை 6, இரவு 9-30 மணி — மலைக்கள்ளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் இயற்கையும்:

செயற்கை மழை

மக்கள் நல்வாழ்வுக்கு மழை இன்றியமையாதது. மழையின்றேல் மக்கள் உயிர்வாழ்வது கஷ்டமாகும். பண்டைக்காலத்தில்—ஏன் இன்றும் மக்கள் இயற்கை மழையை எதிர் பார்த்து ஏங்குகின்றார்கள். உழவர்கள் நம் நாட்டில் உழைப்பையும்—பணத்தையும் வாரி நிலத்திற்கு இறைத்து மழையை நம்பி ஏமாற்றமும்—நஷ்டமும் அடைகிறார்கள். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்கள் தங்களுக்கு வேண்டிய மழையை விஞ்ஞானமூலமாகப் பொழியச் செய்கின்றனர். செயற்கை மழையினால் அந்நாடுகளில் தொழில் வளம் கொழிக்கக் காணுகிறோம். பலவகையில் பயன்படும் செயற்கை மழையை எப்படி விஞ்ஞான மூலம் பொழியச் செய்கின்றனர் என்று அறிய முன் இயற்கை மழை எப்படி உண்டாகிறது என்பதைக் கவனிப்போம்.

மழை பெய்வதற்கு முன் வானத்தில் அடர்த்தியான மேகங்கள் தென்படுகின்றன. இந்த மேகங்கள் கோடிக்கணக்கான மழைத் துளிகளாலானவை. இத்துளிகள் வானத்தில் மேலே செல்லச் செல்ல, சீதோஷ்ணம் குறைந்துபோய் இம் மழைத் துளிகள் இன்னும் குளிர்ச்சியடைந்து பனிக்கட்டிகளாக மாறும் சீதோஷ்ணத்தை அடைகின்றது. இத்துளிகள் இன்னுப் மேலே சென்று அதிக குளிர்ச்சி நிலையை அடைகின்றன. இங்கு சீதோஷ்ணம் 15°c ஆகும். இந்தச் சீதோஷ்ணத்தில். நீர்த்துளிகள் பனித் துண்டுகளாக பரிமாணத்தில் பெருக ஆரம்பிக்கின்றன. இவை பின்பு மெதுவாகக் கீழே இறங்க ஆரம்பித்து, மேகத்திற்குக் கீழே பெரிய பெரிய நீர்த்துளிகளாக மாறி, மழையாகப் பொழிகின்றன.

வானத்தில் மேகம் இருந்து மழை பெய்யாததற்குக் காரணம் என்ன? மேகங்களில் மழைத் துளிகள் அதிகமாக இல்லாமல் இருப்பதும், அவைகள் இருந்தாலும் அதிக குளிர்ச்சியடைவதற்கு போதிய சீதோஷ்ணம் இல்லாமலிருப்பதும்தான் காரணம். இந்த மேகங்களுக்கு மழை பெய்வதற்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்து மழை பெய்யும்படி செய்வதுதான் செயற்கை மழை உண்டாக்குவதின் தத்துவமாகும்.

முதல்முதலில் லக்மூர் என்ற விஞ்ஞானி ஈரமற்ற பனிக்கட்டி எனப்படும் கட்டியான கரியமல வாயுவை (Solid carbondioxide) உபயோகித்து மழை பெய்யச் செய்யலாம் எனக் கண்டு பிடித்தார். இந்தக் 'கார்பன்டை ஆக்ஸைடை'—80°cக்குக் குளிர வைத்தால் அது திட ரூபத்தில் துளிகளாக மாறும். இதை மேகத்தில் தூவியதும் புகை போலப் பரவி நுண்ணிய ஸ்படிகங்களாக (Crystals) மாறுகின்றன. இவைகள் மேல் எழுந்து, குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் பெரிதாகி மழையாகப் பெய்கிறது.

வானத்தில் மைலுக்கு 10முதல் 15 ரூத்தல் ஈரமற்ற பனிக் கட்டியைத் தூவிப் பின் மேகத்தின் ஒரு பக்கமாக விமானத்தில் சென்று ஏற்படும் மாறுதல்களை விஞ்ஞானி லக்மூரும் அவரின் ஆராய்ச்சியாளர்களும் கவனித்தனர். ஒருசிலர் கீழேயிருந்து கவனித்தனர். இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட மேகங்கள் தரைமட்டத்திற்கு மேல் 12000 அடி உயரத்தில் காணப்பட்ட மெல்லிய மேகங்களாகும். ஈரமற்ற பனிக் கட்டிகளைத் தூவிய 15 நிமிடங்களுக்குப் பின் நீர் உறைய ஆரம்பித்தது. பின் அவைகள் மேல்நோக்கிச் செல்ல ஆரம்பித்து 20 நிமிடங்களுக்குப் பின் பனித் துளிகள் உண்டாகி, கீழே இறங்கி 25 நிமிடங்கள் பின் நீர்த் திவலைகளாக மாறுவதை 'தொலைநோக்கி' மூலம் கண்டார்கள். பின் இவைகள் தரைமட்டத்தை துளிகளாக அடைந்தன. மேகத்தின் மேல் சீதோஷ்ணம்-7°c முதல்-15°c வரை இருந்தால் உடன் மழை

என். பி. கே. லிங்கம்

பெய்யுமெனக் கண்டனர். 300 ரூத்தல் ஈரமற்ற பனிக் கட்டிகளை உபயோகித்தால் 30,000 அடிக்குக்கூட அவைகள் உயர எழும்பும் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த முறையால் அரை அங்குல மழை பெய்யச் செய்யலாம் எனக் கண்டார்கள்.

அமெரிக்காவிலும் செயற்கை மழை உண்டாக்குவதைப்பற்றி ஆராய்ச்சி நடத்திவருகின்றனர். அங்கு பனிக் கட்டிக்குப் பதிலாக சில்வர் காடியத்தை (Silver iodide) உபயோகிக்கலாம் என கண்டுபிடித்தனர். இதைக்கூடச் சேகரித்து வைப்பதும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதும் சுலபமாகும். ஆனால் இது விலை கூடிய பொருளாகும்.

நம் நாட்டிலும் வருடங்களாக நம்மைப் பார்த்து ஏமாற்றிச் செல்லும் மேகங்களை அடக்கி மழை பெய்யச் செய்திருந்தால் நம் வீடுகளெல்லாம் உணவுக்களஞ்சியமாக மாறியிருக்கும். செயற்கை மழைதான் நம் நாட்டில் எப்போது தான் பெய்யுமோ?

மாயவர் மன்றம்

பத்திரிகையின் பயன்

முற்காலங்களில் பத்திரிகை என்றால் மக்கள் துட்டுக்கு எத்தனை பலம் என்று கேட்பார்கள்! ஆனால் இன்று மாணவர்களும் பெரியோர்களும் 'பத்திரிகை' என்ற சொல்லைக் கேட்டமாத்திரத்திலே பரபரப்புடன் பார்க்கிறார்கள். ஆர்வத்துடன் படித்து பயன் காணுகின்றார்கள். வாசகசாலைகளுக்குப் போனால், எண்ணற்ற பத்திரிகைகளை இலவசமாக படிக்க முடிகிறது. இன்றைய மாணவர்கள் தின இதழ், வார இதழ், திங்கள் இதழ் ஆகிய தீந்தமிழ் பத்திரிகைகளை வரவேற்று விரும்பிப் படிக்கின்றனர்.

முன்பெல்லாம் மாணவர்கள் காலையில் எழுந்திருந்தும் கடவுளை கும்பிட்டனர். ஆனால் இன்றோவெனில், மாணவர்கள் அதிகாலையில் துயிலெழுந்ததும் அறிவுலகச் செய்திகளை தாங்கிவரும் செய்தி தாள்களின் முகத்திலே விழிக்கின்றார்கள். எத்துணை பெரிய மாறுதல்களை பத்திரிகை ஏற்படுத்திவிட்டது! ஒரு நாளைக்கு செய்தித்தாள் பார்க்காவிட்டால் எதையோ பரிகொடுத்தவர்கள் போல் திகைக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள நாட்டிலே நடக்கும் செய்திகளை நமக்கு உடனுக்குடன் சுடச்சுட தருகின்றது. அல்லது மறுநாள் அறிவித்துவிடுகிறது. ஆனால் பண்டை நாளில் பல மாதங்கள் சென்றாலுங்கூட தூரத்துச் செய்திகளை அறியவே முடியாதாம்!

ந. அபூர்வம்

முதன்முதலில் பத்திரிகை வெனிஸ் நகரத்திலே தோன்றிற்று! 1633ம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தில் "பப்ளிக் இன்டெலிஜன்ஸ்" என்னும் பத்திரிகை வெளி வந்தது. "இந்தியகெஜட்" என்ற பத்திரிகை இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பெற்றது. இன்றுதினம் பறவைகளைக் கூட எண்ணி விடலாம். இந்தப் பத்திரிகைகளின் தொகையை கணக்கிட இயலாதுபோல் தெரிகிறது! நல்ல கருத்துடைய நல்லறிவாளர்களால் நடத்தப்படும் சில பத்திரிகைகளை எடுத்துக் கொள்வோம். பல நாட்டுச் செய்திகளையும் ஆங்காங்கே நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளையும் தெரிவிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது மக்களின் அறிவுவளர்ச்சிக்கு உருதுணை செய்திடும் இன்சுவை கவிதைகளையும்-எழுச்சிவூட்டும் மொழி இயல் அரசியல் கட்டுரைகளையும் தொடர் நவீனங்களையும் பிரசுரித்து மக்கள் மனதை இன்புறச் செய்கின்றன. அத்தோடு, கலை, மதம், நாடகம், திரைப்படக் காட்சி விமர்சனம் நாட்டியம், அரசியல், சட்டம், வேதாந்தம், சித்திரம் முதலிய பல அரிய அம்சங்களைகொண்டு அறிவைப் பெருக்கிடும் பத்திரிகைகளும் தோன்றியுள்ளன. அவற்றிலே சில இதழ்கள் "மாணவர் மன்ற" ங்களை துவக்கி மாணவர்களை எதிர்கால எழுத்தாளர்களாக ஆக்கிட துணை செய்கின்ற பெருந்தன்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

பத்திரிகையின் பயனால் உலகச் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடிகிறது எனக் கண்டோம். வானொலியும் செய்திகளை விரைவில் அறிவிக்கும்..... பத்திரிகையும் சில மணி நேரம் அல்லது மறுதினத்

(13-ம் பக்கம் பார்க்க)

கணப் பொழுதுக் கதை:

கொடைவள்ளல் கோதண்டராமன்

பிச்சைக்காரர்கள் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே பீதியடைபவர்கள் பலர். எங்கே தங்களது சட்டைச் சாக்குகளில் இருக்கும் ஒரு சில சில்லறை நாணயங்களுக்குப் பிரியாவிடை சொல்லி, அவற்றை அந்தப் பிச்சைக்கார அன்பர்களுக்குத் தானம் செய்யவேண்டி நேரிடுமோ என்ற காரணத்தாலேயே பயமடைவார்கள் அவர்கள். ஆனால் கோதண்டராமன் இவற்றிற்கெல்லாம் விதிவிலக்கானவர். பிச்சைக்காரர்கள் என்றால் நம்மைப் போல் அவ்வளவு கசக்காது அவருக்கு. ஏனெனில் அவரது தகப்பனார் தமது காலத்தில் அந்த ஊரில் "கொடைவள்ளல்" எனப் பெயர்பெற்றிருந்தார். தந்தையின்பெயரைக் காப்பாற்ற தனயன் கோதண்டராமன் அவரது அடிச்சுவடுகளை பின்பற்ற ஆரம்பித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கோதண்டராமன் வீட்டில் ஏகப்பட்ட பிச்சைக்காரர்கள் கூட்டமாகவிருக்கும். அன்றையத்தினம் ஆபீஸ் இல்லாததால் பகல் முழுவதும் அவர் தமதுவீட்டு வெளி விறுந்தாவில் ஓர் நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்திருப்பார். அவர் அருகே ஓர் தட்டு நிறைய நாணயங்கள் பிச்சைக்காரர்களின் வருகையை எதிர் நோக்கி ஏங்கிக் கிடக்கும்!

பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவராக 'கியூ' வரிசையில்வந்து தத்தம் தட்டுக்களை நீட்டியதும் ஒவ்வொரு நாணயமாக எடுத்து தட்டுக்களிலே போடுவார் கோதண்டராமன். அதைத் தொடர்ந்து அந்த ஏழை ஆத்மாக்கள் அந்தக் கொடைவள்ளலது பரோபகார சிந்தையை யிட்டு வாயார வாழ்த்தும் காட்சி மிக உருக்கமுள்ளதாகவிருக்கும். கோதண்டராமனது உள்ளமும் குளிரும்.

அன்றுவந்த பிச்சைக்காரர் கூட்டத்தினைட்டையே வழக்கமாகவரும் குருடன் கறுப்பனைக் காணவில்லை. அவனுக்குப் பதிலாக அவனது தட்டைக் கைகளில் ஏந்தியவாறு அங்கு நின்று கொண்டிருந்தான் வேறொரு புது குருட்டுப்பிச்சைக்காரன். வழமைபோல் ஓர் நாணயத்தை எடுத்து அவன் நீட்டிய தட்டில் வீசினார் கோதண்டராமன். ஆனால்

ரீ. பாக்கியநாயகம்

நாணயம் தவறி கீழே தரையில் விழுந்தது. அதை எடுத்து அந்த அப்பாவிக் குருடனது தட்டில் மீண்டும் போட்டுவிட எழுந்தார் அவர்.

என்ன ஆச்சரியம்! அந்தப் புதுக்குருடன் 'சட்' டென்று குனிந்து தரையில் விழுந்த நாணயத்தை எடுத்துத் தனது தட்டிற் போட்டுக் கொண்டான். 'என்னப்பா, உனக்குக் கண்தெரியும் போலிருக்கே" என்றார் கோதண்ட ராமன் அவனைப் பார்த்து.

"ஆமாங்க, இங்கு வழக்கமாகவருவானே கறுப்பன் அவனில்லீங்க நான். கறுப்பனுக்கு இன்று இங்குவர வசதிப்படவில்லை ஸார்" என்றான் அவன் கண்கள் இரண்டையும் திறந்தபடி.

"ஏன், கறுப்பனுக்குடம்புக்கு ஏதுமோ?" என்று மிக அக்கரையுடன் விசாரித்தார் கோதண்டராமன். அவருக்கு அந்த உண்மைக்குருடன் கறுப்பன்பால் இரக்கம் ஏற்பட்டிருந்தது.

"இல்லீங்க. இன்றைக்கு எல்பின்ஸ்டன் தியேட்டரில் ஒரு புதுப்படம்நடக்குதாம். அந்த 'மெட்னிஷோ' வுக்குத்தான் கறுப்பன் போயிருக்கானுங்க. அதுக்காகத்தான் இன்று அவனுக்குப் பதிலாக என்னை இங்கு அனுப்பினான். நாங்கரெண்டு பேரும் ஒரு இடத்தில்தானுங்க குடியிருக்கோம்" என்றான் அந்தப் பிச்சைக்காரன்!

கொடைவள்ளலது முகத்தில் ஈயாடவில்லை. அவர் உள்ளத்தில் கோபத்தின் ஜுவாலைகள் கொழுந்துவிட்டெரிந்தன. பிச்சைக்காரர்களுக்கு கொடை வழங்கும் அந்தப் பரம்பரை வழக்கத்தை அன்றிலிருந்து கைவிட்டார் கொடைவள்ளல் கோதண்டராமன்!



நீரில் விழுந்து தத்தளிப்பவரை மீட்கக்கூடிய ரீதியில் ஹெலிகப்டர் விமானமொன்றுடன் ரப்பர் படகொன்றை இணைத்துள்ளார்கள். பிரிட்டிஷ் கப்பல் படைக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த ஹெலிகப்டர் தொடர்பான மேலதிக விபரம் அடுத்த படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

ஒன்றுபட்ட தமிழினம் ஒருமித்த கோஷம் எழுப்பட்டும்

தமிழன் தலை நிமிர்ந்து வாழ இதுவே பாதை என்கிறார் கலைஞர் சண்முகம்

"தமிழராகிய நாம் அனைவரும் இஸ்லாமிய கிறிஸ்தவ இந்து மத வேறுபாடு இன்றி ஒரே குரலில் நாம் தமிழினம், நம்மில் வேற்றுமை இடையாது நாம் ஒன்றுசேர்ந்துவிட்டோம் என்ற ஒரே கோஷம் செய்வோமாயின், தமிழினம் பெருமையடையும், தமிழராய் நாம் தரணியில் தலைநிமிர்ந்து வாழலாம்."

"கலை வளர்ப்பதை ஒவ்வொரு தமிழனும் தங்கள் தங்கள் உரிமையாகக்கொள்ள வேண்டும். சிதறி நிற்கும், தமிழகத்தை, தமிழர்களை ஒன்றுபடுத்த, ஒருமனத்தாக்க, பண்டையத் தமிழகம்போல் பெருமையுடன், வீரத்துடன் வாழ, தமிழ்க் கலைகளே சிறந்த சாதனம். அத்தகைய தமிழ்க் கலைகளை வளர்த்து வளமுடையதாக்க ஒவ்வொரு தமிழனும் முன் நிற்க வேண்டும்."

இவ்வாறு திருகோணமலை இந்துக் கல்லூரி கலை மன்றத்தினர் கலைஞர் திரு டி. கே. சண்முகத்திற்கும் அவரது கோஷ்டியினருக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது திரு சண்முகம் பேசுகையில் கூறினர்.

சமீபத்தில் திருகோணமலைக்கு விஜயம் செய்த கலைஞர் சண்முகம் கோஷ்டியினருக்கு இந்துக் கல்லூரி மைதானத்தில் பிரத்தியேகமாய் அமைத்து அலங்கரிக்கப்பட்ட மேடையில், கல்லூரி அதிபர் திரு அம்பலவாணர் தலைமையில் இவ்வரவேற்பு விழா ஆரம்பமாகியது. சைவப் புலவர் திரு வடிவேலின் பிரார்த்தனைப் பாடல்களின் பின் பண்டிதர் ஐ சரவணமுத்து நாடகக் கலைஞர்களை வரவேற்றுப் பேசினர்கள். டி. கே. சகோதரர்கள் நாடகத்தின்மூலம் பண்பட்ட தமிழகத்தை உண்டாக்க பாடுபட்டுவரும் சிறந்த சேவையை பாராட்டினர்கள். தலைமையுரை நிகழ்ந்தபின் கலைஞர் திரு டி. கே. சண்முகம், திரு டி. கே. பகவதி, திரு சிவதாணு ஆகியோர் பேச்சுகள் நிகழ்த்தினர்கள். சபையோர் வேண்டுகோளுக்கிணங்கி திரு சண்முகம் "பெருமை கொள் வாய் தமிழா" என்னும் பாடலை பண்ணுடன் பாடி அவையோரை பரவசப்படுத்திய பின் திரு ச. ஜயசந்திரனின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

தோட்டப் பாடசாலைகளில் சைவ சமய பாடப் பரீட்சை

மடுவகொல்லையில் கொழும்பு விவேகானந்த சபையாரால் கடந்த 4-10-55-ல் நடாத்திய சைவ சமய பரீட்சையில் தோட்டப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் பின்வருமாறு:

கீழ்பிரிவு 1.

குயின்ஸ்பெரி; (1) சே. தங்கராசா.

மாவுசா: (1) மு. சுப்பிரமணியம் (2) பொன்னர்.

ஆரம்ப பிரிவு: II

குயின்ஸ்பெரி: (1) மு. செல்லையா (2) வி செல்லையா (3) நவநாதன் (4) மு. பெரியசாமி (5) க. பட்டாய் (6) அ. பெரியக்கா.

மவுசா: (1) க. அழகர்சாமி (2) பெ. இரத்தினம் (3) க. மாடசாமி (4) ச. பரமேஸ்வரி (5) த. பார்வதி (6) க. பொன்னம்மா.

கல்கீரியா: (1) பெ. அழகர் (2) தே. இராமநாதன் (3) கா. சண்முகம் (4) அ. சம்சுதீன் (5) கா. செல்வத்துரை (6) சோ. நாராயணன் (7) பழனியாண்டி (8) மு. பெரியசாமி (9) மு. செல்வம் (10) பெ. தனலட்சுமி

முகலை நடுக்கணக்கு: (1) ம. மகேசன் (2) அ. கருப்பையா (3) ஆ. சண்முகம் (4) மா. சிங்காரவேலு (5) ஓ. சிதம்பரம் (6) கா. சுந்தரலிங்கம் (7) செல்லையா (8) சி. சொக்கலிங்கம் (9) அ. புத்திரசிகாமணி (10) ஆ. பெருமாள்.

மறுமலர்ச்சி மன்றம்

திருகோணமலை மறுமலர்ச்சி மன்றத்தின் செயற்குழு கூட்டம் சென்ற 2-3-55ல் மன்றப் படிப்பகத்தில் திரு. நெல்லைநேசன் தலைமையில் கூடியது. அவ்வமயம் படிப்பக வளர்ச்சி பற்றி பல தோழர்கள் பேசியபின் மன்றப் பொருளாளரால் கடந்த வருட கணக்குகள் வாசிக்கப்பட்டு செயற்குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்து நடப்பு வருடத்திற்கான தேர்தல் நடைபெற்றது. திரு. இரா. சச்சிதானந்தன் செயலாளராகவும், திரு. எம். கிருஷ்ணபலம் துணைச் செயலாளராகவும், திரு. எம். ஜோசப் பொருளாளராகவும், திரு. மு. அசன் துணைப் பொருளாளராகவும் மேலும் பதினைந்து அங்கத்தவர்கள் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

நானுஓயா தோட்ட இ. தி. மு. கழகம்

நானுஓயா தோட்ட இலங்கை திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது ஆண்டு நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம்சென்ற 6-3-55ல் தோட்டக்கோவில்முற்றத்தில்திரு. செ பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றது.

ஆண்டு அறிக்கையைச் செயலாளரும், வரவு செலவுக் கணக்கை பொருளாளரும் படித்துக் காட்டியபின் நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலாளர்: திரு ப. சுப்ரமணியம், விளம்பர உறுப்பினர்: செ. க. கந்தையா, பொருளாளர்: சி. செல்லையா, செயற்குழு உறுப்பினர்கள்; திருவாளர்கள் செ. க. சுப்ரமணியம், மா. முத்துசாமி, ஆறுமுகம், மு. செல்லன், மா. பொன்னன், செ. வே. செட்டி, இரா வி. சிவனு, சோ. பாலகிருஷ்ணன், பொ. மருதைமுத்து, ப முத்துசாமி.

திருவாளர்கள் இரா. வி. சிவனு, ப. சுப்ரமணியம், வீ. ராமு, வீ. நல்லையா, செ. க. கந்தையா, மு. சந்தனம் முதலியோர் கூட்டத்தில் பேசினர்கள்.

கலைவளர்ச்சி மன்றம்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக சார்பாக சென்ற 27-2-55ல் கழக பணிமனையில் தோழர் டி. இராசன் தலைமையில் "கலை வளர்ச்சி மன்றம்" அமைக்கப்பட்டது. தோழர் எம். ஐ. இராசமணி தலைவராகவும், தோழர் ஏ. எஸ். மணவைத்தம்பி செயலாளராகவும், தோழர் எஸ். கே. முகைதீன் பொருளாளராகவும் மற்றும் 20 பேர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சாம்பற்றீவு கிராமச் சங்கம்

சாம்பற்றீவு கிராமச் சங்க அங்கத்தவர் தெரிவு சென்ற 1-3-55ல் நடாத்தப்பட்டது.

1ம் வட்டாரம் செல்லிக்கு அ. பொன்னுத்துரையும், 3ம் வட்டாரம் மாங்கனுய்க்கு சி. மயில்வாகனமும் 4ம் வட்டாரம் மாங்கனுய்க்கு நா. தம்பிராசாவும் 5ம் வட்டாரம் செம்பாட்டிற்கு க. சி. சுப்ரமணியமும் 6ம் வட்டாரம் செம்பட்டிற்கு இ. நடராசாவும், 8ம் வட்டாரம் சாம்பற்றீவுக்கு மு. அம்பலமும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர். எஞ்சிய 2ம் வட்டாரம் செல்லிக்கும் 7ம் வட்டாரம் செல்லிக்கும் போட்டிகள் இருந்தபடியால் தெரிவு நடைபெறவில்லை.

மாணவர் கலாவிருத்திச் சங்கம்

தலாத்தோயா அரசினர் மத்திய பாடசாலைத் தமிழ் ஆரம்ப பிரிவு மாணவர் களின் கூட்டமொன்று 4-3-55ல் திருமதி பொ. நடராசா ஆசிரியை தலைமையின்கீழ் செல்வி ஆர். விஜயலட்சுமின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமானது.

அத்தருணம் கௌரவ காரியதரிசி செல்வி எம். சரஸ்வதியால் சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டுச் சபையோரின் அனுமதிபெற்றது. பின்னர் செல்வன் பரமானந்தன் "அரசனின் பேராசை" என்னும் விஷயம்பற்றிப் பேசினர். பின் 5ம் வகுப்பு பெண் பிள்ளைகளால் "எங்கள் தமிழ் மொழி" என்னும் பாட்டை இசையுடன் பாடினர். செல்வி பா. கமலம் "மகாத்மா காந்தி" என்னும் விஷயத்தைப்பற்றி விரிவாகப் பேசினர். பின்னர் கே. சிவகுருநாதன் "மாலைப் பொழுது" என்னும் விஷயம்பற்றி பேசினர். பின்னர் மாணவர் குறிப்புரை நடந்ததும் திரு. வி. குருசாமி ஆசிரியர் மாணவர் முன்னேற்றம் அடைய ஏதுவான வழிகள் என்னும் விஷயம் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

மருதமுனை மடம் சன சமூக நிலையம்

மேற்படிசங்கத்தின்15வது வருடாந்தக் கூட்டம் ஒன்று சென்ற 5-3-55ல் சங்கத் தலைவர் திரு. என். கே. அம்பலவாணர் தலைமையில் மேற்படி நிலையத்தில் கூடியது.

முதலாவதாக சங்கக் காரியதரிசி திரு வி. கே. கந்தசாமி சென்ற கூட்ட வரலாறும் வருடாந்த அறிக்கையும் வாசித்து சபை ஒப்புக்கொண்டதும் நடப்பு வருடத்திற்கான புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் போஷகராகத் திரு என். கே. துரையப்பாவும், தலைவராக திரு என். கே. அம்பலவாணரும், கூட்டுக் காரியதரிசிகளாக திரு. வி. கே. கந்தசாமியும் பி. வி. ஜெயசிங்கமும் கூட்டுத் தணிகாரிகளாக திரு. கே. ஏ. ஜெகநாதனும் திரு கே. தம்முத்துரையும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சேதவத்தை இ. தி. மு. க. கிளை

இ. தி. மு. க. சேதவத்தை கிளையின் முதலாவது ஆண்டு விழா வரவு செலவு கணக்கு கடந்த 6-3-55ல் திரு பி. என். சேரன் தலைமையில் கூடிய செயற்குழுவில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜமாஅதே இஸ்லாமி இலங்கை

கொழும்பு வேகந்தை பள்ளிவாயல் மைதானத்தில் ஜமாஅதே இஸ்லாமி (இலங்கை) ஆதரவின்கீழ் சென்ற 26, 27-2-55ல் இஸ்லாமிய வாழ்க்கைப் பயிற்சிக் கூட்டமொன்று நடைபெற்றது.

இஸ்லாத்தைப்பற்றிஅலங்கார ஆடம்பரங்களுடன் அழகாகப் பேசி காலத்தை வீணே கடத்தாது சொல்வது போன்றே செய்து காட்டல் வேண்டும்; அதற்கு முஸ்லிம் சமுதாயம் இஸ்லாமிய வாழ்வை வாழ்வதிலே தம்மைப் பயிற்றுவித்துப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டிய தவசியம்; இந்நோக்குடனே இப்பயிற்சிக் கூட்டம் நடைபெறுகின்றது என்று ஜமாஅதே இஸ்லாமியின் தலைவர் ஜனுப் எம். ஏ. சி. ஜெய்லானி கூட்டத்தின் முடிவுரையில் கூறினர்.

இ. தி. மு. க. பொரளை கிளை

இ. தி. மு. க. பொரளை கிளையின் மாதாந்திர செயற்குழு கூட்டம் சென்ற 5-3-55ல் அதன் பணிமனையில் தோழர் காயம்பு தலைமையில் கூடியது. அது போது கழக வளர்ச்சியைப் பற்றி ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ட்ப்பட்டது.

பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) கவிஞர் கண்ணதாசனின் தந்தையார் இயற்கை எய்தியமைக்கு கிளை தன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது. (2) விருதை தி. மு. க. முக்கிய தோழரான திரு எம். எஸ். பி. பெரியசாமியின் மறைவுக்கு கிளை தன் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

அம்பாள் சனசமூக நிலையம்

பண்ணுகம் வடக்கு அம்பாள் சனசமூக நிலைய வீரர் கட்கும், சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த வீரர்கட்கும் கடந்த 27-2-55ல் நடந்த கைப்பந்தாட்டப் போட்டியில் அம்பாள் சனசமூக நிலைய வீரர்களே வெற்றியீட்டினர். இருபக்க வீரர்களும் வெகு விறுவிறுப்பாக விளையாடினர். வெற்றி அம்பாள் சனசமூக நிலைய வீரர்களே பெற்றனர்.

தமிழ் ஐக்கிய விளையாட்டுச் சங்கம்

தமிழ் ஐக்கிய விளையாட்டுச் சங்கக் கூட்டம் நுவரெலியா சிவகிரி ஹோட்டலில் 3-3-55ல் திரு. சுந்தரலிங்கம் தலைமையின் கீழ் நடைபெற்றது.

கீழ்காணும் நபர்கள் இவ்வருட நிர்வாகிகளாக தெரிவு செய்தார்கள்.

திரு விஜயசுந்தரம் காரியதரிசி, திரு பூசோ கால்பந்தாட்ட கெப்டன், திரு சலீம் கிரிக்கெட் கெப்டன், திரு. சுயம் பிரகாசம் கைப்பந்தாட்டக் கெப்டன், திரு. விசுவேசு விளையாட்டுப் பகுதிகாரியதரிசி, திரு ரபிக் தணிகாரி.

கூட்டத்திற்குப்பின்தேநீர் விருந்து நடைபெற்றது.

அனுராதபுரம் தமிழ்க் கழகம்

அனுராதபுரம் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் முத்தமிழ்க் கலா இரத்தினங்கள் டி. கே. சண்முகம் சகோதரர்களும் அவர்களுடைய நாடகக் குழுவினர்களும் நாடகக் கலை வளர்ச்சிக்குச் செய்து வரும் பெருந்தொண்டினைப் பாராட்டும் பொருட்டு அனுராதபுரம் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் 3-3-55 அனுராதவுரம் விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் கழகத் தலைவர் திரு எஸ். பி. சிவபாதம் தலைமையில் ஒரு வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது.

இறுதியில் கழகச் செயலாளர் திரு வி. எஸ். சுப்ரமணியம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

திருவள்ளுவர் கழகம்

"தமிழர் தமிழ்மறையாகிய பொதுமறையை எவ்வளவுதூரம் வளர்த்து செயல்படுகின்றார்களோ அவ்வளவு விரைவில் உலகம் அதன்வழி நடக்கத் தொடங்கும் என்பதில் ஐயம் இல்லை" என திருகோணமலை திருவள்ளுவர் கழகத்திற்கு விஜயம் செய்த ஒளவை திரு சண்முகம் தமிழ்மறை திருக்குறளைப்பற்றிக் குறிப்பிட்டார்.

ஒளவை திரு சண்முகம், திரு டி. கே. சண்முகம், திரு டி. கே. பகவதி நகைச்சுவை நடிகர் திரு சிவதாணு முதலியோர் இம்மாதம் 4ம் திகதி திருவள்ளுவர் கழக ஆட்சிக் குழுவின் வேண்டுதலை ஏற்று கழக நிலையத்திற்கு விஜயம் செய்தனர். அச்சமயம் திருவள்ளுவர் கழக செயலாளர் திரு இ. சுப்பிரமணியம் யாவரையும் வரவேற்றார்.

இன்னிசை விருந்து

மகறகம அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ் நாடக சபையின் ஆதரவில் 1-3-55ல் திருமதி இலட்சுமி நாராயண ஐயரவர்களும் அவரது புத்திரிகள் செல்விகள் சுப்புலட்சுமி பரகநாயகி ஆகியோரும், தனையன் பன்னிரு வயதுச் சிறுவன் வைத்திய நாதனும் ஓர் அரிய இன்னிசை விருந்து அளித்தனர்;

எஸ். பி. எஸ். பதிமருந்து

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய மிகச் சிறந்த சஞ்சிவி

தலைவலி, ஜலதோஷம், அஜீர்ணம், வயிற்றோட்டம், வயிற்றுவலி, பசியின்மை, இழுப்பு, ஜன்னி, எல்லாவித வாதரோகங்கள், ஜுரம் இருமல் முதலிய சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

உபயோக விபரம் மருந்துடன் வைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1-00 தபால் செலவு வேறு

இலங்கை சோல் ஏஜெண்டுகள்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34ம் நிர். செட்டியார்தெரு, கொழும்பு-11.
போன்: 6084.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான 3வது வாரம்!

காமினி (கொழும்பு) குயின்ஸ்லன் (நுககொடை) வெம்பிளி (கண்டி)

இன்னும் பல திரைகளில்

இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

அசோகா

மிஸ் புஷ்பாஜனட், சுமதிபிபிலே,
மிஸ் பிரேமகாந்தி, ஆனந்த வீரக்கூன்
முலியோர் நடித்தது.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) சபையர் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்டுவந்தபடம்
இதோ வந்துவிட்டது!

கவிதா மன்னன் மனோகரனின் கவிதை களைச் சுவைக்க ரசிகர்கள் முன்வரவில்லை. காரணம் புகழில்லை. அது மட்டுமா? பைத்தியகாரப் பட்டம் வேறு. மனோகரனின் பைத்தியத்திற்குப் பரிகாரம் காவேரி— வெறும் பட்டிக்காட்டுப் பத்தாம்பசலி.

கலை, கலையை நாடும். அவ்வாறே சித்ராவும் மனோகரும் ஒருவரை யொருவர் நாடினர். இல்லற ஜோதி வீட்டிலிருக்க சித்திரா மனோகரின் இதய ராணியாகிறாள். மனோகரனுக்கு வேண்டியது கலை — காவேரிக்கு வேண்டியது கைப்பிடித்த கணவன்; சித்ராவுக்கு?

இவைகளுக்குவிடை வெள்ளித்திரை பதிலிறுக்கும்

மொடேர்ன் தியேட்டர்ஸ்

இல்லறஜோதி

நட்சத்திரங்கள்: சிவாஜி கணேஷன், பத்மினி, ஸ்ரீ ரஞ்சனி.

கதை, வசனம், பாட்டு;
கண்ணதாசன்

சங்கீதம்;
ராமநாதன்

பின்னணி:
லீலா, ஜிக்கி, ராஜா முதலியோர்

டைரக்ஷன்;
டி. ஆர். சுந்தரம்.

மைலன் தியேட்டர் [கொழும்பு]

சிவாஜி கணேசன், ராஜகுமாரி,
ராஜேந்திரன், கிரிஜா, கண்ணம்பா நடிக்கும்

மனோகரா

கதை வசனம்: மு. கருணாநிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 192/1 இலக்கத்தில் சுதந்திரன் பத்திரிகாலயம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டச்சுப்பதிப்பாசிரியர் வி. சிவபாதசுந்தரம் அவர்களால் பதிப்பித்து 1955 மார்ச் 20ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது